www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
K. JUDE
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ரூபா 12/00
ஏப்.11-17,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 304

## புலிகளின் விரிந்து வரும் இரகசிய மையங்கள்! நாடு தழுவிய அச்சுறுத்தல்!



## தானுவுக்கு அஞ்சலி

## முகாம்கள் சுற்றிவளைப்பு மர்மம்?



## ஆண்கள் பச்சைத் துரோகிகள் உளர்மிளா பரபரப்பான பேட்டி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## தேடுதல் நாடகம்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

வவுனியாவில்
மூன்று தமிழ்க் கட்சிகளது
முகாம்களில் தேடுதல்
வேட்டை நடத்தப்பட்டுள்ளது!

முன்கூட்டியே
இந்த இயக்கங்களுக்கு
அறிவித்துவிட்டே
தேடுதல் மேற்கொள்ளப்பட்டது!

இந்த உண்மை
அரச பத்திரிகையிலும்
எப்படியோ இடம் பெற்று
விட்டதுதான் ஆச்சரியம்!

சர்வதேச மனித உரிமை
அமைப்புக்களை
திட்டமிட்டு ஏமாற்றும்
நாடகமே இதுவாகும்!

வவுனியாவில் உள்ள
தமிழ்க் கட்சிகள்மீது
சர்வதேச மன்னிப்புச்சபை
பாரிய புகார்களை
எடுத்துக் கூறியுள்ளது!

மே மாதத்தில் பாரிசில்
இலங்கைக்கு கடன்வழங்கும்
நாடுகளது மாநாடும்
நடைபெற உள்ளது!

எனவேதான்
செம்மணி நாடகமும்
மேலும் பல
மனித உரிமை அக்கறை
நாடகங்களும்
அரங்கேற ஆரம்பித்துள்ளன!

"வவுனியாவில்
தமிழ்க் கட்சிகளை
அரசுதான் அத்துமீறல்களுக்கு
அனுமதிக்கிறது" என்ற
குற்றச்சாட்டு எழுந்துள்ளது!

அக் குற்றச்சாட்டை
பொய்யாக்க
அருமையான நாடகம்
அரங்கேற்றப்பட்டுள்ளது!

தமிழ்க் கட்சிகள்
தமது முகாம்களில்
யாரையாவது தடுத்து வைத்திருந்தால்
அவர்களை மறைப்பதற்கு
தேவையான அவகாசம்
வழங்கப்பட்டிருக்கிறது!
அதன் பின்னரே தேடுதல்
வேட்டை நடந்துள்ளது!

வவுனியாவில்
தமிழ்க் கட்சிகள் சிலவற்றால்
பாதிக்கப்படுபவர்கள்
தமிழர்கள்தான்!

வவுனியாவில்
தமிழர்களை கண்காணிக்க
அக் கட்சிகளது உதவி
படையினருக்கும் தேவை!

எனவேதான்,
அங்குள்ள தமிழ்க் கட்சிகளை
மனித உரிமை மீறல்களில்
அகப்பட்டுக்கொள்ளாமல்
பாதுகாப்பதில்
சீருடைத்தரப்பும்
சிரத்தை காட்டியுள்ளது!

ஆனால், சில வருடங்களுக்கு
முன்பாக–திருமலையில்
சிங்கள நில அளவையாளர்
ஒருவர் கொலையான போது
அங்குள்ள தமிழ்க் கட்சி
அலுவலகங்களுக்குள்
அனுமதியின்றிப் புகுந்து
தேடுதல் நடத்தப்பட்டது!

யாழ் குடாநாட்டில்
தலை வெட்டல் விவகாரத்தில்
தவிர்க்க முடியாமல்தான்
நடவடிக்கை எடுக்கப்பட்டது!
எனினும் இதுவரை
முக்கிய சூத்திரதாரிகளை
கைது செய்ய முயலவில்லை!

எனவே, இவையெல்லாம்
இந்த நாட்டில்
தமிழ் பேசும் மக்களது
மனித உரிமை தொடர்பான
அரசின் அணுகுமுறைகளில்
நம்பிக்கையீனங்களையே
உருவாக்கி வருகின்றன!

இதனிடையே
தமது முகாம்களை
படையினர் சோதனையிட்டதை
சில தமிழ்க் கட்சிகள்
வரவேற்றுள்ளன!

அரசியல் கட்சிகள்
என்ற வகையில்,
தமது முகாம்கள்
சோதனையிடப்பட்டமையை
இக் கட்சிகள்
கோபத்தோடு
கண்டித்திருக்க வேண்டும்!

"எங்களையும்
சந்தேகக் கண்கொண்டு
நோக்குவதா?
அவசரகால சட்டத்தை
எம்மீதே திருப்புவதா?"
என்று கேட்டிருக்க வேண்டும்!

ஒரு சாதாரண
தமிழ் பேசும் பிரஜைகூட
தன்னை சந்தேகத்தோடு
நோக்குவதை வெறுக்கிறான்.
கட்சிகளாக இருந்துகொண்டு
இவை எப்படி சகிக்கின்றன?!

தமது மனித உரிமை
மீறல்களை
மூடிமறைக்க உதவும்
தேடுதல் வேட்டையை
அவர்கள் ஏன்
கண்டிக்கப்போகிறார்கள்?

தமது நலன்கருதி
இவர்கள் வரவேற்கும்
இத்தகைய தேடுதல்கள்
ஒருகாலத்தில் இவர்களுக்கே
பாதகமாகும் என்பதும்
இவர்களுக்குப் புரியவில்லை!

மனித உரிமைகளைக்
காக்கும் அரசின்
அக்கறைக்கு
இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

■ ■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*
*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

# ஆன்மீகம்

## ஒரு சொல்

நல்லவர் இவர், தீயவர் இவர் என்று வேறுபாடு செய்யாமல் மெய்யுணர்வு பெற்றவர்கள் ஒரு வழியில் அமைதி அடைகிறார்கள். இன்றைய பொருளாதார நிலைபற்றியும், சமுதாய அமைப்புப் பற்றியும் கோணல் ஆராய்ச்சி செய்யாமல், ஒரு பற்றும் இல்லாமல் நேராக நோக்கினாலும், அவர்களைப் போல் உண்மையைக் காண முடியும்.

பொல்லாதவன், கொடியவன் என்று சிலரை சுட்டிக்காட்டி எல்லாத் தீமைகளுக்கும் அவர்களே காரணம் என்று, பழியை எல்லாம் அவர்கள் மேல் சுமத்துவது பொதுவான வழக்கம். அது பெரும்பான்மையான நாடகங்களும், காவியங்களும் காட்டிய மரபு. அவர்கள் ஏன் பொல்லாதவர்கள் ஆனார்கள்?, ஏன் கொடியவர்கள் ஆனார்கள் என்று உணர்வதே அறிவு நெறி. கருதியதை வலியுறுத்துவதற்கும் அறிவுதேவையில்லை. காரணம் கண்டு திருந்துவதற்கே அறிவு தேவை.

உலக வாழ்க்கையில் உள்ள திருத்தக்கூடியதானால் எல்லாரும் பொதுவாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு திருந்தவேண்டும். திருத்த முடியாததானால் ஒரு சிலருக்கு மட்டும் கொடியவர் என்ற பட்டம் சூட்டி எல்லாக் குற்றங்களையும் அவர்கள்மேல் சுமத்தி, அதன் விளைவாகக் கொடிய பூசல்களும், போர்களும் உலகில் தொடர்ந்து ஏற்படுமாறு வழிகோலிவிட்டு செல்ல வேண்டுமா?

கொஸ்லந்தை எஸ்.என். ராஜரட்னம்.



## அல்லாஹ்வின் திருப்தி

**மா**லிக் தீனார் என்ற பெரியார் ஒரு சமயம் ராபியத்துல் அதவிய்யா என்பவரை காணச் சென்றார். அப்பொழுது ராபியா முரடுப் பாய் ஒன்றில் சாய்ந்திருந்தார். தலையணைக்குப் பதிலாக செங்கல் ஒன்று அங்கு காணப்பட்டது.

இதனைக் கண்ணுற்ற தீனார் பெரிதும் வருந்தினார். "ராபியாவே! எனக்குத் தெரிந்த செல்வந்தர்கள் பலர் இருக்கின்றனர். நீங்கள் அனுமதித்தால் உங்களுக்கு தேவையானவற்றை அவர்களிடமிருந்து பெற்றுத் தர முடியும்!" என்றார் தீனார்.

இதைக் கேட்ட ராபியா மாலிக் "தீனரே நீர் பெரும் தவறிழைத்து விட்டீர். இவ்வுலகில் சகலரையும் படைத்து போஷிப்பவன் ஒரே அல்லாஹ்வேதான். அவன் ஏழைகளை அவர்களுடைய ஏழ்மை குறித்தோ, செல்வந்தர்களை அவர்களுடைய செல்வங்கள் குறித்தோ பாகுபாடு காட்டுவதில்லை.

அவன் என் நிலையை நன்குணர்ந்தவனாய் உள்ளான். அல்லாஹ்வின் திருப்தி எதுவோ அதனையே நான் விரும்புகிறேன்!" என்றார்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.301

### பரிசுக்குரிய கவிதை

## மனோதிடம் வேண்டும்

இடி மின்னல் கொடும் பாம்பு
மிருகங்கள் தீயோர்கள்
இவை கண்டு ஓடினால்
வாழ்வதெங்கே?
அணுவுக்குள் பெரும் சக்தி
உன்னுள் அளவிலா ஆற்றல்
மனமது திடம் கொண்டு
வருவதை எதிர் கொண்டு
வாழலாம் இங்கே!

பெரியண்ணா–வவுனியா.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### சந்தேகம்...

இது..
தவழ்வது அல்ல
தவளைப் பாய்ச்சல்
என்று
நினைத்தனரோ?

என்.எல்.முஸம்மில்,
புதிய காத்தான்குடி-06.



### சுற்றிவளைப்பு

சுற்றி வளைப்புத் தேடுதல் நடாத்தி
ஊரை வளைத்து வந்தவோர் நேரம்
ஊரில் சனங்கள் இல்லையடி-
ஊர்ந்து வந்ததோர் பச்சைக் குழந்தை!

கவிஞர் 'திக்கவயல்', அம்பாறை.

### இப்படியுமோ?

புதைத்துள்ள பொறி வெடியை
புலனாய்வு செய்வதற்கு
புது வழியைக் கண்டனரோ?
பாலகனாம் தமிழ் வளவன்
பயிலு தவழ் நடையதனில்!

நிஜந்திக்கா கனகசிங்கம்,
மட்டக்களப்பு.

### சுவீகரிப்பிற்கு முன்பு

இன்றே தவழ்கிறேன் நான்,
பன்னிரண்டாயிரம் ஏக்கர்
தாண்டி முடிக்க வேண்டுமே!

இ.கி.தினேஸ் கமல்–தும்பளை,
பருத்தித்துறை.

### ஏது பயம்

எல்லையில்லாத் தொல்லைகளைக்
கண்டு விட்ட பாலனுக்கு
எவ்வுருவைக் கண்டாலும்
எப்பயமும் வாராதே!!

எஸ்.விவேகானந்தன், தபாலகம், கல்குடா.

### (சே)சாதனை!

வீதிசோதனையில்,
தவழும் குழந்தையையும்,
தவறவிடாததல்லவோ-
எம் (சே)சாதனை!

சீ.குணதீபன்,-வஜிரபுர, நுவரெலியா.

### பயம் ஏது?

ஊரும் இல்லை
உறவும் இல்லை
நானிங்கு தனியே!
ஆயுதமாய்
யார் வந்தென்ன
பயமில்லை இனியே!

திருமதி ஜீவராசாகௌரி–
களுவாஞ்சிக்குடி.

### தமிழனா?.....

"நில்!
'ஐ.சி.' எங்கே?
'பாஸ்'ஐ எடு!"

காரைதீவு நிலாமதி.

### வவுனியா

இயக்க மோதல்.
இடையில் எப்படி நீ..?

விஜிபத்மநாதன்– நீர்கொழும்பு.

### சமம்

"எங்கள் ஆட்சியில்!
எல்லோரையும்
ஒரே மாதிரியே
நடத்துவோம்"

இரா.இராஜா,
நோத்கோ,
பொகவந்தலாவை.

### இன்றைய ஆட்சி

அராஜகத்தின்
முனையில்...
ஒரு
ஜனநாயகப்
பிஞ்சு!

மேகவாணி–
வெள்ளவத்தை.

# கவிதைப் போட்டி இல.304



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 17.04.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.304
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

*அன்பு முரசே,*

உனக்கு எழுதும் கன்னி மடல் இது. உனது படைப்புக்கள் அனைத்தும் மிகவும் சுவாரசியம் மிக்கதாகவுள்ளது. எமது பகுதியான பருத்தித்துறைக்கு முரசு வெளியாகி 10 தினங்களின் பின்பே வந்து சேர்கிறது உ+ம்:-முரசு 300 20.03.99 அன்றே கிடைத்தது. சில வேளைகளில் இன்னமும் பிந்துகிறது.

இப்படியும் ஒருவன் இருந்தானா? என மலைக்க வைக்கிறான் இடி அமீன். சதாம் உசேன் கதை எம்மையெல்லாம் உறுதி கொள்ளச் செய்கிறது. இலக்கிய நயத்தைத் தேனில் குழைத்து தரும் ரசிகனுக்கு பாராட்டுக்கள்.

தகவல் எப்படி எமது பொது அறிவிற்கு உரம் சேர்க்கிறது. முரசில் வரும் போட்டிகளின் இறுதி திகதியை மேலும் 10 நாட்கள் அதிகரித்தால் நாங்களும் ஆக்கங்களை அனுப்ப உதவும் என்பதை தாழ்மையுடன் தெரிவிக்கிறேன்.

ரி.வி. வாசுதேவன்,
பருத்தித்துறை.

நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் நீ தரும் 'டிசம்பர் பௌர்ணமி', 'தேன் கிண்ணம்' ஆகிய என்னைக் கவர்ந்து விட்டன.

எஸ்.றெஸியா
சறூக்,
தியதலாவ.

## என்ன செய்வார்கள்?



*இனிய முரசுக்கு,*

காணி சுவீகரிப்பு விடயத்தில் ஜனாதிபதி உத்தரவாதம் கொடுப்பார். தமிழ்க் கட்சிகள் வரவேற்கும் என்று நக்கீரன் கூறினார். ஜனாதிபதி நேரடியாக கூறாமல், வெறும் செய்தியாக வந்ததுக்கே தமிழ்க் கட்சிகள் வரவேற்று அறிக்கை விட்டுள்ளதைப் பார்த்ததும், சிரிப்புத்தான் வந்தது. செம்மணி மூடிமறைப்புக்கு மௌன சாட்சிகளாக இருந்துவிட்டு, இப்போது "வெளிநாட்டு நிபுணர்கள் தேவை" என்று அறிக்கைவிடுகிறார்கள். அவ்வாறு அரசு செய்யாது போனால் என்ன செய்வார்கள்? எதிர்த்து நிற்பார்களா? பார்க்கலாம்!

அ.ராஜேஸ்வரன், கொழும்பு-11.

என் இனிய முரசுக்கு!

உன்னிடத்தில் நான் என்னை எப்போதோ கொடுத்துவிட்டேன். உன் இதழில் தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். அதிலும் 'தேன்கிண்ணம்', 'கவிதைப் போட்டி' உன் இதழில் கன்னூற வைக்கிறது. ஆனால் கவிதைப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பு எமக்கில்லாததை இட்டு வருத்தம் தான். என்றாலும் தேன்கிண்ண கவிதையில் எங்கள் கவிதைகளையும் சேர்த்தாலென்ன?

எம்.சுயர்சன், கோண்டாவில் வடக்கு.

## இறுதி இலக்கு

*அன்பு முரசே!*

சம்பகால கேலிச் சித்திரங்கள் அருமையாக உள்ளன. காதிலை பூ கந்தசாமி கலக்குகிறார். வடபகுதி காணிசுவீகரிப்பு தொடர்பாக இராஜதந்திரியின் அலசல் பிரமாதம். யுத்தத்தின் இறுதி இலக்கை இப்போதே அறியக்கூடியதாக உள்ளது. அப்படியிருந்தும் தூங்குவதுபோல நடிக்கும் குழுக்களை துயில் எழுப்ப முயலுவது நடக்கக்கூடியதல்ல.

சா.கிருஷ்ணராஜ், யாழ்ப்பாணம்

## ஜனாதிபதியிடம் முறையீடு

முரசுக்கு,

வடபகுதி காணி சுவீகரிப்பு ஜனாதிபதிக்குத் தெரியாது என்றால், அவ்வாறு செய்தவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக கூறுவதும், கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிப்பதும் கேலிக்கூத்து. தனக்குத் தெரியாது என்பதை அம்மையார் இதுவரை கூறவும் இல்லையே.

மா.பூவராசன், சாவகச்சேரி.

## ரணகோஷ-02

முரசே!

"தேர்தலை முன்னிட்டு மீண்டும் ஒரு படை நடவடிக்கை இடம்பெற்றே தீரும்" என்று நாரதர் திரும்பத் திருப்ப கூறியிருந்தார். ரணகோஷ 2 அதுபோலவே நடந்தது. அரசின் குணத்தை முரசு நன்கு உணர்ந்து வைத்திருக்கிறது. இதனை டமில் கட்சிகளும் உணர்ந்தால், அரசின் இழுத்தடிப்புகளுக்கு பலியாக மாட்டார்களே!

ஆர்.நிரோசன், சிலாபம்.

முரசில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்.

* நா.பாரதலெக்சுமி, கொழும்பு-15.
* ரி.திமிலன், யாழ்ப்பாணம்.
* சுபாஷினி திலகரட்ணம், மட்டக்களப்பு.
* கங்கேஸ்வரி கந்தையா, சத்துருக்கொண்டான்.
* ஏ.ரவிஷங்கர், மட்டக்களப்பு.
* இரா.ஆனந்தன், புசல்லாவ.
* டி.பிரகாஷ், வவுனியா.
* பி.சசிதரன், மட்டுநகர்.
* ஜி.டினேஷ், மஸ்கெலியா.
* எம்.ராமநாதன், கனடா.
* சி.குகன், கனடா.
* த.திருக்குமரன், கனடா.
* வி.தவனேஸ்வரன், உடப்பு-03.
* ஆர்.அசோக்குமார், டிக்கோயா.
* ப.சந்திரகலா, வவுனியா.
* ஆ.கேசவன், அவுஸ்திரேலியா.
* ஜி.றொன்சன், திருமலை.
* பொன்.சுந்தரம், யாழ்ப்பாணம்.
* எஃப்.பஸ்மியா, வாழைச்சேனை.
* ஐ.விநாயகமூர்த்தி, பொகவந்தலாவ.
* பய்ஸா இப்றாஹிம், கல்முனை-04.
* எல்.அர்ஜுனா, தோப்பூர்.
* வி.டினோஜ், தெகிவளை.
* நா.கோவிந்தசாமி, கொழும்பு-15.
* ஃபெமிலா ஆதம்பாவா, நுவரெலியா.
* சரவணமுத்து நாவேந்திரன், வெல்லாவெளி.
* நா.றாத்மேரி, கல்முனை.
* யோ.தயாவதி, மூதூர்.
* ப.அருஸ், கிண்ணியா.
* செல்வி த.சுபத்ரா, அக்கரைப்பற்று.
* பா.பஷீனா, புத்தளம்.
* மர்லியா முஹாஜிரீன், மீவலதெனிய.
* எஸ்.சிவகௌரி, கிளென்டெலன்.
* பி.சிவம், ஸ்கந்தபுரம்.
* எம்.சாஜகான், வாழைச்சேனை.
* வ.சுரேஸ் கண்ணா, மட்டக்களப்பு.
* வை.ஜெ.ரமீலா, களுத்துறை.
* கா.சிவகுமார், அமெரிக்கா.
* எஸ்.புவனேஸ்வரன், ஃபிரான்ஸ்.
* ஏ.எம்.எம்.ரமலான், உருத்தலவின்ன.
* முகம்மத் ஜவாத், புத்தளம்.
* நல்லரெத்தினம் ஜீவாஜி, செங்கலடி.
* க.காந்தரூபன், ஜெர்மன்.
* எஸ்.குமார், சுவிஸ்ஸர்லாந்து.
* பி.அருட்செல்வம், சவுதி அரேபியா.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):– 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

www.padippakam.com

# தமிழ்க் கட்சி முகாம்கள் சுற்றிவளைப்பு?

## தடுத்து வைக்கப்பட்டோர் வெளியேற்றப்பட்டனர்!

(நமது நிருபர்)

வவுனியாவில் கடந்தவாரம் தமிழ்க் கட்சிகளது முகாம்கள் சுற்றிவளைக்கப்பட்டதாகவும், தேடுதல்கள் நடத்தப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இத் தேடுதல் தொடர்பாக முன் கூட்டியே தமிழ்க் கட்சிகள் தகவலறிந்து அதற்கேற்ப நடந்துகொண்டன.

தமிழ்க் கட்சிகளது முகாம்களில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டோரை, வீடு சென்று மீண்டும் தாம் அழைக்கும்போது வருமாறு கூறி தமிழ்க் கட்சிகள் அனுப்பிவைத்தன.

வீடு செல்ல அனுமதித்தால், தப்பிச் சென்று விடுவர் என்று கருதப்பட்டவர்களை தமது இரகசிய வீடொன்றுக்கு கொண்டு சென்று, தமிழ்க் கட்சி ஒன்று மறைத்து வைத்திருந்ததாம்.

வவுனியாவில் தமிழ்க் கட்சி முகாம் ஒன்றில் பத்து இலட்சம் ரூபா நிதிகேட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

திருமணப் பிரச்சனை ஒன்றுக்கு மத்தியஸ்தம் செய்ததுக்கு கூலியாகவே பத்து இலட்சம் கோரப்பட்டது.

அவர்களோ ஏழரை இலட்சம் ரூபா தருவதாக ஒப்புக் கொண்டனர். பத்து இலட்சம் ரூபா தந்தால்தான் விடுதலை செய்யலாம் என்று கூறி மூன்று பேரும் தடுத்து வைக்கப்பட்டனர். அதில் ஒருவருக்கு கை முறிந்தது. அவர் ஓர் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னொருவருக்கு கால் எலும்பு உடைந்துவிட்டது.

தேடுதல் நடத்தப்படப்போவதாக முன் கூட்டியே செய்தி அறிந்ததும், குறிப்பிட்ட மூன்று பேரையும் வீட்டுக்கு செல்லுமாறு அந்தத் தமிழ்க் கட்சியினர் கூறினார்களாம்.

தேடுதல் முடிந்த பின்னர் மீண்டும் அவர்கள் அழைக்கப்பட்டனர். ஐந்து இலட்சம் ரூபா காசோலை மூலம் செலுத்தினர். மிகுதி இரண்டரை இலட்ச ரூபாய் விரைவில் தருவதாக உறுதியளித்ததின் பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விவகாரத்தில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புகளுக்குத் தொடர்பு கிடையாது என்று தெரியவந்துள்ளது.

### காணவில்லை

வவுனியாவில் தமிழ் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார். சந்திரசேகரம் சுதர்சன் (21) என்பவரே சமீபத்தில் காணாமல் போனவராவர்.

யாழ்ப்பாணம் ஏழாலை மத்தியைச் சேர்ந்த சுதர்சன் கொழும்பில் இருந்து 30.03.99 அன்று வவுனியா சென்றுள்ளார். வவுனியாவில் தங்கியிருந்த வீட்டிலிருந்து பாஸ் பெறுவதற்காக சென்ற சுதர்சன் இச் செய்தி எழுதப்படும்வரை வீடு திரும்பவில்லை.

வவுனியாவில் தமிழ்க் கட்சிகளது முகாம்களில் நடைபெற்ற தேடுதல் அக் கட்சிகளுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்து, அத்துமீறல்களுக்கு தூண்டியுள்ளது என்று வவுனியா மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

### உள்ளிருந்து....

இதனிடையே வவுனியாவில் தமிழ்க் கட்சி முகாம்கள் தடுப்பு முகாம்களாக இயங்குவது பற்றி சர்வதேச மன்னிப்புச் சபைக்கு தமிழ்க் கட்சி ஒன்றின் உள்ளிருந்தே தகவல்கள் போயுள்ளன. தேடுதல் பற்றி முன்கூட்டியே தகவல் கிடைத்தது பற்றியும் உள்ளிருந்தே தகவல் கசிந்துள்ளது.

இதனால் வவுனியாவிலுள்ள தமது முன்னாள் உறுப்பினர்களை தமிழ்க் கட்சி ஒன்று அழைத்து விசாரித்துள்ளது. ■

# மடு பிரசார சுவரொட்டி

## மௌனம் சாதித்த கட்சிகள்

மடு தேவாலய பகுதியில் படையினர் நிலைகொண்டதையும், அதனை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தியதையும் கிறிஸ்தவ மக்களும், மதகுருமாரும் கண்டித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வாக்களிப்பு முடியும்வரை அரசதரப்பில் எவரும் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, மடு தேவாலய புனித பிரதேசத்தில் படையினர் நிலை கொண்டது தொடர்பாக கூட்டணி உட்பட எந்தவொரு தமிழ்க் கட்சியும் தேர்தல் முடியும் வரை எக் கருத்தையும் கூறுவதற்கு முன்வரவில்லை.

அரசாங்கம் மேற்படி விடயத்தை தேர்தல் பிரசாரத்திற்கு நம்பியிருக்கிறது. எனவே அவ்விடயத்தில் கருத்துக் கூறினால் அரசுக்கு அதிருப்தி ஏற்படும் என்று கருதியே மௌனம் அனுஷ்டித்தன என்று தெரிகிறது.

மடு தேவாலயத்தை சுவரொட்டியில் பயன்படுத்திய விவகாரமும் பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியிருந்தது.

வழக்கமாக இவ்வாறு சாச்சைகள் உருவாகி, பத்திரிகைகளில் பெரிதாக செய்திகள் வந்தால், அதற்கு ஒரு அறிக்கை விடுவது தமிழ்க் கட்சிகள் பலவற்றின் வழக்கமாகும். ஆனால், மடு தேவாலய சுவரொட்டி விடயத்தில் ஜனாதிபதியின் படமும் இடம்பெற்றமையால் தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருந்துவிட்டன.

தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருந்தாலும் மேற்படி விவகாரங்கள் மதகுருமார்கள் ஊடாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் பெரிதாக வெளியாகியிருந்தன.

தமிழ்க் கட்சிகளின் பங்கு இன்றியே தமிழ் மக்களது பல்வேறு பிரச்சனைகளை பலரும் வெளிக்கொண்டுவர ஆரம்பித்துள்ளனர்.

மன்னார் ஆயர் காண்பித்த உறுதியில் ஒரு சிறு பங்கைக்கூட தமிழ் மக்களது பிரதிநிதிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளுவோர் காண்பிக்கவில்லையே என்று அவதானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

### எப்படி முடிந்தது?

துரையப்பா விளையாட்டரங்கில் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இருவாரங்களுக்குள், அப் பகுதியில் தோண்டல் நடத்த முடிந்துள்ளது.

ஆனால் செம்மணி புதைகுழி பற்றி புகார் கூறப்பட்டு ஒருவருடம் நிறைவு பெறப்போகிறது. செம்மணி விவகாரம் நேரடியாக இன்றைய ஆட்சி காலத்தோடு தொடர்புடையதாகும். அதனால்தான் இந்த இழுத்தடிப்பு என்பது தற்போது நிரூபணமாகிவிட்டது என்று யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். அவர்களும் தமிழ்க் கட்சிகள் இந்த விவகாரத்தில் நடந்து கொண்டுள்ள முறையையிட்டு அதிருப்தி தெரிவித்துள்ளனர். ●

# மீனவர்கள் மீது தாக்குதல்

முல்லைத்தீவு கிழக்குக் கடலில் 04.04.99 அன்று இரவு புலிகளது இரண்டு டிங்கிப் படகுகள் நிர்மூலமாக்கப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.

அன்றைய தினம் மோதல் எதுவும் நிகழ்ந்ததாக புலிகள் கூறவில்லை. அதேவேளை 04.04.99 அன்று இரவு முல்லைத்தீவுக் கடலில் இரு மீன்பிடிப் படகுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

இப்படகுகளில் சென்ற மீனவர்கள் இருவர் கடலில் குதித்து உயிர் தப்பியுள்ளனர்.

14 மணிநேரம் கடலில் நீந்தி அவர்கள் முல்லைத்தீவை சென்றடைந்தனர். கடன் உதவியோடு தாம் வாங்கிய படகும், மீன்பிடி உபகரணங்களும் நாசமாகியதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ■

# 'ரணகோஷ' படையினர் நடவடிக்கை

## முன்னாள் புலி உறுப்பினர்கள் கைது!

வன்னியில் 'ரணகோஷ' மூலம் படையினர் புதிதாக நிலை கொண்ட பகுதிகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலிகளில் இருந்து விலகி தமது வீடுகளில் இருந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொது மக்களில் சிலரே இவர்கள் தொடர்பாக துல்லியமாக தகவல் கொடுத்துள்ளனர்.

கைதானவர்கள் பலத்த விசாரணைக்கு உள்ளாகியுள்ளனர். ஆண்கள், பெண்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் தம்மிடம் சரணடைந்ததாக படையினர் கூறியுள்ளனர்.

கைதான புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள், புலிகள் மீண்டும் தம்மோடு வருமாறு அழைத்தும் செல்ல மறுத்தவர்கள் என்று கூறப்படுகிறது.

படையினர் வந்தாலும் தாம் உண்மையைக் கூறிவிட்டு இருக்கலாம் என்று கருதியே அங்கிருந்து வெளியேறாது இருந்தனராம். ●

# அபிவிருத்தித் திட்டமும் இழப்பீடும்!

## மலையகத்தில் தமிழர் மீது கரிசனை!

தேர்தல் நெருங்கி வந்த இறுதி நேரத்தில் மலையக மக்கள்மீது- குறிப்பாக அப்பகுதிகளிலுள்ள தொழிலாள வர்க்கத்தினர் மீது-கரிசனை காட்டும் விதமாக அவசர அவசரமாகப் பல அபிவிருத்தித் திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டன.

தோட்டத் தொழிலாளிகளான தமிழ் மக்களைக் குறிவைத்தே இத் தகைய அபிவிருத்திகள் அரங்கேறின. வீட்டுத் திட்டம், குடிநீர் வழங்கல், வீதி அபிவிருத்தி, மின்சாரம் வழங்கல், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, சம்பள உயர்வு, சிறு கைத்தொழில், கால் நடை வளர்ப்பு, போக்குவரத்து, கௌரவிப்பு என்று பலப்பல வாக்குறுதிகளும், அபிவிருத்தித் திட்டங்களும் அரங்கேறின.

அடுத்த பொதுத் தேர்தலுக்குள் சகலதும் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. இவை தேர்தல் பிரசார உத்திகளாகவே மேற்கொள்ளப்பட்டன. ■

# யாழ் பொலிஸ் நிலையங்களில் சிங்களத்தில் முறைப்பாடுகள்

யாழ் குடாநாட்டில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் சிங்களத்திலேயே பதிவு செய்யப்படுகின்றன.

இதுபற்றி தமிழ் பா.உக்கள் சுட்டிக் காட்டியும் இதுவரை மாற்றம் எதுவும் நிகழவில்லை.

சிங்களத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதால், முறைப்பாட்டாளர்கள் பாடு திண்டாட்டமாக உள்ளது.

நாடெங்கும் தமிழ்மொழியை அமுல் செய்வது பற்றி அடிக்கடி அரசு கூறிவருகிறது. ஆனால் தமிழ் மக்கள் முற்றுமுழுதாக வாழும் யாழ் குடாநாட்டில்கூட தமிழில் கருமங்கள் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ●

**முக்கிய அறிவித்தல்** முந்தி வருகிறது முரசு

அடுத்த வார முரசு முன் கூட்டியே உங்கள் கரம் சேரும். சித்திரைப் புத்தாண்டு விடுமுறைகளை முன்னிட்டு முந்திவருகிறது முரசு. 12.04.99 திங்கட்கிழமை அன்றே உங்கள் கரம் சேர்ந்துவிடும்!

# கருத்தரங்கு என்று அழைப்பு!

## தேர்தல் பிரசாரத்தில் முடிவு!

பதுளை மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்றிற்குச் சமூகமளிக்குமாறு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

பதுளையிலுள்ள மகா வித்தியாலயம் ஒன்றில் கருத்தரங்கு நடந்தது. கருத்தரங்கு 'சுகாதாரம்' எனத் தலைப்பிடப்பட்டிருந்தாலும் அது முழுக்க முழுக்க ஆளும் தரப்பின் பிரசாரக் கருத்தரங்காகவே அமைந்திருந்தது.

கருத்தரங்கு முடிவில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் ஊவா மாகாணத்தில் போட்டியிடும் மாகாணசபை வேட்பாளர்களது படங்களைத் தாங்கிய பிரசுரங்களும், கையேடுகளும் வழங்கப்பட்டன.

சுகாதாரக் கருத்தரங்கு அரசியல் கருத்தரங்காக மாறியது புதிய விந்தைதான் என்றும், இதற்கு முதல் இப்படியொரு பிரசார வித்தை நடைபெறவில்லையெனவும் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் 'முரசு'க்குத் தெரிவித்தனர்.

சுகாதாரக் கருத்தரங்கு என்பதை விட 'அரசியல் சுகாதாரம்' எனத் தலைப்பிட்டு அழைத்திருக்கலாம் என்று மேலும் அந்த ஆசிரியர்கள் கருத்துக் கூறினர். ●

# நேரம் பிசகிய குண்டுவெடிப்பு!

## ஒரே 'வீட்டில் பல சம்பவங்கள்!

மட்டக்களப்பு- வந்தாறுமூலை சந்தைக்கு முன்னாலுள்ளது கிரான் மகா வித்தியாலய அதிபர் திரு. சிவநாதனின் வீடு. பகலில் அதிக சன சந்தடிமிக்க இடம் இது. படையினரும் அந்த வீட்டையும் வீட்டுச் சூழலையும் அவ்வப்போது தமது தேவைக்குப் பயன்படுத்தி வருவதைப் புலிகள் மோப்பம் பிடித்தனர்.

படையினர் மதிய போசனத்திற்காக அங்கு கூடும் நேரத்தைக் கணித்து புலிகள் அந்த வீட்டில் குண்டைத் தயார் படுத்தினர். பகல் 1.30 க்கு நேரங்கணித்து 30.03.1999 அன்றிரவு அந்த வீட்டில் குண்டைப் பொருத்தினர். பி.ப. 1.30 (1.30 P.M.) என்ற கணிப்பு 31.03.99 அன்று நள்ளிரவுக்குச் சற்றுப் பிந்தி மு.ப. 1.30 (1.30A.M.) இற்கு குண்டு வெடித்துச் சிதறியது. குண்டு முன்கூட்டியே வெடித்ததினால் புலிகளின் இலக்குத் தவறிப்போனது.

இதற்கு முதல் பல தடவை இந்த வீடு பாதிப்பைக் கண்டிருக்கிறது. இரு தடவைகள் சீருடையினரால் எரிக்கப்பட்டுள்ளது. சில காலங்களுக்குப் பின்னர் அவ்விடத்தில் புலி- படையினருக்கிடையே மோதல் மூண்டது. பதிலடியாக ஓர் ஆசிரியரும், மற்றொரு பொது மகனும் பிடித்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது நடந்து சில நாட்களின் பின்னர் அவ்வீட்டில் பதுங்கியிருந்த படையினரில் ஒருவர் தூங்கி விழுந்தபோது அவரது துப்பாக்கி வெடித்து அவர் கொல்லப்பட்டார்.

புலிகளைக் கண்காணிக்கும் இடமாக அவ்விடத்தைப் படையினர் தேர்ந்தெடுத்ததால், படையினரைக் குறிவைத்து புலிகள் அவ்விடத்தில் வலை விரித்தனர். ●

# பதுங்கிச் சூடு

## இரு புலிகள் பலி

மட்டக்களப்பு- ஏறாவூர் சவுக்கடியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவினர் இரவோடிரவாகப் பதுங்கியிருந்தனர்.

04.04.1999 அன்று காலை 8.10க்கு அங்கு இருவரின் நடமாட்டத்தைக் கண்டு சுட்டனர். ஒருவர் பலியானார். தாம் அகப்படப் போவதையுணர்ந்த மற்றைய புலி உறுப்பினர் சயனைட் உட்கொண்டு பிடிபடாமல் பலியானார். அவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. ஆனால் அவை பொலிஸில் ஒப்படைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் நிதிப்பிரிவினரே இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது. சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாகப் புலிகளிடம் கையளிக்கப்பட்டன. ■

# ஜனாதிபதி சென்ற ஹெலியில்

## விமான எதிர்ப்பு தீப்பிழம்புகள்

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவை 30.03.99 செவ்வாய்க்கிழமை பண்டாரவளைக்கு ஏற்றிக்கொண்டு வந்த ஹெலிகொப்டரிலிருந்து தீப்பிழம்புகள் சீறிப் பாய்ந்துள்ளன. இதில் ஏழுபேர் காயமுற்றனர். இத்தீப்பிழம்புகள் ஏவுகணைகளை எதிர்த்து வீசப்படும் சாதனத்திலிருந்து தற்செயலாக வெளியேறின என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்கத் தயாரிப்பான பெல் 212 ரக ஹெலிகொப்டரில் இஸ்ரேல் தயாரிப்பான இந்த எதிர்ப்பு சாதனம் (ஹீற் பலூன்கள்) பொருத்தப்பட்டிருந்தது. பண்டாரவளை நகரில் விளையாட்டு மைதானத்தில் ஹெலி தரையிறங்குவதற்கு ஆயத்தமான போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

விளையாட்டு மைதானத்தில், ஜனாதிபதியை வரவேற்கவும் அவருடைய உரையைக் கேட்கவும் மக்கள் கூட்டம் திரண்டிருந்தது.

மேற்படி தீப்பிழம்புகள், ஹெலிக்கொப்டர் தரை இறங்கும்போது அதன் வலது புறத்தில் தரையில் பாய்ந்து, பின்னர் மேலே கிளம்பி மக்கள் நின்றிருந்த பகுதியைப் போயடைந்தன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதியின் பாதுகாப்பு அலுவலர் ஒருவருடன் சேர்ந்து ஏழுபேர் சிறு காயங்களுக்குள்ளானார்கள். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கிறிஃப் விமானங்களிலும் இத்தகைய சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. சில வருடங்களுக்கு முன்னர் இவ்விமானங்களிலிருந்து மிகவும் வெப்பம் கூடிய தீப்பந்தங்கள் வெளியேறியுள்ளன.

நிலத்திலிருந்து கிளம்பி வெப்பத்தைப் பின் தொடர்ந்து சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகள் ஏவப்படும்போது, விமானத்தில் அல்லது ஹெலியிருந்து எதிர்ப்புத் தீப்பந்தங்கள் வீசப்படும். ஏவுகணைகள் விமானத்தை விட்டுவிட்டு, விமானத்திலிருந்து வெளியேற்றப்படும் தீப்பந்தத்தை (ஹீற் பலூன்களை) நாடிச் சென்று தாக்கிவிடும்.

# முகாம்கள் மூடல்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பல இராணுவ முகாம்கள் முற்றாக மூடப்பட்டு அங்கிருந்த படையினர் வேறு பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர். இப்பகுதிகளில் புதிதாக விசேட அதிரடிப் படையினர் (எஸ்.ரீ.எப்) நிலை கொண்டுள்ளனர்.

இங்குள்ள முருங்கன் 214 ஆம் படைப் பிரிவு மற்றும் 212 ஆம் படைப்பிரிவின் சில பகுதிகளில் இருந்த படையினர் வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

இதனால் உயிலங்குளத்தில் இருந்து கட்டையடம்பன் வரைக்குமான பகுதி விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளது. பேசாலைக்கருகிலுள்ள நடுக்குடா இராணுவ முகாமும் மூடப்பட்டு அங்கிருந்த படையினரும் வெளியேறியுள்ளனர்.

இதேவேளை மன்னார் நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் தொலைத்தொடர்பு கோபுரப் பணிகளில் பெருமளவான சிங்கள தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். ●

# சுற்றிவளைப்பு

புத்தளம் மாவட்டத்திலுள்ள பழம் பெரும் தமிழ்க்கிராமமான உடப்புக்கு அருகிலுள்ள செல்வபுரம் பகுதி கடந்த 01.04.99 அன்று முந்தல் பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு சல்லடைத் தேடுதல் இடம் பெற்றது.

அன்றைய தினம் அதிகாலை 5 மணிக்கு இக்கிராமத்திற்கு வந்த பொலிஸார் வெளியே எவரையும் செல்லவிடாமல் தடுத்ததுடன் நண்பகல் வரை சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பின்னர் உடப்பு பகுதியைச் சேர்ந்த மூன்று பேரும் திருகோணமலையிலிருந்து இங்கு வந்து தங்கியிருந்த 2 பேரும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். ■

# புலிகள் செய்த கடத்தல்

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்றுமுறிப்பை அடுத்துள்ள நவ்வியில் பஸ் வண்டியொன்று கடத்திச் செல்லப்பட்டது.

30.03.99 அன்று இரவு இக் கடத்தல் நடைபெற்றது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி என்பதால், பஸ் வண்டியை அலட்சியமாக நிறுத்தி வைத்திருந்தனர்.

ஆயுதங்களோடு வந்த சிலர் பஸ்ஸில் ஏறினார்கள். சிங்களத்திலேயே கதைத்தனர். பஸ் சாரதியிடமும், நடத்துநரிடமும் பஸ்ஸை தாம் கூறும் இடத்திற்குச் செலுத்துமாறு கூறினார்கள்.

படையினர்தான் பஸ்ஸை தேவைக்கு கேட்கிறார்கள் என்று சாரதியும் ஓட்டிச் சென்றார்.

சிறிது தூரம் சென்றதும் "நீங்கள் எங்களோடு வரப்போகிறீர்களா? அல்லது இறக்கி விட வேண்டுமா?" என்று தமிழில் கேட்டனராம். அப்போதுதான் அவர்கள் புலிகள் என்பது தெரிந்தது.

சாரதியையும், நடத்துநரையும் இறக்கி விட்டு, வன்னிக்கு பஸ்ஸைக் கொண்டு சென்று விட்டனர். 17 இலட்சம் ரூபா பெறுமதியான பஸ் வண்டியே கடத்தப்பட்டது. ●

# மொத்தமாக பத்தாயிரம் ரூபா!

## ரொக்கமாக கேட்கிறது ரெலோ

மட்டக்களப்பு-செங்கலடியில் முகாமிட்டுள்ள ரெலோ இயக்கத்தினர் அப்பகுதியிலுள்ள வர்த்தகர்களையும் மற்றும் சிறிது வசதி படைத்தவர்களையும் அழைத்துக் கூட்டமொன்றை நடத்தினர்.

நிதி வசூலிப்பது தொடர்பாகவே கூட்டம் கூட்டப்பட்டது. "நாங்கள் இதுவரையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கி வந்தோம். ஆனால் இனி நாம் அவர்களுடன் சேராது சுயமாக இயங்கப் போகிறோம்.

எனவே எமக்கு உதவி தேவைப்படுகிறது. இதற்கு முன்னர் நாம் உங்களிடம் அவ்வப்போது பலவழிகளில் பணம் வசூலித்து வந்தோம். அது உங்களுக்கும் கஷ்டமாக இருந்தது. எங்களுக்கும் கஷ்டமாக இருந்தது. இனி நாம் உங்களிடம் நிதியுதவிகேட்டு வருவதில்லை என்று முடிவெடுத்துள்ளோம்.

ஆனால் கடைசியாக நீங்கள் ஒவ்வொருவரும் தலா 10ஆயிரம் ரூபாய் தரவேண்டும். அதைத் தந்துவிட்டால் எமது பகுதியின் பல திட்டங்களுக்கு நாம் பயன்படுத்தவுள்ளோம். எனவே எமது வேண்டுகோளுக்கு மறுப்பின்றி பணத்தைச் செலுத்துங்கள்!" என்று கூறியுள்ளனர்.

இது பொதுமக்களிடம் மொத்தமாகப் பணம் கறக்கும் ஏமாற்று வித்தை என்று கூட்டத்தில் கலந்து கொண்டோர் காதும் காதும் சேர்ந்தாற்போல் கருத்துக் கூறினர்.

செங்கலடியில் உள்ள புளொட் இயக்கத்தினரும் சமீபத்தில் மக்களிடம் நிதி வசூலிப்பதில்லை என்று பகிரங்கமாகக் கூறிவிட்டு முன்னரை விடப் பல மடங்காக இரகசியமாக நிதி சேகரித்து வருகிறார்கள் என்று மக்கள் வேதனைப்படுகின்றனர். ■

# புலிகள் பலி

மூதூரில் புலிகளது தாக்குதலில் இரு பொலிசார் பலியானார்கள். 01.04.99 அன்று இரவு நடைபெற்ற இத் தாக்குதல் மூதூர் நகர்ப்பகுதியிலேயே நடைபெற்றது.

தாக்குதலை நடத்திவிட்டு திரும்பிச் சென்ற புலிகள் அணியை இராணுவத்தினர் கண்டு தாக்கினார்கள்.

இத் தாக்குதலில் புலிகள் இருவர் பலியானார்கள். விதுரன், ஐங்கரன் ஆகிய புலிகளே பலியானவர்களாவர். ●



படிப்பகம்

www.padippakam.com

# தங்குமிடத்தில் துர் நாற்றம்

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர புதிய பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரயாணிகள் தங்குமிடம் மிக மோசமான நிலையில் காட்சி தருகிறது.

பிரயாணிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள இந்த இடத்தில் ஆடு, மாடு, கழுதை என்பவற்றின் எச்சங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் கடும் வெயில், மழை நேரங்களில் இங்கு ஒதுங்கி நிற்கும் பயணிகள் மூக்கையும், வாயையும் பொத்திக் கொண்டு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள இ.போ.ச. வுடன் இணைந்து காணப்படும் தங்குமிடம் தான் மிக மோசமான நிலையில் உள்ளது. கடந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்டு பயணிகளுக்கான இருக்கைகளும் அமைக்கப்பட்ட இத்தங்குமிடம் இரவு வேளைகளில் பிராணிகள் தங்குமிடமாக மாறி விடுகிறது.

இவ்வாறே பஸ் நிலையத்தின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள தரிப்பிடத்தையும் இங்கு ஒய்வு பெற்றுச் செல்லும் பயணிகளின் நலன் கருதி, வாரத்திற்கொரு தடவையாவது கழுவி துப்புரவு செய்வது இதனை நிர்வகிக்கும் அமைப்பின் பொறுப்பாகும்.

மன்னார் நகரில் ஒய்வாக இருக்க இடமில்லாததால் வெயில் நேரங்களில் நூற்றுக் கணக்கானோர் இவ்விடத்தில் அமர்கின்றனர். இந்த இடத்தில் மாட்டுச் சாணம் நிறைந்து காணப்படுவதால் அதற்கு மேலேயே இவர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

இந்த கண்றாவியான காட்சிகளைப் பார்த்துக்கொண்டு கைகட்டி வேடிக்கை பார்க்கும் பிரதேச சபை நிர்வாகத்தின் மீதும் இப்பகுதி மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

# புலிகளிடம் புகார்!

தமக்குத் துரிதமான தீர்வு கிட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிப் பொதுமக்கள் தமது பிரச்சனைகளை எடுத்துக் கொண்டு புலிகளின் காவல் துறையினரிடம் சென்று முறையிடுகின்றனர்.

புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடு ஒன்றுக்காக நூறு ரூபா முறைப்பாட்டுக்கட்டணமாக அறவிடப்படுகிறது. கடந்த வாரம் புலிகளின் காவல் துறையினரிடம்சென்று முறையிட்டுவிட்டு அவர்களது கடிதத்துடன் வந்த பெண், சோதனைச் சாவடியில் அந்தக் கடிதத்தையும் சேர்த்துக் கொடுத்து விட்டார். விடயம் விபரீதமானது. இது அங்கு சீருடையினருடன் நின்றிருந்த தமிழ்க் குழுக்களுக்குத் தெரியவரவே அப்பெண் நீண்ட நேரம் தொல்லைக்குள்ளானாராம்.

# திறக்கப்படாத அறுவைத்தளம்

(நமது நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆடு, மாடு, அறுக்கும் தொழுவம் நீண்ட காலமாக யாரும் கவனிப்பாரற்ற நிலையில் காட்சிதருகிறது.

1994 ஆம் ஆண்டு இப்பிரதேச இறைச்சிக் கடைக்காரர்களின் நலன் கருதி சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் இந்த அறுவை இடம் நிர்மாணிக்கப்பட்டது.

ஆனால் இது இன்றுரை உத்தியோகப் பூர்வமாக பாவனைக்கென திறந்து வைக்கப்படவில்லை. இதனால் அட்டாளைச் சேனைப் பிரதேச இறைச்சிக் கடைக்காரர்கள் கருங்கொடித்தீவுபிரதேச சபைக்கு சொந்தமான அறுவை இடத்திலேயே தமது ஆடு, மாடுகளைஅறுத்து வருகின்றனர்.

இதனால் இந்த அறுவை இடம் அமைந்துள்ள பகுதி அளவுக்கதிகமான முறையில் ஆடு, மாடு அறுக்கும் தளமாக மாறியுள்ளதுடன் கடற்கரைப் பக்கமாக கடும் துர்வாடை வீசுகிறது.

அட்டாளைச்சேனை அறுவைத்தளம் அமைக்கப்பட்டு 4 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இதனால் இதிலுள்ள கம்பிகளும், கதவுகளும் துருப்பிடித்துக்கொட்டுகின்றன. தற்போது இத்தளத்தைப் பயன்படுத்த முடியாதளவுக்கு நாசமாகியுள்ளது.

# அழைப்பு மணி இல்லாத தொலைபேசிகள்

தொலைத் தொடர்பு சேவை பல்வேறு நவீன மாற்றங்களைக் கண்டுவரும் இவ்வேளையில் அக்கரைப்பற்று- திருக்கோயில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சுமார் 28 தொலைபேசிகள் ஊமையாகி மௌனித்துப் போய்விட்டன.

அங்குள்ள எந்தவொரு தொலைபேசியுடனும் தொடர்பு கொள்ளும் ஒருவர் தனது செவிகளில் தொலைபேசிஅழைப்புமணி அடிப்பது போல உணர்வார். ஆனால் அங்கு மணி அடிக்காது.

தற்செயலாக யாரும் வந்து தொலைபேசியைச் செவிகளுக்கு அருகில் எடுத்தால் மாத்திரம் மறுமுனையிலிருந்து யாரோ அழைப்பது தெரியவரும். நீண்ட நாட்களாக இருந்துவரும் இந்தக் குறையைச் சீர் செய்ய இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையென்றுஅங்குள்ள தொலைப் பேசிபாவனையாளர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்

# மானும், மயிலும் பாய்ச்சல்
# பஸ்களுக்குச் சேதம்!

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த மட்டக்களப்பு போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு சொகுசு பஸ்களின் முன்னால் புணானை எனுமிடத்தில் மானும், மயிலும் பாய்ந்ததால் பஸ்களின் கண்ணாடிகள் நொருங்கிப் போயின. இதனால் மட்டக்களப்பு போக்குவரத்துச் சபைக்குச் சுமார் ஒரு இலட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

முதற் சம்பவத்தில் மான் மோதியது. அது நடந்து ஒரு வாரம் கழித்து மயில் மோதியது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புச் சபைக்குப் புத்தம் புதிய சொகுசு பஸ்ஸை எடுத்துச் செல்லும் வழியிலேயே பஸ்ஸின் முன்னால் அதிவேகமாகப் பறந்து வந்த மயில் மோதி சேதத்தை ஏற்படுத்தியது.

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் புணானையில் இருந்து ஒட்டமாவடி-நாவலடிவரை யானைகள் உட்பட வன ஜீவராசிகள் சுதந்திரமாக நடமாடும் பிரதேசமாகும்.


## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

## ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளி நாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
T.P:- 586218


## விளம்பரப் பகுதி


**சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை**

வெளி நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N. THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074

## திருகோணமலையில்
### காணி விற்பனைக்கு

திருகோணமலை, மூன்றாம் கட்டை, உப்புவெளி - நிலாவெளி பிரதான வீதியில் கண்ணாடித் தொழிற்சாலைக்கு முன்பக்கமாக குடியிருப்பற்ற காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பேர்ச் விலை ரூபா. 35.000/= (முப்பத்தையாயிரம்).

சோலையடியில் கடற்கரைப் பக்கமும், சீலோட் ஹோட்டலுக்கு முன்பக்கமாகவும், அருகாமையிலும் நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள குடியிருப்பற்ற காணித் துண்டுகளும் விற்பனைக்கு உள்ளன. விலை பேசித்தீர்துக்கொள்ளலாம்.

தொடர்புகள்: எம். துரை (டெலிபோன்: 026-20872)
காலை: 7.30 முதல் 8.30 வரை
மாலை: 7.30 முதல் 9.00 வரை

GRAYON TM/'99

**NISACO STEEL FURNITURE**




Special Discount on This Month Only
Open on Every Sunday 8.am to 8.pm

நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்

204, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-515168
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
Millagaha Estate, Aturugiriya Road, Hokandara North, Hokandara. Tel: 561367
(Near the Telecommunication Exchange Hokandara)

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 21ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067. (முன்னை பயப்பவை மட்டும் செய்து தரப்படும்)

வியாழன் விடுமுறை

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்



* தொய்வு * இழுப்பு * இளைப்பு * மாய்ச்சல் * சளி *மூச்சுத்தட்டல் * இருமல் *கணக்கடி *மூக்கடைப்பு *பீனிசம் * தலைவலி * தும்மல் * நாசி அரிப்பு * முட்டு போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

டாக்டர் சுறாஜ சோமசுந்தரம (அஸ்மா சிகிச்சை நிபுணர்)
Ph.D(Ind); M.B.B.Sch(Cey) Govt. Reg. No : A 1553 (1970)
25. சில்வெஸ்டர் வீதி, கல்கிசை, மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர்)

தொலைபேசி இலக்கம்: 074 - 201582
தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரை

தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து வரவும்.

# BUSINESS ENGLISH

**யாருக்காக ?**

- ★ பேச்சு ஆங்கிலத்தில் ஓரளவு தேர்ச்சி பெற்றோர் தமது வியாபார ஆங்கில (Businees English) அறிவையும் விருத்தி செய்து வியாபாரத்தொடர்-பாடல்களை (வியாபாரக்கடிதங்கள், குறிப்புகள், கலந்துரையாடல்கள் போன்றவை) மற்றவர்களின் உதவியின்றி மேற்கொள்ள விரும்புவோர்
- ★ எமது கல்வி நிலையத்தில் ஆரம்ப பாடநெறியைப்பூர்த்தி செய்தோர்
- ★ உயர் கல்வி மாணவர்கள்

**இப்பாடநெறியை மேற்கொள்ள விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்**

- ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்
- இலக்கணப்பயிற்சியுடன் கூடிய
  (i) வாய் மூலத்தொடர்பாடல்
  (ii) எழுத்து மூலத்தொடர்பாடல
- சொல்லறிவை (Vocabulary) விருத்தி செய்யபபயிற்சி
- குறிப்புகள் Handout மூலம் வழங்கப்படும.
- வகுப்புகள் ஆங்கில மொழியில் நடாத்தப்படும்
- $4\frac{1}{2}$ மாத காலப் பாடத்திட்டம்
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- குளிரூட்டப்பட்ட வகுப்பறை
- வகுப்புகள் வாரநாட்களில் மாலை 5.30க்கு பின்பு நடாத்தப்படும்

புதன்கிழமைகளில் கல்வி நிலையம் மூடப்பட்டிருக்கும்

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo - 6. (Near Ceylon Innsக்கு அருகில்)

GRAYON

# BRIGHT BOOK CENTRE (PVT) LTD

தபால் மூலமான பாடநெறிகள்



**SPOKEN ENGLISH & SINHALA**

மூன்றுமாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் ஆகியவற்றை பேச, எழுத, வாசிக்க கற்றுக் கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கடந்த பத்து வருடங்களாக கற்று பயன் பெற்றுள்ளனர்.



**METHOD OF COMPUTERISED BOOK KEEPING & ACCOUNTANCY (M.C.B.A)**

கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணுவது என்பதும், E.P.F, E.T.F, G.S.T, சம்பளம் தயாரிப்பது, சரக்கிருப்பு கட்டுப்பாடு ஆகிய அனைத்தும் கணனியின் உதவியுடன் தயாரிக்கும் முறை என்பன கற்றுத் தரப்படும் இப்பாட நெறியை மூன்றே மாதகாலத்தில் கற்றுத் தேறமுடியும்.



**BUSINESS ENGLISH**

வியாபார கடிதங்கள், வேலைக் கான விண்ணப்பங்கள் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றது என்பதும் நேர்முகத் தேர்வு, சம்பாஷனை ஆகியவற்றுடன் கூடிய பாடத் திட்டம் மேலதிக விபரங்களுக்கு விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

APPLICATION FORM
NAME ..............................
ADDRESS ..............................
..............................
விரும்பும் பாடநெறி : ..............................

BRIGHT FUTURE IN YOUR HAND

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX P. O. BOX NO: 162, COLOMBO - 11. TELE: 434770, 074-718592

## கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய இராஜ கோபுரத் திருப்பணி

முருகன் அடியார்களே!

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய இராஜகோபுரத்திருப்பணி வேலைகள் 07.02.1999 அன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இத்திருப்பணி இனிது நிறைவேற அடியார்கள் அனைவரது உதவியையும், ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறோம்.

இத்திருப்பணிக்கு உதவுவதற்கு அடியார்கள் வசதி கருதி யாழ்ப்பாணம் இலங்கை வங்கி 2வது கிளையில் (சி 12143) இலக்கக் கணக்கு திறக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருவதோடு, சன் கனடா (தொலைபேசி இல. 9059495231) கா. பாலசுப்பிரமணியம் கொழும்பு (தொலைபேசி இல. 423253) ஆகிய இருவரையும் இததிருப்பணிக்கு உதவியாக ஆலய நிர்வாக சபையும், திருப்பணிச்சபையும் நியமித்துள்ளது என்பதையும் அறியத்தருகிறோம்.

ஆலயத்தொண்டில்,

த. கணேசபிள்ளை, தலைவர்
இ. இராசலிங்கம், செயலாளர்
இ. இராசசேகரம், பொருளாளர்



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீக்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும்இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ::பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
நவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# 'தேர்தல் களத்தில் மடு மாதா'

வடக்கு-கிழக்குக்கு வெளியே கொழும்பில்தான் புலிகளது குண்டுத்தாக்குதல்கள் முன்பு இடம்பெற்றுவந்தன.

தற்போது கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் புலிகள் தமது இரகசிய மையங்களை அமைத்துள்ளனர்.

மலையக இளைஞர்கள் புலிகள் அமைப்பில் பெருமளவில் இணைந்துகொள்ள தொடங்கியதும், புலிகளது நடவடிக்கைகள் பரவலாக ஒரு முக்கிய காரணம்.

29.03.99 அன்று சிலாபம் ரெலிகொம் நிலையத்திலுள் இரு குண்டுகள் வெடித்தன. முதல் குண்டு 8 மணி அளவிலும் இரண்டாவது குண்டு சற்றுத் தாமதித்தும் வெடித்தன.

04.04.99 அன்று கொழும்பு புறக் கோட்டைப் பகுதியில் கடற்கரை ஒழுங்கையில் 'பியூஸ்' இணைப்புகளைக் கொண்ட பெட்டி ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதுவரை இரவு நேரத்திலோ, அதிகாலையிலோதான் மின்மாற்றிகளில் குண்டுகள் பொருத்தப்பட்டன.

ஆனால், கடற்கரை ஒழுங்கையில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணியளவில் குண்டு வெடித்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்கான வியாபாரத்தால் புறக்கோட்டைப் பகுதி களைகட்டியிருந்தது. அதனால் ஞாயிற்றுக்கிழமையும் சன நடமாட்டம்இருந்தது. அவ்வாறிருந்தும் மின்சாரப் பெட்டிக்கு அருகே நின்று குண்டைப் பொருத்திவிட்டு போயிருக்கிறார்கள்.

கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் வெடிமருந்துகள் மற்றும், ஆயுதங்களுடன் புலிகளின் இரகசிய மையங்கள் இயங்கி வருகின்றன.

பாரிய தேடுதல்கள், கைதுகள், பாஸ் முறைகள் போன்றவற்றின் மத்தியிலும் புலிகளின் இரகசிய மையங்கள் இயங்கி வருவது பாதுகாப்புத் தரப்புக்கு பெரும் சவால்தான்.

கொழும்பு கல்கிசையில் கரும்புலித் தாக்குதல் நடத்திய பெண்புலி, பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் போது நேரில் சமூகம் அளிக்கவில்லை. என்கிறது பாதுகாப்புத் தரப்பு.

பொலிசில் நேரில் சமூகம் அளித்து பெயர்களை பதிவு செய்தால் புலிகளை கண்டுபிடித்து விடலாம் என்பதுபோல பாதுகாப்பு தரப்பு கூறியுள்ளது.

இவை கெடுபிடிகளை நியாயப்படுத்தவும், தமது பலவீனங்களை மூடிமறைக்கவும் கூறப்படும் காரணங்களாகும்.

கொழும்பில் புலிகளது நடவடிக்கைகள் பலவற்றில் ஈடுபட்டவர்களில் பொலிசாரால் கைதாகி விடுதலையானவர்களும் இருந்துள்ளனர்.

கடற்படைத் தளபதி கிளன்ஸி பெர்னாண்டோமீது கரும்புலித் தாக்குதல் நடத்திய புலி உறுப்பினர், அதற்கு சில மாதங்களுக்கு முன்னர்தான் கொழும்பில் கைதாகி விடுதலையாகியிருந்தார்.

கொழும்பு மத்திய வங்கி தாக்குதலில் கைதான புலிகள் இருவர், வவுனியாவில் பொலிஸ் சோதனைகள், விசாரிப்புக்களைத் தாண்டியே கொழும்பு வந்தனர்.

எனவே, பொலிஸ் நிலையத்தில் நேரில் சமூகமளிப்பதாலோ, புகைப்படம் பெறுவதாலோ ஒருவர் புலியா இல்லையா என்பதை பொலிசாரால் கண்டுபிடிக்க முடியாது. அத்தகைய நடைமுறைகளால் புலிகளது ஊடுருவலை தென்னிலங்கையில் கட்டுப்படுத்தவும் இயலாது.

கெடுபிடிகளால் தமிழ் மக்களை அலைய வைக்கலாமே தவிர, புலிகளையோ, பண பலம் உள்ளவர்களையோ அலைய வைக்க முடியாது.

பணம் மூலம் பாஸ் வாங்கலாம். பதிவு வாங்கலாம். எந்தக் கெடுபிடிகள் ஊடாகவும் புகுந்து வெளியே வரலாம் என்பது ஒன்றும் பரமரகசியமல்ல.

தமிழ் மக்களுக்காக தாம் கெடுபிடிகளைத் தளர்த்துவது போன்றும், அதன் ஊடாக புலிகள் புகுந்து விடுவதாகவும் பாதுகாப்புத் தரப்பு சித்தரிப்பது சரியானதல்ல.

பாதுகாப்பு அமைப்புக்களில் உள்ள பல வீனங்களையும், ஓட்டைகளையுமே புலிகள் பயன்படுத்துகிறார்கள். இவற்றை அடைப்பது கடினம்.

இந்த ஓட்டைகள் ஊடாக தமது இரகசிய மையங்களை புலிகள் நாடெங்கும் விஸ்தரித்து வருகின்றனர்.

தற்போது சிறு குண்டு வெடிப்புக்களாக தெரிந்தாலும், கொழும்புக்கு வெளியே பாரிய தாக்குதலுக்குரிய ஒத்திகைகளாகவும் இவை இருக்கலாம்.

கொழும்பில் பிரதான கேந்திர நிலைகளை புலிகள் நெருங்க முடியாமல் இருக்கிறது.

அதனால்தான் மாகாண சபை தேர்தலுக்கு முன்பாக பாரிய தாக்குதல் எதனையும் புலிகளால் கொழும்பில் நடத்த முடியவில்லை.

கொழும்பில் கேந்திர நிலைகளைப் பாதுகாப்பதில் பாதுகாப்புத் தரப்பு கடந்த சில வருடங்களாக வெற்றிபெற்று வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரதான கேந்திர நிலைகளை தாக்க முடியாத நிலையில், வேறு விதமான பாரிய குண்டுத் தாக்குதல்கள் நடத்தி, உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்குமானால், அது அரசுக்கே சாதகமாக அமைந்திருக்கும். சாதாரண சிங்கள மக்களிடம் புலி எதிர்ப்பை உருவாக்கி, அரசுக்கு தேர்தலில் மேலும் சாதகத்தைக் கொடுத்திருக்கும்.

புலிகள் கேந்திர நிலைகளைத்தான் தாக்குவர், பொதுமக்களை இலக்காகக் கொள்ளமாட்டார்கள் என்ற அபிப்பிராயம் தற்போது சிங்கள மக்களிடம் தோன்றியுள்ளது.

பொதுமக்களது உயிரிழப்புக்களையும் ஏற்படுத்த முடியாது. பிரதான கேந்திர நிலைகளும் கடும் பாதுகாப்பில் உள்ளன. இத்தகைய நிலையில்தான் மின்மாற்றிகள், ரெலிகொம் நிலையங்கள், மற்றும் ரயில் பெட்டிகள் போன்ற இலக்குகள் தெரிவு செய்யப்படுகின்றன.

ஆனால் கொழும்புக்கு வெளியே பாரிய கேந்திர நிலைகள் புலிகளது தாக்குதல்களுக்கு இலக்காகும் அபாயம் இருக்கிறது.

சிறு தாக்குதல்கள் மூலம் ஒத்திகை பார்த்துவிட்டு, அடுத்த கட்டமாக பெரும் தாக்குதலுக்கு தயாராவது புலிகளது பாணி.



***

மடுவில் இராணுவ நடவடிக்கை கிறிஸ்தவ வாக்குகளைக் கவரும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டது என்று கடந்த வாரம் இதே பகுதியில் கூறியிருந்தோம்.

அதனை உறுதி செய்யும் விதமாக கொழும்பில் சுவரொட்டிகள் எங்கெங்கும் காணப்பட்டன. குறிப்பாக கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில் பெருமளவில் ஒட்டியிருந்தார்கள்.

மடு மாதா தேவாலயத்தின் புகைப்படத்தில் ஜனாதிபதி சந்திக்காவின் படத்தை ஒட்டி பிரமாண்டமான சுவரொட்டிகளாக தயாரித்திருந்தனர். அன்னை வேளாங்கன்னியின் படமும் அதில் காணப்பட்டது.

அந்தச் சுவரொட்டியில் பின்வரும் வாசகங்கள் காணப்பட்டன:

"சுதந்திரமான மடு யாத்திரை
கிறிஸ்தவர்களது உரிமை!
அந்த வரத்தைப் பெற்றுத் தந்த
ஜனாதிபதிக்கும், படை வீரர்களுக்கும்
மடு பிரதேச வாசிகளது ஆசிர்வாதம்!"

இந்தச் சுவரொட்டி ஒன்றே இன்றைய ஆட்சியாளரின் குணாம்சத்தை தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளப் போதுமானது.

மடுத் தேவாலயத்திற்கு முன்னர் கிறிஸ்தவர்கள் செல்வதற்கு தடை இருந்தது போல, அப்பட்டமான பொய்யை சுவரொட்டி கூறுகிறது.

அது மட்டுமல்லாமல், மடுவில் படையினர் நிலை கொண்டிருப்பதை மடுவில் உள்ள அகதிகளோ, தேவாலயத்தினரோ விரும்பவில்லை. கொழும்பு ஆயர், மன்னார். ஆயர் உட்பட பலரும், படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கோரியுள்ளனர்.

அவ்வாறிருந்தும் மடு பிரதேசவாசிகள் என்ற பெயரில் தென்னிலங்கை மக்களை ஏமாற்றும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'மடுவில் இருந்து படையினரை அகற்ற ஜனாதிபதி உத்தரவாதம்' என்ற செய்திகள் வெளியாகி இருந்தன. அதே ஜனாதிபதியின் உருவப் படத்தோடுதான் மடுவைக் கைப்பற்றியதை தேர்தல் பிரசாரமாக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'மடுவில் குளிர்பானக் கடை வைக்கக்கூட புலிகளை நாங்கள் அனுமதித்ததில்லை. இப்போது படையினர், ஆயுதங்களோடு நிற்கிறார்கள்' என்று மன்னார் ஆயர் கூறியிருக்கிறார்.

இராணுவ நடவடிக்கைகளுக்கும், ஆயுதங்களோடு நடமாட்டத்துக்கும் தடை விதிக்கப்பட்ட புனிதப் பிரதேசத்துக்குள் படையினர் சென்றமையே பெரும் தவறு.

இதேபோல் ஒரு நடவடிக்கையை பௌத்த புனித பிரதேசங்களுக்குள் அரசு மேற்கொண்டிருந்தால், அரசே ஆட்டம் கண்டிருக்கும்.

ஆனால், கிறிஸ்தவ தேவாலயப் பகுதிக்குள் சென்றதுமல்லாமல், அதனை நியாயப்படுத்தி வெற்றிப் பிரகடனமாக அரசு தேர்தல் பிரசாரமும் செய்துள்ளது.

தேர்தல் முடியும் வரையாவது படையினர் மடுவில் எவ்வாறெனினும் நிலைகொண்டிருக்க வேண்டும் என்பது படையினர் செய்த முடிவல்ல. அரச உயர்மட்டம் செய்த முடிவென்று நாம் கணித்ததில் தப்பில்லை.

படையினர்தான் இவ்வாறான நடவடிக்கைகளில் தம்மிஷ்டப்படி இறங்குவது போன்றும், ஆட்சியில் இருப்போருக்கு ஒன்றும் தெரியாதது போன்றும் சித்தரிப்போருக்கு மடு தேவாலய பிரசார சுவரொட்டிகள் நெத்தியடி கொடுத்துள்ளன.

***

வன்னியில் படையினர் அகலக் கால் வைத்து வருகையில், புலிகள் சிறு சிறு தாக்குதல்கள் மூலம் தொல்லை கொடுக்கும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

02.04.99 அன்று மன்னார் நானாட்டானில் விசேஷ அதிரடிப்படை அணிமீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

அதிகாலை 6.50 மணியளவில் மினி முகாமில் இருந்து ரோந்து சென்றவர்கள்மீதே புலிகள் தாக்கினார்கள்



# மன்னாரில் புலிகள் பாய்ச்சல்
# யாழ் குடாநாட்டில் கெரில்லாக்கள்

புலிகளின் நானாட்டான் பொறுப்பாளர் தலைமையில் பதினைந்து புலிகள் அடங்கிய குழுவினர் பண்ணை வெட்டான் என்ற பகுதிக்கு இரவோடு இரவாகச் சென்று அங்கு பதுங்கியிருந்தனர்.

இப்பகுதியில் விசேஷ அதிரடிப் படையினரின் ரோந்துகளை வேவு பார்த்தே தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டது.

அதிகாலை 6.50 அளவில் அதிரடிப் படையினர் ரோந்து சென்றபோது பதுங்கியிருந்த புலிகள் படையினரை தம் கைகளை உயர்த்தி சரணடையுமாறு குரல் கொடுத்தனர்.

விசேஷ அதிரடிப்படையினர் சரணடையாது குரல் வந்த திசை நோக்கி எதிர்த்து தாக்கத் தொடங்கினார்கள்.

இச் சண்டையின் முடிவில் நான்கு சடலங்களும் சில ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மன்னார் நானாட்டானில் பொது மக்கள் பார்வைக்கு சடலங்களும், ஆயுதங்களும் புலிகளால் வைக்கப்பட்டிருந்தன.

பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டன.

இத் தாக்குதலின் பின்னர் கட்டையடம்பன், தள்ளாடி, முருங்கன் ஆகிய முகாம்களில் இருந்து தாக்குதல் நடந்த பகுதி நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன.

இது குறித்து பாதுகாப்புத் தரப்பு விடுத்த அறிக்கையில், தமது தரப்பில் ஐந்துபேர் பலியானதாகவும், மூவர் காயமடைந்ததாகவும், ஐவர் காணாமல் போனதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. ரி.56 ரக துப்பாக்கிகள் 08, ரி.56-01 ரக துப்பாக்கி 01, ஜே.ஆர்.கைக் குண்டுகள் 10 ஆகியவை புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ரணகோஷ மூலம் படையினர் முன்றுமுறிப்பு பகுதியில் தமது நிலைகளை மேலும் பலப்படுத்தியுள்ளனர்.

எனினும் அங்குப் புலிகளது தாக்குதல் நிகழ்ந்துள்ளது. படையினரது முன்னரங்க நிலைகளை ஊடுருவித் தாண்டிய புலிகள், படையினரது போக்குவரத்து பாதையில் கண்ணிவெடி வைத்தனர்.

அதிகாலை 2.50 அளவில் நடந்த இத் தாக்குதலில் நான்கு விமானப்படையினர் பலியாகினர்.

வன்னியில் படையினர் அகலக்கால் வைத்து பரவியுள்ளதால் புலிகளது ஊடுவல்களுக்கும், சிறுசிறு தாக்குதல் மூலம் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தும் யுத்த உத்திகளுக்கும் கள நிலை சாதகமாகியுள்ளது.

படையினர் ரணகோஷ நடவடிக்கையை ஆரம்பித்தபோதே, புலிகளது ஊடுருவல்களுக்கு சாதகம் அதிகம் என்பதும் எதிர் பார்க்கப்பட்டதே.

யாழ் குடாநாட்டிலும் புலிகளது கெரில்லாத் தாக்குதல்கள் தீவிரம் பெறத் தொடங்கியுள்ளன.

கண்ணிவெடித்தாக்குதல், கைக்குண்டுத் தாக்குதல்கள் போன்றவை தொடராக இடம்பெற்று வருகின்றன.

யாழ் குடாநாட்டில் பளைப் பகுதியில் கண்ணிவெடித் தாக்குதலில் நான்கு படையினர் பலியாகியுள்ளனர். 03.04.99 அன்று இத் தாக்குதல் நடைபெற்றது.

இதேவேளை யாழ் நகரில் பெரும்

## நாரதர்

இலக்கொன்றுக்கு புலிகள் குறிவைத்துள்ளதாக நம்பப்படுகிறது.

அதற்காக பொறுமையாக காத்திருப்பதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமாக தமிழ்க் கட்சிகள் சார்ந்த இலக்காகவும் அது இருக்கலாம் என்று கூறப் படுகிறது.

இதேவேளை யாழ் குடாநாட்டில் படையினரும் இரவு வேளைகளில் பதுங்கியிருந்து புலிகளது நடமாட்டங்களை கண்காணித்து வருகின்றனர்.

யாழ் குடாநாடு முழுக்க பாரிய தேடுதல்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. தமிழ்க் கட்சி ஒன்றும் ஒத்துழைத்து வருவதாகத் தெரிகிறது.

அவ்வாறிருந்தும் புலிகளது ஊடுருவல்கள் குடாநாட்டில் அதிகமாகியுள்ளதாகவே தகவல்கள் கூறுகின்றன.

# அதிரடி அப்பாத்துரை



***ஜனாதிபதி, பண்டாரவளைக்குச்*** சென்ற ஹெலியில் ஏவுகணை எதிர்ப்பு கருவிகள் (ஹீற் பலூன்கள்) பொருத்தப்பட்டிருந்தன. ஏவுகணை ஏவப்பட்டால் திசை திருப்பும் பலூன்கள். அவை ஏதோ கோளாறு காரணமாக வெடித்ததால்தான் ஹெலி அவசரமாக தரையிறங்கியதாம். ஹீற் பலூன்கள் மத்தாப்பு மாதிரி வெடித்ததால், கூட்டத்தில் இருந்த சனம், ஜனாதிபதி வான வேடிக்கை காட்டியபடி வருவதாக நினைத்ததாம். பின்னர் பலருக்கு காயம் ஏற்பட்ட பிறகுதான் வேடிக்கையல்ல, விபரீதம் என்று தெரிந்தது. ஜனாதிபதிக்கு மட்டுமல்ல, ஜனாதிபதியை காண்பதற்கு செல்வோருக்கும் பாதுகாப்பு கவசமல்லோ தேவைப்படுகுது!

***தேர்தல் நெருங்க*** 'அதே இடத்தில் சேவை'யும் களை கட்டி விறுவிறுப்பாக நடந்தது. கொழும்பில் உள்ள வடக்கு-கிழக்கு மக்களுக்கு சேவையாம்? அதுக்கேன் வெளிநாட்டுத் தூதர்களும் அழைக்கப்படுகினம்? தமிழ் மக்களுக்கு துரித சேவைகள் கிடைப்பதாக நம்பிக்கொண்டல்லோ தூதர்கள் போகினம்? சேவை ஒரு நாள்தான் நடக்கும். மீதி நாட்களில் கொழும்பில் தமிழ் பேசும் மக்கள் படும்பாடு தெரியுமோ? கச்சேரி முதல் கடவுச்சீட்டு அலுவலகம்வரை ஒரு காரியம்கூட ஒழுங்காக ஒப்பேற்ற முடியாத நிலையல்லோ? அரச திணைக்களங்களை தமிழ் பேசுவோர்மீது அலட்சியம் காட்டாதிருக்குமாறு செய்தால், அது தினமும் சேவையல்லோ?!'

***பாரிஸ் கடன் வழங்கும்*** மாநாடு நடக்க இருப்பதால் காட்சி இரண்டு அரங்கேறியது அறிந்தீர்களோ? மாநாடு எப்போது முடிகிறது என்று பார்த்து அதற்கேற்ப நாடக மூன்றாம் காட்சிக்கு நாள் குறித்துள்ளனர். காட்டமாக கேள்வி எழுப்ப, இன்னொருவர் பதில் கூற, "ஆஹா நீதி!" என்று யாம் வாய்பிளக்க... காட்சி இரண்டு முடிந்தது. எதுவென்று புரியாதுவிட்டால் தோண்டிப்பாருங்கோ மூளையை! என்ன.... நீங்களும் பாரிஸ் மாநாட்டுக்குப் பிறகுதான் தோண்டப்போறியளோ மூளையை? உங்கள் நீதி நல்லாத்தான் இருக்கு?

***தேர்தல் கண்காணிப்புக்குழு,*** கைகுலுக்கு எல்லாம் கண்துடைப்பு என்று 'முரசு' படித்துப் படித்துச் சொன்னதல்லோ? வரவேற்ற 'டமில்' கட்சிகளது தீர்க்கதரிசனத்தை நினைத்தால் மெய் சிலிர்க்குது! இந்த மாதிரி இனப்பிரச்சனைத் தீர்வுக்கும் ஒத்துழைத்தால் நன்றாக இருக்கும் என்றவையல்லோ? எந்த மாதிரி ஒத்துழைத்திருக்கினம் பார்த்தியளோ? ஆளும் கட்சியும், எதிரணியும் ஒன்று சேருவது பற்றி இனி யாராவது கூறினால், 'அண்ணர் ஒரு பொய்யர்' என்று மனதில் குறித்துக் கொள்ளுங்கள்.

***தேர்தல் என்றாலே*** மோதல் இருந்தால்தான் களைகட்டும் என்பது மாதிரியாச்சு. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தேர்தலிலும் டுகம்.... டுகம்! சக்தியானவரின் மெய்க்காப்பாளர் பிரிவு அதிகாரியே நேரில் களத்தில் குதித்திருக்கிறார். சக்தியானவரது மாமனார் சார்பாகவே அவர் குதித்தாராம். அப்படியிருந்தும் தோல்விதான். ஆனால், ஒன்றுமட்டும் உறுதி! இந்தப் பதவிச் சண்டையிலே அடுத்த உலகக் கோப்பை கோவிந்தா! கோவிந்தா!

***ஆயிரம் ரூபாய்*** நோட்டை கையில் வைத்துக்கொண்டு, அதிஷ்டலாபச் சீட்டு இலக்கம் பார்க்கிறமாதிரி பத்திரிகையில் இலக்கம் தேடிக்கொண்டிருந்தார் நண்பர்! "எங்கள் நிலையைப் பார்த்தியளோ, கடத்தல் செய்து காசு பறித்தது யாரோ; தண்டனை எங்களுக்கு! இரண்டு கோடி ரூபாயில் இருபது இலட்சம் ஆயிரம் ரூபா நோட்டுக்கள் இருந்திருக்குதாம். நாங்கள் எப்படி கண்டு பிடிக்கிறது? வர்த்தக நிறுவனங்கள் பாடும் திண்டாட்டம்தான். இது என்ன சட்டம்?" என்று முணுமுணுத்தார்.

***கூட்டான கட்சிக்குள்*** நீலமானவர்மீது பலத்த புகைச்சல். பொதி என்று அவர் கூட்டுச் சேர்ந்து தயாரித்த சொதி கதை முடிந்து போச்சு. "அவருக்கு வெகுஜனசபை பதவி கொடுத்ததே சொதி வைச்சுத் தருவார் என்றுதானே? அது சரிப்பட்டு வராதபடியால் கதிரையை விட்டுப் போட்டு நடையைக் கட்டலாம்தானே?" என்று சொல்லுகினமாம்.

***இந்தவாரப்*** பொன் மொழி உபயம்- **விவேகானந்தர்.**

"சுத்தப்படுத்திக்கொண்டே
இருக்க வேண்டிய
குடி தண்ணீர்த் தொட்டி
உங்கள் மனமே!"

www.padippakam.com

## அரசியல் தொடர்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



ராஜீவ் கொலையை பகிரங்கமாக புலிகள் மறுத்தபோதும், அக் கொலை தவறானது என்றோ, தேவையற்றது என்றோ கூறவில்லை.

புலிகளுக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் மறுப்பறிக்கைகளிலும் காணப்படும்.

புலிகள் தமது நடவடிக்கைகள் சிலவற்றை மறுக்கவேண்டிய சூழலில் மறுத்துள்ளனர். அதற்காக அக் கொலைகளை கண்டிப்பதாகவோ, கொலையானவர்களை நல்லவர்கள் போல சித்தரித்தோ தம் மறுப்பை வெளியிடுவதில்லை.

ஏனைய இயக்கங்கள் தமது கொலையை மறுப்பது மட்டுமல்லாது, தம்மால் கொல்லப்பட்டவரை போலித்தனமாக பாராட்டிய சம்பவங்கள் பல உள்ளன.

ராஜீவ் கொலை நிகழ்ந்த தருணத்தில் யாழ் குடாநாட்டில் புலிகளது முக்கிய பிரசாரகராக இருந்தவர் யோகரத்னம் யோகி.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளரும் யோகிதான்.

'புலிகளின் குரல்' வானொலியில் 'மக்கள் அரங்கம்' என்னும் நிகழ்ச்சியை வாராவாரம் யோகி நடத்திவந்தார்.

ராஜீவ் கொலையை மறைமுகமாக நியாயப்படுத்த அவர் தவறவில்லை.

"ராஜீவ் என்ற மனிதரின் மரணம் தொடர்பாக இன்று பெரிதாகப் பேசப்படுகிறது. ஆனால், அந்த ராஜீவ் ஆட்சியில் இந்தியப் படை இங்கு எத்தனை மனித உயிர்களைப் பலிகொண்டது? எத்தனை பெண்களை தன் காம இச்சைக்கு பலியாக்கியது? பாரிய உயிரழிவுகள், உடமையழிவுகளை தமிழீழம் சந்தித்தது; அதனையும் எண்ணிப் பார்க்க வேண்டும்!" என்று மக்கள் அரங்கில் யோகி கூறியிருந்தார்.

ஆரம்ப காலத் தொண்டர். தந்தை செல்வாவின் சீடராக இருந்தவர்.

அகிம்சைப் போராட்டம் சரிப்பட்டுவராது என்று முதன் முதலில் ஆயுதப்போராட்ட சிந்தனையோடு இயக்கம் அமைக்கப் புறப்பட்டவர் அவர்தான்.

பொன்னாலை பாலத்தில் குண்டு வைப்பு உட்பட தீவிரவாத நடவடிக்கைகளுக்காக அவரைத் தேடினார்கள்.

தமிழ் நாட்டுக்கு தப்பிச் சென்றார். அங்கு உதவ யாருமில்லை. பட்டினி கிடந்து நோய் வாய்ப்பட்டார்.

இறுதியில் இறந்துபோனார். உயிருடன் இருந்தபோது அவருக்கு உதவி செய்ய தமிழரசு கட்சித் தலைவர்கள் முன்வரவில்லை.

அவர் இறந்த பின்னர் உடலை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவந்தனர். 'ஈழத்தின் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் எங்களை விட்டுப் போய்விட்டாரே' என்று அமிர்தலிங்கம் அறிக்கை விட்டார்.

இத் தலைவர்கள் பற்றி இராசரத்தினம் தனது நாட்குறிப்பில் எழுதிய குறிப்புக்களை ஏற்கனவே இத்தொடரின் ஆரம்பத்தில் தந்திருந்தோம்.

இராசரத்தினம் உயிருடன் இருந்தபோது இயக்கங்கள் வளர்ச்சி பெறவில்லை; எழுச்சி பெறவில்லை.

இராசரத்தினத்தின் மனைவியரில் ஒருவரது மகள்தான் தாணு.

புலிகள் இயக்கத்தில் இணைந்து பயிற்சி பெற்று, பெண்கள் அணியில் முன்னணிப் போராளியாகத் திகழ்ந்தார்.

தானாக முன்வந்து கரும் புலிகள் அணியில் இணைந்து கொண்டார்.

தினர் அதனைப் பெற்றுக்கொண்டனர்.

### அஞ்சலி

விடுதலைப் புலிகளின் வெளியீடுகள் சிலவற்றில் 'தாணு' என்ற பெயரில் ஆக்கங்கள் வெளிவருகின்றன. தாணுவின் நினைவாக அப் பெயரில் ஒருவர் எழுதிவருகிறார்.

புலிகள் இயக்கத்தில் பலியான முகம் தெரிந்த, முகம் தெரியாத கரும்புலிகள் நினைவாக 1996ல் நினைவு மலர் ஒன்று புலிகளால் வெளியிடப்பட்டது.

'உயிராயுதம்' என்ற மகுடமிடப்பட்டு வெளியான அந்த நூலில் தாணுவுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

பெயர் குறிப்பிடாது, சம்பவம் குறிப்பிடப்படாது, ஆண்டு, மாதம் திகதி எதுவும் குறிப்பிடப்படாது வெளியாகியுள்ள அஞ்சலி அந்த நூலில் அது மட்டும்தான்.

'அந்நிய தேசத்து ஆக்கிரமிப்பாளருக்கு எங்கள் தேசத்து சட்டத்தில்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள அந்த அஞ்சலிக் கவிதை இதுதான்:

"கண்ணுக்கெட்டாத தூரத்தில்
காற்றோடு காற்றாக
கலந்துவிட்ட
எங்கள் அன்புத் தோழியே!

சாவுக்குள்
உனை நுழைத்து
மகத்துவம் புரிந்துவிட்டு
மௌனித்துவிட்டாய்!

அந்நிய தேசத்து
ஆக்கிரமிப்பாளருக்கு
எங்கள் தேசச்சட்டத்தில்
இப்படித்தான்
விதிக்கப்பட்டுள்ளது
என்று
தீரச் செயலால்
தண்டனை கொடுத்த
திருப்தியுடன்
விழிகளை மூடி
வீரகாவியம்
படைத்து விட்டாய்!

ஈரம் செய்து
எங்கள் இமைகளை
நனைய வைத்தாய்!
சோகப் புயலுக்குள்
சுழன்று
தவிக்கவும் செய்தாய்!

ஆனாலும்,
ஆண்மைக்கு மட்டுமல்ல,
பெண்மைக்கும்
வீரமே பொருள் என
விடை கூற,
பெண்மையின் சாதனையை
பெருமையுடன் பேச,
எங்கள் பாதையின்
பெரும் தடைக்கல் ஒன்றை
தகர்த்தெறிய
இப்படி...
எத்தனையோ நல்லவை நடக்க
எரியும் மலையானாய்!

எதிரிக்கு
எமனும் ஆனாய்!
புதிருக்குள் புதிராகிப்
புரட்சிப் புயலான
எங்கள் பிரிய நண்பியே!

உன் இழப்பால்
எம் இதயம்
தவித்துத் துடிக்கிறது.
ஆனாலும்-உன்
மகத்துவ சாவால்
நிகழ்ந்ததை எண்ணி
எங்கள் நெஞ்சம்
பெருமை கொள்கிறது!"

என்று அஞ்சலியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பயன் கிடைத்தது. கூட்டம் ஒன்றில் சிவராசன் உரையாற்றும் காட்சி வீடியோ படம் ஒன்றில் இருந்து கிடைத்தது.

உலகத் தமிழரில் வெளியான தாணுவின் அதே புகைப்படமும் கிடைத்தது. புதுடில்லியில் கைதான ஆதிரை பெண் புலியாக ஆயுதத்துடன் காட்சி தரும் புகைப்படமும் மாட்டியது.

தாணு, சிவராசன் ஆகியோர் புலிகள்



20

சிவராசன்

செய்யப்பட்டது. மறுநாள் ராஜீவ் கொலையான ஒரு ஆண்டு நினைவு தினம்.

ராஜீவ் கொலை வழக்குக்காகவே தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

புலிகளின் தலைவர் பிரபா கரன், புலனாய்வுப் பிரிவு தலைவர் பொட்டம்மான் உட்பட 28 பேர்மீது வழக்குத் தொடுக்கப் பட்டது.

பின்னர் பிரபாகரன், பொட்டம்மான் ஆகியோர்மீதான வழக்கு தனியாக்கப்பட்டது.

அந்த 26 பேரில் பத்துப் பேர்

**அற்புதன் எழுதுவது**

இந்தியத் தமிழர்கள். 16பேர் இலங்கைத் தமிழர்கள்.

நீதிமன்றமும், நீதிபதியும் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்பதால் பலத்த பாதுகாப்பு செய்யப் பட்டது.

உயரமான சுவர்கள், முட்கம்பி வேலிகள், உயரமான கண்காணிப்புக் கோபுரம், ஆயுதமேந்திய

# தாணுவின் தந்தைக்கு பிரபாகரன் மரியாதை




ஆதிரை

இயக்க உறுப்பினர்கள்தான் என்பதை எப்படி நிரூபிப்பது என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு இப்புகைப் படங்கள் தக்க ஆதாரமாகக் கிடைத்தன.

சிவராசன் சென்னையில இருந்தபோது அரசியல் கட்சித் தலைவர்கள் பலரையும் சந்தித்திருக்கிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ்





தாணு கொடியுடன்

எனினும் புலிகளது வெளிநாட்டுக் கிளைகள் பலவற்றுக்கு ராஜீவ் கொலைக்கு யார் காரணம் என்பது சந்தேகமாகவே இருந்தது.

சிவராசனின் புகைப்படம் வெளியான பின்னர் அந்தச் சந்தேகம் பெருமளவு அகன்றுபோனது.

சிவராசன் புலிகளது நீண்டகால உறுப்பினர். சொந்தப் பெயர் பாக்கியச்சந்திரன். யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர். தந்தையார் ஓய்வு பெற்ற ஆசிரியர்.

வடமராட்சியில் புலிகள் இயக்க செயற்பாடுகளில் திறமையாக இருந்து பிரபாகரனின் நம்பிக்கையைப் பெற்றவர்.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். தலைவர் பத்மநாபா கொலைதான் தமிழ் நாட்டில் சிவராசன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பெரும்தாக்குதல்.

ராஜீவ் கொலை என்னும் முக்கிய பொறுப்பை கொடுப்பதற்கு முன்னர் சிவராசனுக்கு வைக்கப்பட்ட பரீட்சைதான் பத்மநாபா கொலை.

### தாணு யார்?

ராஜீவ் காந்தியை கரும்புலியாக சென்று தீர்த்துக்கட்டிய தாணு யார்? என்பதே இன்றுவரை மர்மமாக உள்ள விடயமாகும்.

நமக்குக் கிடைத்த தகவலின்படி, தாணு முத்த தலைவர் ஒருவரது அன்பு மகள்.

அந்தத் தலைவர் இப்போது உயிருடன் இல்லை. அவரது பெயர் இராசரத்தினம். யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

தாணு இறந்த பின்னர் அவரைத் தமது உறுப்பினர் என்று பகிரங்கமாக புலிகளால் கூறமுடியவில்லை.

ஆனால் பிரபாகரன் தாணுவுக்குக் கொடுத்த மரியாதை யாரும் அறியாதது.

தாணு இறந்த பின்னர்தான் முத்தமிழ்விழா யாழ் குடாநாடெங்கும் கொண்டாடப்பட்டது.



அமரர் ராசரத்தினம்

அந்த விழாவின் இறுதி நிகழ்ச்சியை இராசரத்தினம் பிறந்த மண்ணான சாவகச்சேரியில் நடத்துமாறு கூறியிருந்தார் பிரபாகரன்.

அந்த முத்தமிழ் விழாவில் மாமனிதர்கள் என்று கௌரவிக்கப்பட்டவர்களில் முதலாமவர் அமரர் ராசரத்தினம்.

அந்த விழாவில் பிரபாகரனே நேரடியாக கலந்துகொண்டு மாமனிதருக்குரிய விருதை வழங்கினார். இராசரத்தினத்தின் குடும்பத்

### தாணு படம்

தாணு இறந்த பின்னர் கனடாவில் இருந்து வெளியாகும் உலகத் தமிழர் பத்திரிகையில் சம காலக் கண்ணோட்டம்' என்ற தலைப் பில் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது.

அதில் சில புகைப்படங்கள் பிரசுரமாகியிருந்தன. அதில் ஒரு படத்தில் கையில் புலிக் கொடியோடு தாணு நிற்கும் காட்சி பிரசுரமாகியிருந்தது.

அப் புகைப்படத்தை வெளியிட்ட கனடா உலகத் தமிழர் அமைப்புக்கு, அதுதான் தாணு என்பது தெரிந்திருக்கவில்லை. கனடாவில் இருந்த புலிகளுக்கு தாணுவைத் தெரியாது.

ஆனால் அப் புகைப்படம் பற்றிய தகவல் இந்தியாவில் சிறப்பு புலனாய்வுக் குழுவினருக்கு கிடைத்திருக்கின்றது.

அதனையடுத்து புலிகளிடம் சென்னையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை குறிப்பாக புகைப்படங்கள், வீடியோ படங்களை துருவித் துருவிப் பார்த்துள்ளனர்.

### புகைப்பட ஆதாரம்

சிறப்பு புலனாய்வுக் குழுவின் துருவலுக்கு

கமிட்டி தலைவராக இருந்த வாழப்பாடி ராமமூர்த்தியையும் சிவராசன் சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொண்டதாகவும், அப் புகைப்படத்தை சிறப்புப் புலனாய்வுக் குழு மறைத்துவிட்டது என்றும் கூறப்பட்டது.

எப்படியோ ராஜீவ் கொலை விடயத்தில் புலிகளுக்கு தொடர் இழப்புக்களும், தோல்விகளும் ஏற்பட்டன.

குறி சரியாக அமைந்ததே தவிர, அதன் பின்னர் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் தப்ப இயலவில்லை.

கொலைக் காட்சியை படம் எடுக்க போட்ட திட்டம்தான் முழுத் திட்டத்தையும் அம்பலமாக்கியது. அந்தக் கமரா மட்டும் இல்லையானால், சிறப்புப்புலனாய்வுக் குழுவால் துல்லியமாக உளவறிந்திருக்க முடியாது.

### கொலை வழக்கு

ராஜீவ் காந்தி கொலை வழக்கு 1992ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி புதன்கிழமை சென்னை தனி நீதிமன்றத்தில் தாக்கல்

காவலர்கள் என்று ஏராளமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தன.

சென்னை பூந்தமல்லியில் சிறைச்சாலை ஒன்று இருந்த வளாகத்திலேயே நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

### கமிஷன்கள்

இதனிடையே ராஜீவ் கொலை பற்றி ஆராய ஜெயின் கமிஷன், வர்மா கமிஷன் ஆகியனவும் அமைக்கப்பட்டன.

ராஜீவ் படுகொலையில் சதி இருந்ததா? உள்நாட்டு சதியா? வெளிநாட்டு சதியா? பாதுகாப்பில் ஓட்டைகள் இருந்ததா? என்பதை ஆராய்வதுதான் இக் கமிஷன்களது நோக்கம்.

இந்தியப் பிரதமராக நரசிம்மராவ் அப்போதிருந்தார்.

இவற்றில் வர்மா கமிஷன் முதலில் தனது அறிக்கையை வெளியிட்டது.

(தொடர்ந்து வரும்)





படிப்பகம்

www.padippakam.com

அலசுவது - இராஜதந்திரி

# இரட்டை நிலைப்பாடுகளும் இடைக்கிடையே ஒன்று கூடலும்

கொழும்பில் தமிழ்க் கட்சிகள் ஒன்று கூடியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான செய்திகள் தொடர்பாக தமிழ் மக்களிடையே எவ்வாறான எதிர்பார்ப்புக்களும் தற்போது காணப்படுவதில்லை.

தமிழ்க் கட்சிகள் என்று தற்போது கூறப்படும் அமைப்புக்களிடம் தற்போது குறிப்பிடத்தக்க கொள்கைகள் எதனையும் காணமுடியவில்லை.

தாம் ஜனநாயக நீரோட்டத்தில் இருப்பதாக இக் கட்சிகள் பல திரும்பத் திரும்ப கூறிவருவதில் இருந்தே இவற்றின் அரசியல் வலுமையை புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

ஆயுதம் ஏந்திய போராட்டங்களும் ஜனநாயகப் போராட்டங்களேயாகும். ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும்போது, ஒடுக்கப்படும் மக்கள் ஜனநாயகத்துக்காகவும் ஆயுதம் ஏந்த வேண்டியவர்களாகிறார்கள்.

உலகெங்கும் அடக்கப்படும் மக்களது ஆயுதப் பேராட்டங்கள் ஜனநாயகப் போராட்டங்களாகவே இருந்துள்ளன.

ஜனநாயகப் போராட்டங்கள் தொடர்ந்து பழைய வழிகளில்- அதாவது ஊர்வலம், சத்தியாக்கிரகம், சாலை மறியல், சட்டமறுப்பு போன்ற ஆயுதமேந்தாத வழிகளில் முன்னேற முடியாதவாறு தடுக்கப்படும்போதே ஆயுதமேந்திய போராட்ட வடிவமாகத் தொடர்கிறது.

அவற்றை பயங்கரவாதப் போராட்டமாக அடக்குமுறை ஆட்சியாளர்கள் சித்தரிப்பது உலகெங்கும் பொது நிகழ்வாக இருந்துள்ளது.

ஆயுதம் ஏந்தியதை ஜனநாயகமற்றது என்று முன்னர் ஆயுதமேந்தியவர்களே சித்தரிக்கும் விசித்திரமான நிகழ்வை இங்குதான்- தமிழ்க்கட்சிகள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

அன்றும், இன்றும் தமிழ்க் கட்சிகளிடம் உள்ளவேறுபாடுகள் யாவை? குறிப்பாக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் காணப்படும் வேறுபாடுகள் யாவை?

1. தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டமை.
2. அரசுக்கு எதிரான ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டமை.
3. தேர்தல் அரசியலுக்குள் புகுந்தமை.

இந்த மூன்றும்தான் 1987க்குப் பின்னர் தமிழ்க் கட்சிகளிடம் ஏற்பட்ட மாற்றங்களாகும்.

அரசுக்கு எதிராக இவை ஆயுதம் ஏந்திப் போராடவில்லையே தவிர, புலிகளுக்கு எதிராக மட்டுமன்றி, தமது சக இயக்கங்கள், மற்றும் சகாக்கள்மீதும் ஆயுதங்களை பிரயோகித்தே வருகின்றன.

ஆனால், தாம் புலிகளுக்கு எதிராக தற்பாதுகாப்புக்கு மட்டுமே ஆயுதம் ஏந்துவதாக இக் கட்சிகள் கூறிவருகின்றன. இக் கூற்றில் உண்மை உள்ளதா இல்லையா? என்பதை சமீபத்திய இயக்க மோதல்கள் துல்லியமாக எடுத்துக்காட்டியிருந்தன.

அதேபோல, தேர்தலில் ஈடுபடுவதைத்தான் ஜனநாயகம் என்று இக் கட்சிகள் கருதுமானால், அக் கருத்துக்கும் மாறான தேர்தல்களிலேயே இக் கட்சிகள் போட்டியிட்டு வருகின்றன.

முன்னாள் போராளிக் கட்சிகளான இந்நாள் மிதவாத கட்சிகள், வடக்கு-கிழக்கில் இதுவரை போட்டியிட்ட தேர்தல்கள் யாவுமே ஜனநாயக நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறான தேர்தல்களேயாகும்.

யாழ் குடாநாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்கூட சுதந்திரமற்ற சூழலில் நடைபெற்ற தேர்தலேயாகும். யாழ் குடாநாட்டில் ஜனநாயகம் உள்ளதாக அரசு பொய்யாக சித்தரிக்க துணைபோனமையை ஜனநாயகப் பாதை என்று கூறுவது வடிகட்டின முட்டாள்தனமாகவே இருக்கும்.

எனவே, ஜனநாயக நீரோட்டம், ஆயுதத்தை கைவிட்டமை, தேர்தலில் போட்டியிட்டு ஜனநாயகப் பாதையில் நடத்தல் என்றெல்லாம் தமிழ்க் கட்சிகள் கூறும் கருத்துக்கள்கூட, அவற்றின் நடைமுறைகளோடு பொருந்தத் தக்கனவாக அமைந்திருக்கவில்லை.

எனவே, அவ்வப்போது தம் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு வியாக்கியானம் கூறுகின்ற கடைந்தெடுத்த சந்தர்ப்பவாத அரசியலே தற்போது மேலோங்கியுள்ளது.

அரசின் இராணுவத் தீர்வு முனைப்பால் இன்று தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் ஜனநாயக விரோதமான சூழ்நிலையை, தமது நலன்களில் இருந்தும், அந்த நலன் சார்ந்த தமது விருப்பங்களில் இருந்துமே இக் கட்சிகள் நோக்குகின்றன.

**அரசுக்கும் தமிழ்பேசும் தரப்புக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடாகும்**

உதாரணமாக, வன்னியில் மடுத் தேவாலயப்பகுதி புனிதப் பிரதேசமாகும். அங்கு படையினர் ஆயுதங்களுடன் நிலைகொண்டமை இக் கட்சிகளுக்கு பாரதூரமான ஒரு பிரச்சனையாகத் தெரியவில்லை.

ஜனநாயக உரிமைகளில் ஒன்று வழிபாட்டு உரிமை. அந்த உரிமைக்கே ஆப்பு வைக்கப்படுவதை இந்த ஜனநாயக நீரோட்டக் கட்சிகள் கருத்தில் கொள்ளவில்லை.



மக்கள் தாமாகவே போராட்டங்களில் இறங்கியுள்ளனர். இவற்றில் போலித்தனமில்லை. போர்வைகள் இல்லை.

ஏனெனில், அதனை காட்டமாக எதிர்த்தால் தம்மை புலிகளது அனுதாபிகள் என்று படையினர் கருதிவிடுவார்களோ என்று நினைக்கின்றனர். அவ்வாறு கருதினால் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் தமக்குச் சலுகைகள் கிட்டாது என்றே நினைக்கின்றனர்.

தமிழ் மக்களது அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவே தாம் பாடுபடுவதாக இக் கட்சிகள் வாய் ஓயாது கூறிவருகின்றன.

மடுவில் 30 ஆயிரம் அகதிகள் உள்ளனர். இவர்களுக்கு மலசல கூடங்கள் போதியளவு கிடையாது. வெளியே சென்றுதான் தங்கள் இயற்கை உபாதைகளைக் கழித்தாக வேண்டும்.

இந்நிலையில் படையினர் மடுவில் நிலைகொண்டபின்னர் பெண்கள் பெரும் துயர் அடைந்தனர். அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

இந்தப் பாரதூரமான பிரச்சனை அன்றாடப் பிரச்சனையாக தமிழ்க் கட்சிகளுக்குத் தெரியவில்லை.

தற்போது தேர்தல் வெற்றிக்காக இலக்கற்ற படை நடவடிக்கைகளை வன்னியில் அரசு முடுக்கிவிட்டிருந்தது. குடியிருப்புக்களை நோக்கி ஷெல்கள் ஏவப்படுகின்றன. இதனால் பல்லாயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவையெல்லாம் அன்றாடப் பிரச்சனைகளாக தமிழ்க் கட்சிகளுக்குத் தோன்றவில்லை. அடுத்த தடவை தாம் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ள பகுதிகளில் இருக்கக்கூடிய அன்றாடப் பிரச்சனைகள் பற்றியே இக் கட்சிகள் அதிகம் பிரஸ்தாபிப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வன்னியில் தமிழ்க் கிராமங்கள் பலவற்றில் புல்டோசரால் இடிக்கப்பட்டு வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.
தமிழர்களது வயல்களில் சிங்கள விவசாயிகள் அறுவடை செய்கிறார்கள். படிப்படியாக அப் பிரதேசங்கள் அயலிலுள்ள சிங்களக் கிராமத்தவரால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து எந்தவொரு தமிழ்க் கட்சியும் பிரஸ்தாபிக்கவில்லை. தரைப்பாதை திறப்புக்கு என்று ஆரம்பித்த படை நடவடிக்கை, தமிழ்க் கிராமங்கள் ஊடாக- இலக்கற்றுச் செல்வதை நிறுத்துமாறு போராடுவதற்கு தமிழ்க் கட்சிகள் முன்வரவில்லை.

ஆட்சியாளர்கள் தமது தேர்தல் வெற்றிக்காகவே, இலக்கற்ற படை நகர்வுகளை மேற்கொண்டனர் என்பது சாதாரண மக்களுக்கே நன்கு தெரிந்திருக்கிறது. அவ்வாறிருந்தும் அதனைச் சுட்டிக்காட்டவோ, கண்டிக்கவோ தமிழ்க் கட்சிகள் முன்வரவில்லை.

யாழ் குடாநாட்டில் உள்ள வாக்காளர்களை கவருவதற்காகவே வலிகாமம் காணிச் சுவீகரிப்பிற்கு எதிராக தமிழ்க் கட்சிகள் போட்டி போட்டு அறிக்கைகள் வெளியிட்டன.

எனவே, அன்றாடப் பிரச்சனைகளுக்காக பாடுபடுவதாக இக் கட்சிகள் கூறிவருவதும், தமிழ் பேசும் மக்களது அடிப்படை அபிலாசைகளுக்காக அரசை எதிர்த்துப் போராட முடியாத தமது இயலாமையை மூடிமறைப்பதற்கேயாகும்.

தமிழ்க் கட்சிகள் தற்போது எடுத்துவருகின்ற நிலைப்பாடுகள் தமிழ் பேசும் மக்களது அபிலாசைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதில்லை. அந்தந்த கட்சித் தலைமைகளது அபிலாசைகளது அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

தற்போதைய காலகட்டத்தில் தமிழ்க் கட்சிகள் இடையே கொள்கைகளிலோ நடைமுறைகளிலோ வேறுபாடு கிடையாது. அவ்வாறிருந்தும் ஐந்து கட்சிகளாக அவை இருப்பதற்குக் காரணம், ஐந்து தலைமைகள் இருப்பதேயாகும்.

ஐந்து கட்சியும் ஒன்றுபட்டால் தலைமையில் இருப்பது யார் என்ற பிரச்சனைக்கு இந்த உலகில் யாராலும் தீர்வு காணமுடியாது.

பெரிதோ, சிறிதோ தாமும் ஒரு கடை நடத்தினால்தான் முதலாளியாக இருக்கலாம் என்ற மனப்போக்குக்கு ஒத்ததே இதுவாகும். எனவே, சரக்கு இருக்கிறதோ இல்லையோ, தனிக் கடைகளை இழுத்து மூடுவதற்கு யாரும் தயாராக இல்லை. தொடர்ந்து குட்டி முதலாளிகளாக இருக்கவே விரும்புவர்.

இந்த மனப்போக்குத்தான் இன்று தமிழ்க்கட்சிகள் ஐந்தாக இருப்பதற்கும் காரணமாகிறது; நிரந்தர ஒற்றுமையின்மைக்கும் காரணமாகிறது.

எனவே, தற்போது தமிழ்க் கட்சிகள் கூடிப்பேசுவது தற்காலிக காட்சிகளேயாகும். நிரந்தமான இணக்கம் இவற்றுக்கிடையே ஏற்படமாட்டாது.

சமீபத்தில் இக் கட்சிகள் கூடியபோது எடுக்கபட்ட தீர்மானங்களை உற்று நோக்கும்போது ஐக்கியம் தொடர்பாகவும் தெளிவான நிலைப்பாடு இவற்றுக்குக் கிடையாது என்பது தெளிவாகிறது.

அமைப்புகளிடையே ஐக்கியம் என்பது இரண்டுவிதமான அடிப்படைகளில் ஏற்பட முடியும்.

(1) அடிப்படைக் கொள்கைக்களுக்காக ஒன்று சேர்ந்து போராடுவது.

(2) உடனடியான பிரச்சனைக்குத் தீர்வுகான ஒன்றுபட்டுச் செயற்படுவது.

தமிழ்க் கட்சிகள் கூடிப்பேசி வெளியிட்ட தீர்மானங்களை நோக்கினால், உடனடியான சில பிரச்சனைகளையிட்டே கூறப்பட்டுள்ளன.

ஆனால், உடனடியான பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஒன்றுபடுவதாயினும், யாருக்கு எதிராக ஒன்று சேருவது என்பதில் தெளிவு இருந்தாக வேண்டும்.

உடனடிப் பிரச்சனை என்பது வானத்தில் இருந்து தனியாகக் குதிக்கும் பிரச்சனையல்ல.

யுத்தத்தின் பக்க விளைவுகளே இன்றைய அன்றாடப் பிரச்சனைகளாகும். யுத்தம் நிறுத்தப்படாதவரை இப்பிரச்சனைகள் முற்றாக தீரப்போவதில்லை. மேலும் தோன்றிக்கொண்டே இருக்கப்போகின்றன.

யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாக பேச்சை ஆரம்பிக்க ஆட்சியாளர்கள் மறுத்து வருகின்றனர். புதிய பெயர்களில் இராணுவத்தீர்வை மூர்க்கமாகத் தொடர்ந்து வருகின்றனர்.

எனவே உணவு அனுப்புமாறு கோருவது மட்டுமே அன்றாடப் பிரச்சனை பற்றிய அக்கறையாகாது. அன்றாடப் பிரச்சனைக்கு காரணமான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு போராடுவதே அன்றாடப் பிரச்சனைக்கு நிரந்தரப் பரிகாரமான கோரிக்கையாக அமையமுடியும்.

அன்றாடப் பிரச்சனைகள் விடயத்திலாவது தமிழ்க் கட்சிகள் உறுதியான நிலைப்பாடு எடுக்கவேண்டுமானால், அரசு தொடர்பான ஒரு தெளிவான முடிவுக்கு அவர்கள் வந்தாக வேண்டும்.

வன்னி படையெடுப்பு, யாழ் காணி சுவீகரிப்பு, செம்மணி நாடகம் உட்பட பல அன்றாட அவலங்கள் ஆட்சியாளரால் தமது நலன்களுக்காகவும், பேரினவாத நலன்களுக்காகவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும்.

எனவே, ஆட்சியாளருக்கு எதிராகப் போராட துணிந்தால் மட்டுமே, மேற்கண்ட பிரச்சனைகளில் உறுதியான நிலைப்பாட்டுக்கு வரமுடியும்.

ஆனால், தமிழ்க் கட்சிகள் அரசையும், படையினரையும் நோகாமல் கிள்ளத் தயாராக உள்ளனவே தவிர, அவற்றை எதிர்த்துப் போராட முன்வரப்போவதில்லை.

தீர்வுப் பொதிக்கு தாம் கொடுத்த யோசனைகள் குப்பைத் தொட்டிக்கு அனுப்பப்பட்டதையே தமிழ்க் கட்சிகள் எதிர்க்கத் துணியவில்லை.

எனவே, அன்றாடப் பிரச்சனைகள் விடயத்திலும் இவை மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக அமையப்போவதில்லை.

சமீபகாலமாக தமிழ்க் கட்சிகள்மீது பலத்த அதிருப்திகள் தமிழ் மக்களிடையே தோன்றியுள்ளன. அத்தகைய அதிருப்திகள் இக் கட்சிகள் ஏன் இருக்கின்றன? என்ற கேள்விக்கும் இட்டுச் சென்றுள்ளது.

எனவே, தமது இருப்புப் பற்றியே கேள்வி எழுந்துள்ள நிலையில்தான், தமது இருப்பை நியாயப்படுத்த இக்கட்சிகள் ஒன்றுகூடலையும், அதுபற்றிய செய்திகளையும் வெளியிட்டு வருகின்றன.

தாமும் தமிழ் மக்கள்மேல் அக்கறை உள்ள கட்சிகளே என்று நிரூபித்தாக வேண்டும் என்ற கட்டாயமே இக் கட்சிகளை உதட்டளவிலான ஒற்றுமைப் பேச்சுக்களுக்கு நிர்ப்பந்தித்துள்ளன.

**"தமது இருப்பை நிலை நிறுத்தும் அவசியம் ஏற்பட்டதாலேயே ஒன்றுகூடலுக்கு தமிழ்க் கட்சிகள் முன்வந்தன!"**

ஒரு குறிப்பிட்ட காலகட்டம்வரை இக் காட்சிகள் அரங்கேறும். பின் முறியும். மீண்டும் இதே நிர்ப்பந்தம் ஏற்படும்போது மறுபடி இதே காட்சிகளை காணக்கூடியதாகவிருக்கும்.

எனவே, இத்தகைய ஒற்றுமைகளால் அரசியல் திருப்பம் எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. தமிழ் பேசும் தரப்புக்கு நன்மைகள் கிட்டப்போவதும் இல்லை.

இன்றைய காலகட்டத்தில் பிரதான முரண்பாடு என்பது, ஆட்சியாளருக்கும் தமிழ் பேசும் தரப்புக்கும் இடையேயுள்ள முரண்பாடேயாகும். இந்த முரண்பாட்டுக்கு தீர்வுகாணும் அரசியல் போராட்டங்களுக்கு தமிழ்க் கட்சிகள் தயாராக இல்லாதவரை இவற்றின் முழக்கங்களாலோ, ஒற்றுமையாலோ பயன்கள் ஏதும் நேரப்போவதில்லை.

அரசுக்கு வாலும், தமிழ் மக்களுக்கு தலையும் காட்டும் இரட்டை நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகள் முதலில் கைவிட்டாகவேண்டும்!

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

தமிழ்க் கட்சிகள் கொழும்பில் ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் கூடி, நொறுக்குத்தீனி சகிதம் வன்னி மக்களது உணவுப் பிரச்சனை பற்றி அக்கறைப்பட்டுவிட்டு, அதனை பத்திரிகைகளுக்கும் மறக்காமல் அனுப்பிவைத்தன.

கூட்டணி சார்பில் பெரும் தலைகள் யாரும் முதல் கூட்டத்துக்கு ஆஜராகவில்லை. கூட்டணியில் சமீபகாலமாக முன்னுக்கு வந்துள்ள ரவிராஜ் ஆஜர்.

ஆனால் பத்திரிகைகளில் கூட்டணிக்குத்தான் முக்கியத்துவம்! புலிகள் தம்மீது கோபப்படுவார்கள் என்பதால்தான் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கை கோர்க்க கூட்டணி பெரும் தலைகள் பகிரங்கமாக முன்வருவதில்லை.

அந்தப் பயம் மட்டும் இல்லையென்றால் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டுவைத்தே அவற்றை ஓரங்கட்டிவிட கூட்டணியால் முடியும்.

சம்பந்தரோ, நீலனோ கூட்டத்தில் கலந்து கொண்டால் அவர்கள் பெயர்கள்தான் பத்திரிகைகளில் முதலிடம் பெறும். ஏனைய கட்சித் தலைவர்கள் துணைப்பாத்திரங்களாகவே இடம்பெறுவர்.

இதனாலேயே, வாழ்க்கை வெறுத்துப் போய், ஏனைய கட்சிகள் "ஐக்கியம் போதும், நன்றி வணக்கம்" என்று நழுவிப்போகவும் கூடும்.

ஆகவே, பெரும தலைகள் கலந்து கொள்ளாது விட்டால் ஐக்கியம் மேலும் சில மாதங்களாவது தொடர வாய்ப்புண்டு.

-●●-

யாழ் குடாநாட்டில் தொலைபேசி ஒதுக்கும் போது முதலிடம் படையினருக்கு, இரண்டாமிடம் மக்களுக்கு, மூன்றாமிடம் அரசியல்வாதிகளுக்கு.

மேற்கண்ட உத்தரவை எழுத்துமூலமாக வெளியிட்டுள்ளாராம் யாழ் மாவட்ட படைத்தளபதி.

இதனைப் பார்த்ததும், பாதுகாப்புக்கு துணைப் பொறுப்பானவரின் கவனத்திற்கு கொண்டு சென்றார் தமிழ்க்கட்சி தலைவர் ஒருவர்.

அதற்கு துணைப்பாதுகாப்பு அதிகாரம் உள்ளவர் கூறிய பதில் என்ன தெரியுமோ?

"அப்படிச் செய்யுமாறு நாம் கூறவில்லை. சரி, அப்படித்தான் செய்வது என்றாலும் இப்படியோ விவேகமில்லாமல் எழுத்துமூலம் உத்தரவு போடுவது?"

தமிழ்க்கட்சித் தலைவருக்கு அந்தப் பதில் ஒரு மாதிரியாகிவிட்டதாம்.

-★-

வவுனியாவில் யூகோசலாவியாவில் அமெரிக்காவின் தாக்குதலைக் கண்டித்து புளொட் போராட்டம் நடத்தியுள்ளது.

ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு தோன்றாத இந்த யோசனை புளொட்டுக்கு தோன்றியது பாராட்டத்தக்கது.

### ஐந்து நட்சத்திர ஐக்கியம்

ஆனால், அமெரிக்கத் தாக்குதலுக்கு எதிரான மகஜரை இலங்கை ஜனாதிபதிக்கு ஏன் அனுப்பி வைத்தார்கள்?

எதற்கெடுத்தாலும் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பும் பழக்கதோஷம்தான் காரணமோ?

வவுனியாவில் புளொட்-அமெரிக்கக் கொடியை எரித்தது. ஆனால் கொழும்பில் அமெரிக்க தூதரக விருந்துகளில் புளொட் பங்குகொள்ள தவறுவதில்லை. இதனையும் நிறுத்தினால் என்ன?

-★-

வவுனியா நகரசபைத் தலைவர் லிங்கநாதன் புளொட் முக்கியஸ்தர். ஆனால் கட்சி பேதம் இல்லாமல் பலராலும் பாராட்டப்படுபவர். அடுத்தமுறை போட்டியிட்டால்கூட லிங்கநாதன் வெற்றி பெறுவார். ஆனால் போட்டியிடும் உத்தேசம் இல்லையாம்.

தனது ஊதியத்தை கட்சிக்கே கொடுத்திருக்கிறார். வெளிநாட்டில் உள்ள நண்பர்கள், உறவினர்களது உதவியில்தான் சீவியம்.

வவுனியாவில் குறிப்பிடும்படியான பல நல்ல காரியங்களைச் செய்துள்ளார். நூல் நிலையம், பொதுப் பூங்கா, தாய்-சேய் பராமரிப்பு நிலையம், பொது மயானங்கள் போன்றவை அதில் அடங்கும்.

சமீபத்தில் பிரியாவிடை நடந்தது. கலந்துகொண்ட பலரும் நெகிழ்ந்து பாராட்டினார்கள்!

-●●-

"பொதுத் தேர்தலுக்கு முன்னர் யுத்தத்துக்கு முடிவு கட்டுவோம். அதன்பின்னர்தான் வாக்குக் கேட்டு வருவோம்" என்று கூறியிருக்கிறார் ஜனாதிபதி.

'அப்படியானால் பொதுத் தேர்தல் நடக்கவே நடக்காதா?' என்று நாடெங்கும் வினாக் கணைகள்!






படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 56

**கடந்தவாரம்**

**பிரிட்டிஷ் பிரஜை ஒருவர்மீது குற்றம்சாட்டி வழக்குத் தொடரப்படுகிறது. வழக்கை விசாரித்த நீதியரசர் பிரிட்டிஷ் பிரஜையை விடுதலை செய்கிறார். அதனால் அந்த நீதியரசரை கொலை செய்கிறான் அமீன்.**

**இனி....**

# இடி அமீன்

மக்கெரெரே பல்கலைக்கழக உபவேந்தராக அமீனால் நியமிக்கப்பட்டவர் ;'.பிராங்க் கலிமுஸோ.

அவருக்கும் அமீனது பெண் மந்திரவாதிக்கும் இடையே பழைய பகை ஒன்று இருந்தது.

மந்திரவாதிகளின் ஏமாற்றுகளை பேராசிரியர் கலிமுஸோ மக்களிடையே பிரசாரம் செய்துவந்தார்.

அப்போது அந்தப் பெண் மந்திரவாதியுடனும் தர்க்கங்கள் எழுந்தன. அந்த நேரத்தில் அவளுக்கு அரச ஆதரவு இருக்கவில்லை.

இப்போதோ அமீன் அவளது கட்டளைக்காக காத்திருக்கிறான். சந்தர்ப்பம் கிடைத்தபோதே தனது எதிரிகளைப் பழிவாங்கத் துடித்தாள்.

அவளது முதல் குறி பேராசிரியர் கலிமுஸோ.

அமீன் அவளிடம் அன்றும் வாக்குக் கேட்க வந்திருந்தான்.

அவனை ஒரு குழந்தைபோல் தன் மடியிலே தலைவைத்துப் படுக்கவைத்தாள். அவனது உடலெங்கும் தைலம் தடவினாள். உடம்பின் சகல பாகங்களையும் ஸ்பரிசித்தாள்.

அமீன் அப்படி ஒரு வருடலை இதுவரை அனுபவித்ததில்லை போன்று உணர்ந்தான்.

அந்த நேரம் பார்த்து அவள் அருள் வாக்குக் கூறுவதுபோல தன் பழிவாங்கும் படலத்தை நிறைவேற்ற ஆரம்பித்தாள்.

"மகனே! படித்த விற்பன்னன் ஒருத்தனால் உன் ஆட்சிக்கே ஆபத்து! அவன் ஒரு வாரத்திற்குள் நாட்டை விட்டு ஒடப் போகிறான். உன் ஆட்சியைப் பற்றி உலகெங்கும் பொய்யும், புரட்டும் கூறப்போகிறான். உனக்குப் பெரும் இழுக்குக் காத்திருக்கிறது!"

அவள் கூறியதும் அமீன் திடுக்கிட்டுப் போனான்.

"உங்களால் இதற்குப் பரிகாரம்கூற முடியதா?" என்றான்

பதிலுக்கு அவள் சிரித்தாள். "பரிகாரம் உனக்கே தெரியும். தெரியாதது போல கேட்காதே. உன் வழியிலேயே தீர்வு காண் அப்பனே! எல்லாவற்றையும் நான் கூறமுடியாது. கூறவும் அனுமதியில்லை. உன் பாதை உன்னுடையது. அதில் முட்கள் உன் கண்களுக்குத் தெரியாதபோது, காண்பித்து எச்சரிப்பது மட்டும்தான் என் வேலை!"

வழக்கம்போல் அல்லாது புதுவிதமாக பேராசிரியரைக் கொல்லத் திட்டமிட்டான் அமீன்.

பேராசிரியர் வீட்டைச் சுற்றி காவல் போடப்பட்டது. தான் கட்டளையிட்ட பின்னரே அவரைக் கைது செய்ய வேண்டும் என்று அமீன் உத்தரவிட்டிருந்தான்.



பேராசிரியர் கலிமுஸோவுக்கு தன்னைச் சுற்றி கொலைவலை வீசப்பட்டிருப்பது தெரியாது.

இன்னும் சில மணிநேரங்களில் தான் காணாமல் போகப்போவதும் தெரியாது

வழக்கம்போல அன்று மாலையும் வானொலிச் செய்தியை கேட்டபடி இருந்தார்.

அப்போதுதான் அச் செய்தி ஒலிபரப்பாகியது. அவரது முதுகில் யாரோ கத்தியால் குத்தியதுபோலிருந்தது.

"மக்கெரெரே பல்கலைக் கழக உபவேந்தர் ;'.பிராங்க் கலிமுஸோ திடீரென்று காணாமல் போய்விட்டார்.

அவரைத் தேடும் பணி நடந்து வருகிறது. இச் சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்தவர்கள் பொலிஸ் தலைமையகத்துக்கு தெரியப்படுத்தலாம்."

பேராசிரியர் கலிமுஸோ தொலைபேசியை நோக்கி ஓடினார். அமீனுடன் தொடர்பு கொள்ள இலக்கங்களை சுழற்றினார்.

தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்தது.

தனக்கு நேரப்போகும் விபரீதம் அவருக்குப் புரிந்துபோனது.

அன்றைக்கு என்று பார்த்து அவரது மனைவி அயல் ஊருக்கு சென்று விட்டாள். தனியாகத்தான் இருந்தார்.

வீட்டைவிட்டு முதலில் வெளியேற வேண்டும் என்று முடிவு செய்தார்.

தனக்கு அவசியம் தேவையான ஒன்றிரண்டு துணிகளும் வேறு சில பொருட்களையும் ஒரு பையில் எடுத்து வைத்துக் கொண்டார்.

வீட்டுக்கதவைப் பூட்டி, சாவிக் கொத்தை கையில் எடுத்தபோது, பூட்ஸ் சப்பாத்துக்களின் சரசர ஓசை.

திரும்பியபோது அவர் காக்கி நிழல்களால் சூழப்பட்டிருந்தார். பொலிசார் அவரைக் கைது செய்ய வந்திருந்து வீட்டுக்கு வெளியே பதுங்கி இருந்தனர்.

தப்பிச் செல்ல முயன்றால் பாய்ந்து அமுக்குமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது.

பொலிஸ் வாகனம் ஒன்றில் அவர் ஏற்றப்பட்டார். அதன்பின்னர் அவருக்கு என்ன நிகழ்ந்தது என்பதை யாரும் அறியவில்லை.

"காணாமல் போனதாகவே இருக்கட்டும். அதனால் அவர் உடலை யாரும் காணமுடியாதபடி எரித்துவிடுங்கள்!" என்று அமீன் உத்தரவு போட்டிருந்தான்.

அதேசமயம் மக்கெரெரே பல்கலைக் கழகத்தில் அவரது உருவப்படத்தை திறந்து வைக்குமாறும் உத்தரவு போட்டிருந்தான்.

"பேராசிரியர் கலிமுஸோ மிகச் சிறந்த கல்விமான். அவரை கொன்றவர்கள் பயங்கரவாதிகள் என்பதில் சந்தேகம் கிடையாது. உகண்டாவின் கல்விக்கு குழி பறிக்க நினைக்கும் சதி முயற்சிதான் எங்கள் கல்வி அதிபதியை காணாமல் போகச் செய்ததும்!" என்று இரங்கல் செய்தி ஒன்றும் விடுத்திருந்தான்.

நீதியரசர், பேராசிரியர் இருவரும் காணாமல் போனதைப் போன்று தொடர்ந்தும் பலர் காணாமல் போயினர்.

காணாமல் போனோரது உறவினர்கள் அங்கலாய்த்துத் திரிந்தனர். அவர்கள் சார்பாக வாதாடுவதற்கும், நலன்களைக் கவனிப்பதற்கு என்றும் சட்டத்தரணிகள் சிலர் சுளையாக சம்பாதித்தனர்.

நீதிமன்றத்தில் மனுப்போடுவதுதான் அவர்களது வேலை. மனுப்போட்டால் காணாமல் போனவர்கள் திரும்பவந்துவிடுவார்கள் என்று நம்பி இந்தச் சட்டத்தரணிகள் கேட்கும் தொகையை உறவினர்கள் கொடுத்தனர்.

இன்னொரு குழுவும் இருந்தது. காணாமல் போனதாக கூறப்படுவோரின் உடல்களை கண்டெடுத்துக் கொடுப்பதுதான் இந்தக் குழுவின் தொழில்.

காணாமல் போனவரது குடும்ப நிதி நிலையைக் கணிப்பிட்டு, அதற்கேற்ப பணம் வாங்கிக் கொள்வார்கள்.

தருவது ரசிகன்

இந்தக் குழுவினர் சிலருக்கு அமீனின் படைகளோடும் தொடர்பு இருந்தது. தம்மால் கொல்லப்பட்டவரது உடலை எங்கு போட்டிருக்கிறார்கள் என்று படை அதிகாரிகள் சிலர் இந்தக் குழுவுக்குத் தகவல் கொடுத்து விடுவார்கள்.

அங்கு சென்று உடல்களை எடுத்துவந்து குடும்பத்தினரிடம் கொடுத்து பணம் வாங்கிக் கொள்வர். அதில் ஒரு பகுதி தகவல் கொடுத்த படை அதிகாரிகளுக்குப் போய்விடும்.

அமீனின் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதானவர்களை மீட்டுத்தருவதற்கு பல குழுக்கள் இருந்தன.

இந்தக் குழுக்கள் படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு நிறையப் பணம் தந்தன.

இதனால் கைதுகள் அதிகரித்தன. யாரைக் கைது செய்தால் பணம் அதிகமாகக் கறக்கலாம் என்ற தகவலையும் அதே குழுக்களைச் சேர்ந்தவர்களே பொலிசாருக்கு கூறி வந்தனர்.

இதனைவிட வேறு பல சபல நோக்கங்களுடனும் கைதுகள் நடந்தன. கணவனைக் கைது செய்தால் மனைவி அழுதபடி பொலிஸ் நிலையத்திற்கு ஓடிவருவார்.

கணவனைக் கொல்லப்போவதாக மிரட்டி, மனைவியை தமது ஆசைக்கு இணங்கவைப்பார்கள்.

நாடெங்கும் இவ்வாறான சீர்கேடுகள் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தும் பகிரங்கமாக அமீன் ஆட்சியை எதிர்க்க யாரும் துணியவில்லை. எதிர்த்தால் உயிர் மிஞ்சாது என்று தெரிந்தும், எதிர்க்க துணிந்த அதிகாரிகளும் இருந்தனர்.

உகண்டாவின் தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவர் வெக்சிரோ. செயலாளர் திடமுலாலா.

பத்துமாடிக் கட்டடத்தில் இதன் அலுவலகம் இயங்கிவந்தது.

நஷ்ட ஈடு கொடுக்குமாறு அமீன் சிபாரிசு செய்த பலருக்கு நஷ்டஈடு கொடுக்க காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மறுத்துவிட்டது.

அமீனுக்கு ஆச்சரியம் கலந்த கோபம். தன்னை எதிர்த்தவர்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் தன் முடிவுக்கு மாறாக செயற்படத் துணிகிறார்களே என்று ஆச்சரியம். சொன்னதும் நஷ்ட ஈடுகொடுக்கவில்லையே என்று கோபம்.

"இங்கே என்னைவிட நீங்கள் உயர்ந்த பதவியில் இருக்கிறீர்களா? அப்படியானால் என் நாற்காலியிலும் நீங்கள் வந்து அமரலாமே!" என்றான் கேலியாக?

அவன் கேலியாகப் பேசியது காப்புறுத்திக் கூட்டுத்தாபன செயலாளருடன்.

அவர் மரியாதையாக "தாங்கள் தவறாக நினைக்கக்கூடாது. நாங்கள் எங்கள் கடமையத்தான் செய்தோம்!" என்று கூறினார்.

அமீன் கடகடவென்று சிரித்தான். "உங்கள் கடமை உணர்ச்சியை நான் மெச்சுகிறேன்! இப்படி சகல அதிகாரிகளும் இருந்தால் உகண்டாவை யாரும் அசைக்க முடியாது. உங்கள் கடமையைச் செய்யுங்கள். யாராவது குறுக்கிட்டால் நீங்கள் தாராளமாக என்னுடன் தொடர்பு கொள்ளலாம்!" என்று தொலைபேசியிலேயே பாராட்டினான்.

காப்புறுதிக்கூட்டுத்தாபன தலைவரும், செயலாளரும் மகிழ்ந்தனர்.

"அமீன் நல்லவர். சிலர்தான் அவரைத் தவறாக வழி நடத்துகிறார்கள். அமீனிடம் எடுத்துக் கூறினால் பிரச்சனைகள் தீர்ந்துவிடும். நாங்கள் முதலிலேயே அவருடன் பேசியிருக்க வேண்டும்!" என்று கூட்டுத்தாபனத் தலைவர் கூறினார்.

அவர்களது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. தலைவரதும், செயலாளரதும் அறைகளுக்குள் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று புகுந்தது.

முன்னர் நீதியரசரைக் கொண்டு சென்றதுபோல, மாடிப்படிகளில் அவர்கள் இருவரையும் தரதரவென்று இழுத்துச் சென்றனர்.

இழுத்துச் செல்லப்படும்போது கடுமையாகத் தாக்கினார்கள். வந்தவர்கள் அமீனின் ஆட்கள் என்பது தெரிந்ததால் பயத்தில் யாரும் குறுக்கிடவில்லை.

வெளியே தயாராக நின்ற வேனில் இருவரையும் தூக்கிப் போட்டுக்கொண்டு பறந்துவிட்டனர்.

நகுரு என்னும் பகுதியில் உள்ள முகாமுக்கு இருவரையும் கொண்டு சென்றனர்.

முகாமை அடைய முன்னரே செயலாளர் திடமுலாலாவின் உயிர் பிரிந்துவிட்டது. அடி தாங்காமல் இறந்து போனார்.

அன்றைய மாலைச் செய்தியில் அவர்களது கைது பற்றி அறிவிக்கப்பட்டது.

"தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவரும், செயலாளரும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்டனர். செயலாளர் உடல்நலம் இன்றி இருந்தார். அதனால் கைதாகிய சில மணி நேரத்தில் அவர் இறந்துவிட்டார்."

செய்தியைக் கேட்கும்போதே அது அப்பழுக்கில்லாத பொய் என்பதை அனைவருமே புரிந்து கொண்டார்கள்.

கணவனைப் பறிகொடுத்து புலம்பிக் கொண்டிருந்தார் திருமதி திடமுலாலா.

அவரிடம் பொதுப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் சென்றனர்.

அவர்கள் குடியிருக்கும் வீட்டை அரசிடம் ஒப்படைப்பதாக தயாரிக்கப்பட்ட பத்திரத்தில் கையொப்பம் போடுமாறு கோரினார்கள்.

"இது அவரது சொந்த வீடு. இப்போது அவரும் இல்லை. ஒப்படைத்துவிட்டு நான் எங்கு போவது? தயவு செய்து கருணை காட்டுங்கள்!" என்று மன்றாடினார் மனைவி.

"கணவன் போன இடத்திற்கு உங்கள் மூன்று பிள்ளைகளும் போகத்தான் வேண்டும் என்றால், நீங்கள் கையெழுத்திடாத பத்திரத்துடன் நாங்கள் போகிறோம்!" என்றனர்.

அந்த மிரட்டலில் பயந்து போன மனைவி அவர்கள் காட்டிய இடங்களில் கையொப்பம் வைத்தார்.

காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவருக்கும் கொடூரமான அனுபவங்கள் காத்திருந்தன.

(இடி தொடரும்)

## ரசியர்கள் எதிர்ப்பு

யூகோசிலாவியாமீது அமெரிக்கா குண்டு வீசியதை ரசியா முன்னணியில் நின்று கண்டித்துள்ளது.

ரசிய மக்களும் அமெரிக்க அரசை கண்டித்து வருகிறார்கள். ரசியாவில் அமெரிக்கத் திரைப்படங்கள் பார்ப்பதை மக்கள் தாமாக நிறுத்தியுள்ளனர்.

ரசிய திரையரங்குகளில் அமெரிக்கப் படங்களுக்குப் பதிலாக யூகோசுலாவியப் படங்கள் திரையிடப்பட்டுள்ளன.



கிளின்ரனுக்கு உற்ற நண்பராக இருந்தவர் ரசிய அதிபர் யெல்ட்சின்.

ரசிய மக்களது அமெரிக்க எதிர்ப்பைக் கண்டதும், யெல்ட்சினும் அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.



## சமூக சேவை

ஹொலிவூட்-திரையுலகில் அதிக ஊதியம் பெற்ற நடிகைகளில் ஒருவர் ஷெரோன் ஸ்டோன்

கவர்ச்சியான கதாநாயகியாக இரசிகர்களை மட்டுமன்றி, பிரபல நடிகர்களையே மயக்கியவர் ஷெரோன்.

தற்போது சமூகசேவைகள் செய்து வருகிறார். எய்ட்ஸ் நோயாளிகளுக்கு டயானா உதவி செய்தது போல, இவரும் பல உதவிகளைச் செய்து வருகிறார்.

தற்போதும் இளமையாக இருந்தாலும் கூட, கவர்ச்சி காட்ட ஆர்வமில்லையாம். தனது கணவருடன் பொதுச் சேவைகளில் ஈடுபடவே ஆர்வம் காட்டுகிறார்.

இச் செய்திகளை வெளியிட்டுள்ள ஹொலிவூட் சினிமா சஞ்சிகை மேலும் ஒரு தகவலையும் வெளியிட்டுள்ளது.

முன்னாள் காதலர்கள் சிலரை இப்போதும் ஷெரோன் இரகசியமாகச் சந்திப்பது உண்டாம். அது பொழுது போக்குக்காக!

## ரோபோ துணை

ஜப்பானில் உள்ள முதியவர்களது தனிமையைப் போக்க வந்துள்ளன ரோபோக்கள். இந்த இயந்திர பொம்மைகள் முதியவர்களுக்குத் துணையாக இருந்த பேருதவி புரிகின்றன.



பிள்ளைகள் வேலைக்குப் சென்றுவிட்டால், வீட்டில் துணையின்றி எழுந்து நடமாட முடியாத முதியவர்கள் என்ன செய்வார்கள்?

அவர்களுக்காகவே இந்த ரோபோ பொம்மைகள் தயாராகியுள்ளன.

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று விளங்கிக் கொண்டு செயற்படவல்லவை.

ஒரு கிலோ எடையுள்ள இந்த ரோபோ பொம்மைகள் நாய், பூனை, கரடி, புலி, மனிதர் போன்ற பல வடிவங்களில் செய்யப்பட்டுள்ளன.

காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும் காலை வணக்கம் சொல்லுகின்றன.

ஜப்பானில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களது எண்ணிக்கை 2025ம் ஆண்டில் உயரப் போகிறது. அதனைக் கருத்தில் கொண்டே இந்த ரோபோக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

## திரையரங்க மரியாதை

அரசியல்வாதிகள்தான் மக்களை ஏமாற்றுவார்கள். அந்த அரசியல்வாதிகளே ஏமாந்து நின்றால்...?

தமிழ் நாட்டில் சென்னையில் ஒரு சுவாரசியமான சம்பவம் நடந்துள்ளது.



சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேர் சினிமா பார்க்க 'ஆல்பேட்' திரையரங்குக்கு சென்றுள்ளனர்.

அவர்களைக் கண்டதும் ஒருவர் தடபுடலாக வரவேற்றாராம். தமது கட்சிக்காரர்தான் வரவேற்கிறார் என்று அவர்களுக்கும் குஷி.

அந்த ஆசாமியே நுழைவுச் சீட்டும் எடுத்துக் கொடுத்தாராம்.

உள்ளே படம் பார்க்க அமர்ந்தவர்களுக்கு குளிர்பானமும் தருவித்துக் கொடுத்தாராம்.

குளிர்பானம் குடித்த சிறிது நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மயக்கமானார்கள். அவர்களது கடிகாரங்கள், தங்கச் சங்கிலி, பணம் போன்ற உடமைகளை நிதானமாக சுருட்டிக் கொண்டு அந்த ஆசாமி கம்பி நீட்டிவிட்டார்.

கிட்டத்தட்ட இதே மாதிரியான காட்சி சமீபத்தில் வெளியான 'ஹவுஸ் புல்' படத்திலும் வருகிறது. அப்படி இருந்தும் ஏமாந்து போயுள்ளனர். ஓசி என்றால் பல்லைக் காட்டும் புத்திதான்: இப்படி ஏமாறவும் காரணம்.

## வானில் பிரசவம்

கென்யாவைச் சேர்ந்த கிரேஸ் என்டான்யூ என்ற பெண் கர்ப்பவதியாக இருந்தார்.

சம்பவ தினத்தன்று விமானம் மூலம் இலண்டனில் இருந்து அபுதாபிக்குப் பயணம் மேற்கொண்டார். விமானம புறப்பட்ட சிறிது நேரத்திற்குள்ளாகவே அவருக்குப் பிரசவ வலி தோன்றி விட்டது. அதிர்ஷ்டவசமாக அப்போது அந்த விமானத்தில் அவருடன் மூன்று டாக்டர்கள் பயணம் செய்தனர்.



அவர்கள் பிரசவம் பார்த்தனர்.

அந்தப் பெண்ணுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் ஒன்று ஆண், மற்றது பெண் குழந்தை. அதன் பிறகு விமானத்தை பத்திரமாக சைப்பிரசில் தரையிறக்கினார் விமானி.

## ஸ்ரீநாத்தின் காதலி



கிரிக்கெட் வீரர்கள் காதல் சர்ச்சைகளில் சிக்குவது புதுமையல்ல. இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் பலரும் அவ்வாறு சர்ச்சைகளில் சிக்கியுள்ளனர்.

ஆனால் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீநாத்மட்டும் காதல் விவகாரங்களில் சிக்கியதில்லை.

அது எப்படி? என்பதற்கு அவரே பதில் கூறுகிறார் இப்படி:

"இந்த முகத்தை இதுவரை யாரும் காதலிக்க வரவில்லை. இங்கே உள்ள பூங்காவுக்குப் போய், 'நான் தயார், காதலிக்க நீங்கள் தயாரா? என்று அழைக்கவா முடியும்? அதெல்லாம் ஜோக். நான் புத்தகங்களைத்தான் காதலிக்கிறேன். அது போதும். தொந்தரவு இல்லாத காதலி. 'அதை வாங்கிக்கொடு, இதை வாங்கிக்கொடு' என்று உபத்திரவம் செய்யாத காதலி.

அடுத்த வருடம் எனக்கும் கல்யாணம் நடக்கும். வீட்டில் பெண் பார்த்திருக்கிறார்கள். நான் அவளை இன்னமும் பார்க்கவில்லை." என்கிறார்.


ஸ்ரீநாத் இப்படி தன்னைத்தானே கிண்டல் செய்தாலும், மனிதர் அடுத்தவர்களுக்கு உதவுவதில் முன் நிற்பவர்.

இந்திய அணியில் பிரசாத், ஜோன்சன், மொகந்தி, ரமேஷ்போன்றோர் விளையாட தோள் கொடுத்து உதவியதே ஸ்ரீநாத்தான்.



படிப்பகம்

www.padippakam.com




## மூக்கழகு

↑ 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்ற கருத்தை பேரறிஞர் டார்வின் வலியுறுத்தினார். உலகளாவிய ரீதியில் இக்கூற்று ஒப்புக்கொள்ளப்பட்டபோதும். சிலர் இதனை ஏற்க மறுக்கின்றனர்.

டார்வினின் பரிணாம வளர்ச்சியின்படி பார்த்தால் பல உண்மைகள் வெளிப்படும். முக்கியமாக மிருகங்களுக்குள் குரங்குகளுக்கு கண்கள்- மனிதர்களைப் போன்று முகத்தின் முன்பக்கத்தில் அமைந்துள்ளன. பொதுவாக வேறு பல மிருகங்களின் கண்கள் முகத்தின் இருபக்கங்களிலும் காணப்படுகின்றன.இரு கண்களும் ஒரே கோணத்தை நேரடியாகப் பார்ப்பதானால், குரங்குகளின் பார்வை மிகவும் கூர்மையானது.

உலகில் வழக்கொழிந்து போகும் குரங்குவர்க்கத்தின் ஓர் எடுத்துக்காட்டு படத்தில் காணப்படும் 'பெருமுக்குக் குரங்கு' பொதுவாகக் குரங்குகளுக்கு முஞ்சி நீளமாகவும் சிறு துவாரங்களுள்ள மூக்குமே காணப்படும். இந்தப் பெருமுக்குக் குரங்குக்கு மட்டும் நீண்டு அகன்ற மூக்குக் காணப்படுகிறது. இதன் மோப்ப சக்தியும் அதிகம்.

## உச்சியிலிருந்து



↘ குமிழ் போல அழகாக காட்சிதரும் இந்த 'டவர்' குவைத் நாட்டில் இருக்கிறது. இதன் உயரம் 187 மீட்டர். உச்சத்தில் உள்ள குமிழ்வரை உயர்த்தி ('லிஃப்ட்') மூலம் செல்ல முடியும்.

உச்சியில் சுற்றிலும் கண்ணாடியிலான அரங்கம் உள்ளது. அங்கிருந்து பார்த்தால் குவைத் நாட்டை கண்களால் மேயலாம். கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்கு சொந்தமில்லை என்றும் பாடலாம். இதன் அருகே சிறிதாக உள்ளது டவர் அல்ல. டவரை எடுப்பாக காட்டுவதற்கு நிறுவப்பட்ட அலங்காரத்தூண்தான் அது.

உலகில் மிக உயரமான டவர் கனடாவில் இருக்கிறது. சி.என்.டவர். அதன் உயரம்: 553. 54 மீட்டர். (1815 அடி 5 அங்)

## ஊதியம்

↓ஒரு திரைப்படத்துக்கு உலகிலேயே மிகக் கூடுதலான சம்பளம் வாங்கும் நடிகையாக டெமி மூர் என்ற நடிகை கணிக்கப்பட்டுள்ளார். இவர் ஒரு படத்துக்கு வாங்கும் தொகை- ஒரு கோடி 50 இலட்சம் டொலர். நம் நாட்டு மதிப்பில் சொன்னால் இதயத்துடிப்பு எகிறும் 105 கோடி ருபாய்கள்!

1962ம் ஆண்டில் பிறந்த மூர். தனது 20வது வயதில் தொலைக்காட்சித் தொடரான 'ஜெனரல் ஹொஸ்பிட்டல்' (பொது மருத்துவமனை) என்ற படத்தில் முதன் முதலாகத் தோன்றினார். இப்பொழுது 26 திரைப்படங்களில் நடித்துத் தனது நிலையினை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளார்.

இவற்றில் பல வெற்றிப் படங்கள். டெமி மூர் என்பது இவருடைய 'திரைபுனை பெயர்'. இயற் பெயர் டெமட்றியா கைனஸ். சக நடிகரான புரூஸ் வில்லிஸ் என்பவரை 1987ல் தனது துணைவராக ஏற்றுக் கொண்டார். தற்போது விவாகரத்து பெற்றுவிட்டார்.

டெமிமூர் ஹொலிவூட் பட ரசிகர்களின் கனவுக்கன்னி. இந்த கனவுக்கன்னி நிர்வாணமாக நடித்தும் தன் ரசிகர்களை மகா ஜொளளர்களாக்கியவர். ஜொள்ளர்கள் கூட்டம் அலைமோதும் என்பதால்தான் இத்தனை கோடி ஊதியமாக கொடுக்கிறார்கள் தயாரிப்பாளர்கள். மேலதிக தகவல் ஒன்று: ஹொலிவூட் திரைப்படங்களில் சிறந்தவற்றையும்



சிறந்த நடிகர் நடிகைகளையும், சிறந்த தொழில் நுட்பவியலாளர்களையும் ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து ஒஸ்கார் விருது வழங்குகிறார்கள். சிறந்த நடிகர்களுக்கான ஒஸ்கார் விருதுகளை இரு தடவைகள் மொத்தம் 7 நடிகர்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்களுள் ஜாக் நிக்கலசன் என்பவரும் ஒருவர். இவர் சிறந்த நடிகர் விருதுகளை இரு தடவைகள் வென்றது மட்டுமல்லாமல் 9 தடவைகள் சிறந்த துணை நடிகருக்கான விருதுகளையும் வென்று சாதனை படைத்துள்ளார்.

சிறு வயதிலேயே பள்ளிப்படிப்பை இடைநிறுத்திவிட்டு தனது பாட்டியாரின் பண்ணையில் பணிபுரிந்தார், தனது பாட்டியையே தாயென்றும் தாயைத் தனது அக்காவென்றும் கருதியே நீண்ட காலம் வாழ்ந்தவர் ஜாக் நிக்கல்சன்.







## ஒரே காலில்

↑ ஒற்றைக் காலில் மூன்று முழு நாட்கள் நின்று உலக சாதனையை நிலை நாட்டியுள்ளார் ஒருவர். இந்தியாவின் பீஹார் மாநிலத்தைச் சேர்ந்தவரான அம்ரேஷ்குமார் ஜா என்பவரே இச்சாதனையை நிலை நாட்டி கின்னஸ் புத்தகத்தில் தன் பெயரைப் பதிவு செய்தவராவார்.

1995ம் ஆண்டு செப்டம்பர் 13ம் திகதி முதல் 16ம் திகதிவரை 71 மணி 40 நிமிடம் வரை அம்ரேஷ்குமார் தனது இடது காலை நிலத்திலோ அல்லது வேறு பொருளிலோ வைக்காமல் வலது காலில் மட்டும் நின்றிருக்கிறார். இவர் தனது கைகளையோ உடம்பின் பிறிதொரு பகுதியையோ- எந்த வேளையிலும் ஆதாரமாகப் பிடிக்கவே இல்லை. நம் நாட்டிலும் யாழ் குடாநாட்டைச் சேர்ந்த ஆழிக்குமரன் ஆனந்தன், அழகராசா சிறிஸ்கந்தராசா, பரீட் நசீர் ஆகியோர் ஒற்றைக் காலில் நின்று முன்னர் உலக சாதனை படைத்தனர்.

இந்தியாவில் போபால் நகரைச் சேர்ந்த ராதே ஷியாம் பிரஜாபதி என்பவர், மற்றுமொரு உலக சாதனை புரிந்திருக்கிறார். அவர் ஆடாமல் அசையாமல், அவயவங்களை சிறிதளவுகூட அசைக்காமல் 18 மணி 5 நிமிடம் 50 நொடிகள் சிலைபோல நின்றிருக்கிறார்.

போபால் நகரிலுள்ள காந்திபவான் மாளிகையில் இச்சாதனை நிலை நாட்டப் பட்டது.



## ஞாபகம் இருக்கிறதா

### அண்ணே! ஞாபகம் இருக்கிறதா?

↑ ஞாபகம் இருக்கிறதா கண்ணே! ஞாபகம் இருக்கிறதா? கெஞ்சிக் கேட்டாலும் பல சமாச்சாரங்கள் மறந்துதான் போகின்றன! (சிலருக்கு கடன் கொடுத்தது ஞாபகம் இருக்கும். கடன் வாங்கியது மறந்திருக்கும்) ஞாபக சக்தி என்பது ஒரு கொடை. ஒரு புத்தகத்தை படித்துவிட்டு, மறுபடி ஒருவரி விடாது நினைவு வைத்திருந்து உங்களால் கூறமுடியுமா? இவரால் முடியும். ஒன்று, நூறல்ல, மொத்தம் ஐயாயிரம் நூல்களை மனப்பாடம் செய்து வைத்திருக்கிறார். எந்தப் பக்கத்தில் எதனைக் கேட்டாலும் டான் டான் என்று பதில் கூறுவார். (இதைத்தான் கரைத்து குடிப்பது என்று கூறுவார்களோ?)

இதில் இன்னொரு ஆச்சரியம், என்ன தெரியுமா? 12 வயது வரை இவருக்கு எழுதப்படிக்கவே தெரியாது. பின்னர் தான் படித்தார். ஐயாயிரம் நூல்களை கரைத்துக் குடித்தார். ஞாபக சக்தியில் இது உலக சாதனை. இந்த சாதனையாளர் பெயர்: ஜான் கிறிஸ்டியன் ஸ்மட்ஸ். தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர். அவரை பேட்டி காண்கிறார் பி.பி.சி செய்தியாளர்.

## பல் மீன்



→ பார்த்தாலே பயங்கரம் உண்டாகும் தோற்றமுடைய மீனின் வாய் இது. சுறா இனத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்த இம்மீன்வாயில் காணப்படும் பற்கள் ஏனைய மீன்களின் பற்களைப் போல் உணவைச் சப்பிச் சாப்பிடுவதற்காக மட்டும் பயன்படுவதில்லை.

இரையையோ உண்ணக் கூடிய தாவரங்களையோ கொழுவி இழுத்துக் கொண்டு போய், பிறிதோரிடத்தில் வைத்துச் சுவைக்கவும் இப்பற்கள் உதவுகின்றன.

மீனினங்களில் பல விசித்திரமான வாழ்க்கையை அனுசரிக்கின்றன. 'ஏஞ்சலா' மீன் வகையில் ஆண் மீன்கள் பெண் மீன்களைவிட சுமார் 20 மடங்கு சிறியவை.

இச் சின்னஞ்சிறிய ஆண் மீன் மிகப் பெரிய தன் இணையின் பின்பகுதியைக் கவ்விக் கொண்டே திரியும். பெண் மீனின் இரத்தத்தை உறிஞ்சியே தன் பசியைத் தணித்து வாழ்க்கை நடத்துகின்றன.

பெண் மீனின் உடலைக் கவ்விக் கொண்டிருப்பதை ஒரு தடவையாவது ஆண்மீன் தவறவிட்டால் மீண்டும் அதனை பெண் மீன் ஏற்காது. வேறோர் புதிய இணையினை பெண்மீன் தேர்ந்தெடுத்துக் கொள்ளும். பிடியைத் தளர விட்ட ஆண் மீனை வேறு எந்தப் பெண் மீனும் ஏற்க மாட்டாது என்பதனால் உயிர் விடுவதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை. என்னே ஒரு சோக முடிவு பாத்தீர்களா? மனித இனத்தில் மட்டுமா? மீன் இனத்திலும் காதல் சோகங்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பது அதிசயமாக உள்ளதல்லவா!



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 98

# நடிகைகளின் சொந்த சோகம்
## வேறு வழியின்றி நாடும் தீர்வு

தமிழ்நாட்டிலிருந்து மயன்

ஃபயர் திரைப்படம் நூறாவது நாள் கண்டிருக்கிறது. இப்போதும் கூட்டம் அலைமோதுகிறது. பெண்கள்தான் எக்கச்சக்கம். பெண்ணுக்கும், பெண்ணுக்கும் காதல் என்பது தீர்வல்லதான். ஆனால் ஃபயர் படத்தில் வரும் கணவர்கள் போன்றவர்களுக்கு எதிராக வேறு என்னதான் செய்வது? என்பது பலரது வாதம்.

இதேவாதத்தை திரையுலக நடிகைகள் சிலரும் முன்வைக்கிறார்கள். இங்கிருந்து தமிழ்நாட்டில் வெளிவரும் பிரபல சினிமா சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ள தகவல்கள் இவை.

"திரையுலகில் செல்வச் செழிப்போடு சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவரும் நடிகைகள் ஒரு வகையில் பரிதாபத்துக்குரியவர்கள்.

வெளித்தோற்றத்துக்கு பணத்தில் புரள்பவர்கள்போலத் தெரிந்தாலும், உள்ளுக்குள் பெரும் சோகம் உண்டு அவர்களுக்கு.

ஆரம்பத்தில் பட வாய்ப்புக்காக, பிறகு நட்சத்திர ஸ்தானத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக ... என ஒவ்வொரு கட்டத்திலும் ஆண்களுக்கு இரையாவது தவிர்க்க முடியாத விஷயம்.

இப்படி விளக்கைத் தேடும் விட்டில்களாக இருக்கும் இவர்களுக்கு திரையுலகில் நடக்கும் பாலியல் கொடுமைகள், வேறு வகையான ஆறுதலைத் தேடவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி விடுகிறது. அந்த ஆறுதல் நாளடைவில் முறையற்ற உறவு எனும் படுகுழியில் தள்ளிவிடுகிறது.

எல்லா நடிகைகளும் இப்படி இல்லை என்றாலும், பெரும்பாலானவர்களுக்கு இவ்வகையான உறவுதான் மன நிம்மதியைத் தருவதாக இருக்கிறது.

இதை வெளிப்படையாக காட்டிக் கொள்ள முடியாததால் நட்பு என்ற போர்வையில் ஓரின உறவைத் தொடர்கின்றனர்.

மங்களகரமான முன்னாள் பிரபல நடிகையின் மகளான இளம் நடிகை காதல் திருமணம் செய்தார். பின்னர் அந்த உறவு முறிந்ததுக்கும் இந்த உறவுதான் காரணம் என்கின்றனர்.

### கவலை கிடையாது

அதேபோல, முன்னாள் கதாநாயக நடிகரின் சகோதரரின் மகள் திரையுலகில் பயணம் மேற்கொண்டார். பயணம் தோல்வி. அதுபற்றி அவர் கவலைப்படுவதாக இல்லை. காரணம், நண்பிகளின் அரவணைப்புத்தான்.

திரையுலகில் ஒரு காலத்தில் கொடி கட்டிப்பறந்த தயாரிப்பாளரின் வாரிசு நடிகையும் இதுபோன்ற உறவில் ஆர்வம் உள்ளவர் என்று கூறுகின்றனர் சக நடிகைகள்.

ஆண் போன்ற கம்பீர உடலமைப்பு கொண்ட நடிகை, சக நடிகைகளை துரத்தித் துரத்தி தன் வலையில் விழவைப்பதில் வல்லவர். படப்பிடிப்பு இல்லாத நாட்களில், அந்த நடிகைகளைக் கூட்டிக்கொண்டு உல்லாசமாக அலைவதுதான் இவரின் பொழுதுபோக்காம்.

நடிகைகள் மத்தியில் இந்த முறைகேடான உறவு அறிமுகமாக அடித்தளம் போட்டது பிரபல நடனப் பள்ளி ஒன்று. இந்தப் பள்ளியில் இது வெளிப்படையான விஷயமாக இருக்கிறதாம்.

இங்கே நடனம் கற்றுக் கொள்வதும் பெண்கள், இன்னொரு பெண்ணுடன் நெருக்கமாக இருப்பதும், உரிமை கொண்டாடி ஜோடியாக இருப்பதும் கண்கூடாக நடக்கிறது.

ஃபயர் படத்தின் முன்னரே கோடம்பாக்கத்தில் லெஸ்பியன் காலூன்றிவிட்டது.

இது தவறு என்று இவர்களுக்கு அறிவுரை கூற முன்னர், அவர்களின் வாழ்க்கை நிலை குறித்து நாம் யோசிப்பதும் அவசியம். காலம் காலமாக திரையுலக ஆண்களால் மன, உடல் ரீதியாக காயமடைந்து வருகிறார்கள். இந்த பாலியல் பலாத்காரம்தான் இத்தகைய உறவுகளுக்கு தூண்டுகிறது என்பதையும் வருத்தத்துடன் தட்டிக் காட்டுகிறோம்." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### முகப்பில் ஊர்மிளா

பிரசாந்த்-கௌசல்யா
ஆசையில் ஓர் கடிதம்







## வயதான பிரபு

வெற்றிப்படங்களை தயாரித்து வரும் நிறுவனம் சூப்பர் குட் பிலிம்ஸ். சமீபத்திய கலக்கல், 'துள்ளாத மனமும் துள்ளும்.' அதே பட நிறுவனம் விஜயகாந்த் நடிக்கும் 'கண்படப் போகுதய்யா', அஜித்குமார் நடிக்கும், 'நீ வருவாய் என', பிரசாந்த் நடிக்கும் 'பூமகள் ஊர்வலம்', முரளி நடிக்கும் 'காமராசு' ஆகிய படங்களை ஒரே நேரத்தில் தயாரித்து வருகிறது.

இத்தனை படங்கள் போதாது என்று பிரபு நடிக்கும் 'திருநெல்வேலி' படத்தையும் தயாரிக்கிறார்கள்.

வயதான தோற்றத்தில் பிரபு நடிக்க, ரோஜா ஜோடியாக நடிக்கிறார். இப்படத்தில் கரணும் வயதான தோற்றத்தில் நடிக்கிறார். பிரபுவும், கரணும் எட்டத்தில் பார்த்தால் ஒரே மாதிரி தெரிவார்கள்.

படத்தில் இன்னொரு இளம் ஜோடியும் உண்டு. ஆனந்தராஜ், மனோரமா, விவேக், வையாபுரி. 'அருவா வேலு', 'கண்ணாத்தாள்' படங்களை இயக்கிய பாரதி கண்ணன் இயக்குகிறார். இசை: இளையராஜா.

## படையப்பா பாடல்கள்

'படையப்பா' பாடல்கள் நம் நாட்டு வானொலிகளிலும் தூள் கிளப்பிவருகின்றன. 'படையப்பா' பாடல் ஒலிப்பதிவு நாடாவை பெரும் விழா நடத்தி வெளியிட தீர்மானித்திருந்தனர். பின்னர் திடீரென்று விழா எதுவும் இல்லாமலேயே வெளியிட்டுவிட்டனர்.

'படையப்பா' படத்தின் மொத்த நீளம், 16 ஆயிரத்தி 400 அடி. இரண்டு மணி 40 நிமிடங்கள் படம் ஓடுமாம். சமீபத்திய ரஜினி படங்களில் அதிக நேரம் ஓடக்கூடிய படம் இது தான்.

## ஸ்ரீ ராம ஜெயம்

கமலின் 'ஹே ராம்' தயாராகும் இந்த வேளையில், சரத்குமார் நடிக்கும் 'ஸ்ரீராம ஜெயம்' படமும் பூஜை போடப்பட்டுள்ளது.

சுந்தர் சி. இயக்கும் இப்படத்தில் சரத்குமாருடன் இரு முன்னணி நடிகைகள் நடிக்கின்றனர். மணிவண்ணன், ரகுவரன் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: யுவன் சங்கர் ராஜா. சுவிஸர்லாந்தில் படப்பிடிப்பு நடக்கவுள்ளது.




கல்யாண்-கீர்த்திரெட்டி
படம்: ஆனந்த மழை

## ஆனந்த மழை

'ஆனந்தமழை' தெலுங்கில் இருந்து தமிழுக்கு வந்திருக்கிறது. தெலுங்கு முன்னணி நாயகன் சிரஞ்சீவியின் தம்பி கல்யாண் கதாநாயகன். கீர்த்திரெட்டி கதாநாயகி. தமிழ்நாட்டில் இப்படம் நன்றாக போயிருக்கிறது. இங்கு வீடியோவில் வெளியாகியுள்ளது.

'ஆனந்தமழை' நன்றாகப் போவதால், கல்யாண் நடித்துள்ள வேறுசில தெலுங்குப் படங்களையும் தமிழுக்கு மொழிமாற்றப் போகிறார்கள்.

## தேவி வந்துவிட்டாள்

கோடி ராமகிருஷ்ணா தெலுங்கில் பிரபல இயக்குநர். அவரது இயக்கத்தில் தற்போது வெளி வந்துள்ள படம் 'தேவி'. தெலுங்கில் இருந்து தமிழுக்கு வந்துள்ளது.

வனிதாவிஜயகுமார், பிரேமா, பாலசந்தர், சௌகார் ஜானகி, ஆகியோர் நடித்துள்ளனர்.

பாம்பு பெண் உருவில் நடமாடுவதும் வனிதாவுக்கு உதவுவதும்தான் கதை. கம்பியூட்டர் கிராபிக்ஸ் சாகசங்களுக்காக பார்க்கலாம். குறிப்பாக சிறுவர்கள் ரசித்துப் பார்க்கக்கூடிய படம்.

ஏற்கனவே கம்பியூட்டர் கிராபிக்ஸ் சாகசத்துடன் 'அம்மன்' படத்தை இயக்கியிருந்தார் கோடி ராமகிருஷ்ணா. அதுவும் அசத்தலான படம்.

'தேவி' நம்நாட்டிலும் கடந்த வாரம் வீடியோவில் வெளியாகியுள்ளது.

## காதோடு சொல்லுகிறோ[ம்]

கிராம ராஜ[...] வான இயக்குநர் த[...] புத்திரரின் படத்தை [...] திரை புத்தாண்டு[...] கொண்டுவரத் திட்ட[...] டார். இசையமைப்பாளர் [...] துழைக்கவில்லை. அதனால் பட வெ[...] யீடு தள்ளிப்போயுள்ளது. இந்தப் படம் மட்டு[...] வெற்றிபெற்றால், பின்னர் இழந்த மரியாதையை மீட்டுவிடல[...] என்ற கங்கணம் கட்டியிருக்கிறாராம் இயக்குநர்.

சுவாசத்தோடு தொடர்புடைய பெயரைக் கொண்[...] மூன்றெழுத்து நடிகை சமீபத்தில் தன் பிறந்தநாளை கோ[...] கலமாகக் கொண்டாடினார். பிரபல சினிமா புள்ளிகளுக்[...] அழைப்பு விடுத்திருந்தார். தனது முன்னாள் காதல் மன்[...] னுக்கும் அழைப்பு விடுத்தாராம். காதல் கோட்டையை ம[...] படி கட்ட நினைத்துத்தான் அழைத்தார். சமீபத்தில்தா[...] இரண்டெழுத்து நடிகையுடன் உறவு முறிந்தது. அந்த சர்ச்சை[...] தீரவில்லை. அதனால் அவர் விழாவுக்கு வரவில்லையாம்.

மூவேந்தரில் ஒருவரது பெயர் கொண்ட இயக்குநரி[...] படத்தில் அறிமுகமாகும் நாயகி, இயக்குநரின் அன்புச்[...] பாத்திரமாகி விட்டார். ஏற்கனவே இரண்டெழுத்து நடிகை[...] யும், தங்கை நடிகை ஒருவரையும் தன் அன்புக்கு பாத்[...] மாக்கியவர் இந்த இயக்குநர். இப்போதும் தங்கை நடிகையுட[...] நட்பு தொடர்கிறது. அவரது சகோதரிதான் இந்த புதுமு[...] நடிகை.

விசித்திரமான நடிகை அரசியலில் ஈடுபட ஆசைப்படுகி[...] ராம். அதற்கு முன்னோடியாக சமுகசேவை நிறுவன[...] ஒன்றில் இணைந்து பணியாற்றுகிறாராம். நடிகையின் சேவைக[...] பற்றி நன்கறிந்தவர்கள் நமுட்டுச் சிரிப்பு சிரிக்கிறார்கள்.

மந்திரமான நடிகையை ஒப்பந்தம் செய்யச் சென்றா[...] தயாரிப்பாளர் ஒருவர். அவரோ பதினைந்து இலட்ச[...] கேட்டாராம். தயாரிப்பாளர் கோபத்தோடு, 'நான் உன்னை[...] வாங்க வரவில்லை' என்று கூறிவிட்டு சென்றுவிட்டாராம்.

'காமா' படத்தில் தேனில் குளிக்க ஒரு நடிகை மறுத்தா[...] இன்னொரு நடிகை துணிந்து நடித்தார். அந்த தேனி[...] குளித்த நடிகை இப்போது தயாரிப்பாளரின் அன்புக் கட்டு[...] பாட்டில் இருக்கிறாராம்.

✻ 'கண்ணெ[...] இயக்கிய ரவி[...] இஷா கோபி[...] 'சந்தித்த [...] ளார்.

✻ [...] இயக்கி [...] நாயகன[...] வுள்ளா[...]

✻ 'கா[...] பாட[...] விஜ[...] பா[...]



படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

...நான்றினாள்' படத்தை
...ன் அடுத்து கார்த்திக்-
...த்து இயக்கும் படத்திற்கு
... என்று பெயரிட்டுள்

...கம் காட்டு' படத்தை
... களஞ்சியம் அடுத்து சரத்குமார் கதா
...க்க 'கேசவன்' என்ற படத்தை இயக்க

...தை', 'சிவன்' ஆகிய படங்களில் ஒரு
...மில் நடமாடியிருக்கும் ரோஜா. அடுத்து
...கும் 'நெஞ்சினிலே' படத்திலும் ஒரு
...நடனமாடவுள்ளார்.

...ாலச்சந்தரிடம் பல தொலைக்காட்சித்
...ருக்கு உதவியாளராக இருந்த இயக்குநர்
...ாஜாவின் மகன் செல்வராகவன். தனியா
...ான்றை இயக்கப்போகிறார்.

...ாசன்- ஷாருக்கான் இணைந்து நடிக்கும்
... படத்தில் ஐயர் வேடத்தில் நடித்து
... வையாபுரி.

... சேரன் இயக்கும் 'என் இனிய காதலர்
...' படத்தின் தயாரிப்பாளர் மாறிய
...த் தொடர்ந்து படத்தின் பெயரும் 'விண்
...ாடும் முகிலோடும்' என்று மாற்றப்பட்டு
...டது.

... மணிரத்னத்தின் உதவியாளர் சகி
...ணஷன் இயக்குநராக அறிமுகமாகும்
...ந்தில் கதாநாயகனாக நடிக்கவிருப்பவர்
... சாந்த்.

... 'ருக்மணி கல்யாணம்' படத்தின் மூலம்
...லுங்கில் அறிமுகமான ப்ரீதா விஜயகுமார்.
...னடத்தில் அறிமுகமாகும் 'ஓம் நமசிவாய'
...த்திற்காக தனது பெயரை ருக்மணி
...று மாற்றியுள்ளார்.

... பி. வாசு இயக்கத்தில் சத்யராஜ் நடிக்க
...க்கும் 'மலபார் பொலிஸ்' படத்தில் இன்
...ாரு கதாநாயகனாக அப்பாஸ் நடிக்க
...ளார்.

... விஜய்-கௌசல்யா நடித்த 'ப்ரியமுடன்'
...போது தெலுங்கில் தயாராகி வருகிறது.
...லுங்கில் நவீன்-கீர்த்தி ரெட்டி இணைந்து
...க்க, எஸ்.ஏ. ராஜ்குமார் இசையமைக்
...ார்.

## கமல் அய்யங்கார்

கமல் இயக்கி நடிக்கும் 'ஹே ராம்' படத்தில் முஸ்லிம் இளைஞராக நடிக்கிறார் ஷாருக்கான். ராணி முகர்ஜி வங்காளப் பெண்ணாக நடிக்கிறார். ஹேமமாலினி, கவிஞர் வாலி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்டக் காலம் முதல் தற்போதைய காலகட்டம் வரை கதை நகருகிறது. கமல் சாகேத ராமு அய்யங்கார் என்னும் பாத்திரத்தில் நடிக்கிறார். தாடி, குடுமி சகிதம் கம்பீரமான பாத்திரத்தில் கலக்கப்போகிறார்.

"கமலுடன் நடிப்பது என் கனவு. இலட்சியம்" என்று கூறியுள்ளார் ஷாருக்கான்.

'ஹேராம்' படம் முடிந்த பின்னர் இன்னொரு படமும் நடிக்கப்போகிறார் கமல். அதன்பின்னரே மறுபடி மருதநாயகம் பட வேலைகள்.

மருதநாயகம் வெளியாக மேலும் மூன்று வருடங்கள்கூட ஆகலாம். அது என் கனவுப் படம். அவசரப்பட்டு எடுக்கவேண்டிய படமல்ல" என்று கூறியிருக்கிறார்.

## மோனிகா கதை

கிளின்ரன், மோனிகாவின் கதையை வைத்து தமிழில் படம் எடுக்கலாமா? என்று மணிரத்னம் யோசித்து வருகிறார்.

முற்றிலும் புது முகங்களை வைத்து அப்படத்தை எடுக்கும் திட்டம் இருக்கிறதாம்.

ஏற்கனவே, எம்.ஜி.ஆர், கருணாநிதி கதையை 'இருவர்' படமாக எடுத்ததார். படுபடு தோல்வி. பலசர்ச்சைகள். எனவே, யோசித்து கால்வைக்குமாறு கூறியுள்ளாராம் சுகாசினி.

சுகாசினியும் சின்னத்திரைக்கு நாடகம் ஒன்றை இயக்கப்போகிறார். கணவரின் 'மெட்ராஸ் டாக்கீஸ்' பட நிறுவனம்தான் அவரது தொலைக் காட்சி தொடரையும் தயாரிக்கப் போகிறது.

## பாலச்சந்தர் தொடர்கள் சன் ரி.வி.யில் வராது

பாலசந்தர் தயாரித்த 'மர்ம தேசம்', 'ஜன்னல்', 'காசளவு நேசம்' போன்ற தொடர்கள் இனி சன் ரி.வியில் ஒளிபரப்பப் படமாட்டாது. அதனால் நம் நாட்டு சக்தி ரி.வியிலும் இவை விரைவில் நிறுத்தப்பட்டு விடும். பாலசந்தர் தொடர்கள் இனிமேல் தமிழ்நாட்டில் ராஜ் ரி.வி.யில் ஒளிபரப்பாகப் போகின்றன.

'மர்மதேசம்' தற்போதைய தொடர் (விடாது கருப்பு) சன் ரி.வியில் ஒளிபரப்பாகி முடிந்துவிட்டது. மர்மதேசம் அடுத்த பாகம் ராஜ் ரி.வி.யில் ஒளிபரப்பாகும்.

பாலசந்தரின் 'மின் பிம்பங்கள்' நிறுவனத்திற்கும் சன் ரி.வி. நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையால் உறவு முறிந்துவிட்டது.

கொழும்பில் சக்தி ரி.வி. சிங்கப்பூர் ரி.வி போன்ற நிறுவனங்கள் தமது தொடர்களை ஒளிபரப்பியது பாலசந்தருக்கு தெரியாதாம். அதற்கு தனியாக பணம் கொடுக்கவில்லை. இப்படி பல பிரச்சனைகள்.

தி.மு.க. குடும்ப நிறுவனம் என்பதால் சன் ரி.விமீது பாலசந்தர் பகிரங்கமாக குற்றம் சாட்டாது, உறவைக் கத்தரித்தார். ஆனால், அவர் சன் ரி.விக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் கதை பரவியது.

அதனால் சன் ரி.வி.யுடன் உறவு முறியக் காரணம் என்னவென்று பாலசந்தரின் மகன் கைலாசம் பத்திரிகைகளுக்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்.



பாபுகணேஷ்-ரசிகா
படம்: கெஸ்ட் ஹவுஸ்



சினிவிசிட்

விக்னேஷ்-மந்த்ரா
படம்: புதுக்குடித்தனம்

## ஆண்கள் பச்சைத் துரோகிகள்
### ஊர்மிளா படபடக்கிறார்

இயக்குநர் ராம்கோபால் வர்மாவுடன் நெருக்கமாக இருந்தவர் ஊர்மிளா. ரங்கீலா படத்தின் இயக்குநரும் அவர்தான். பின்னர் ஜாக்கிஷெராப் போன்ற கம்பீர நடிகர்களின் அன்பில் நனைந்தார். அவர்களையும் நனைத்தார்.

தற்போது தீராத காதல் லீலைகள் திகட்டிவிட்டதால், சலிப்போடு பேசுகிறார். ஆண்கள்மீது கோபப்படுகிறார். ஊர்மிளாவின் பரபரப்பான பேட்டியிலிருந்து:

**கே: உங்கள் ஆண் நண்பர்களைப் பற்றிக் கூறுங்கள்?**

**ஊ:** காரியம் சாதிக்கிறவரைதான் ஆண்கள் பலர் நண்பர்களாக இருப்பார்கள். பின்னர் கையைக் காட்டிவிட்டு போய்க்கொண்டே இருப்பார்கள்.

**கே: ஆண்கள் மீது அத்தனை கோபம் வரக் காரணம்?**

**ஊ:** நான் சந்தித்த, என்னைச் சந்தித்த ஆண்கள்.

**கே: உங்களை திரையுலகுக்கு அறிமுகம் செய்ததே ஒரு ஆண்தானே?**

**ஊ:** ஆமாம்!

**கே: அவரும் உங்கள் கருத்துப்படி தப்பான ஆண்தானா?**

**ஊ:** பிரச்சனை கிளப்பப் பார்க்காதீர்கள். அவர் என்குரு! நான் இங்கே குரு பற்றிப் பேசவில்லை. என் நண்பர்களைப் பற்றியேதான் பேசினேன். பேசுகிறேன்.

**கே: பொதுவாக நீங்கள் சந்தித்த ஆண்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

**ஊ:** உண்மையைச் சொல்லட்டுமா? பச்சைத் துரோகிகள்! முதல் சந்திப்பிலேயே கழுத்துக்கு கீழேதான் அவர்கள் கண்கள் போகின்றன. பெண் என்றாலே, அவளை கட்டிலுக்கு எப்படி அழைக்கலாம் என்ற சிந்தனைதான் பலருக்கு மேலெழுகிறது.

**கே: செக்ஸ் பற்றி உங்கள் அபிப்பிராயம்?**

**ஊ:** இதுக்கு நான் வெளிப்படையாக பதில் கூறினால், அலைகிறாள் என்பீர்கள். கூறாதுவிட்டால், மறைக்கிறாள் என்பீர்கள். செக்ஸ் அப்படி ஒன்றும் கெட்ட காரியமல்ல. செக்ஸ் இல்லையானால் நானோ, நீங்களோ பிறந்து வந்திருக்க முடியுமா?

**கே: உங்களைக் கவர்ந்த ஆண்?**

**ஊ:** தேடிக்கொண்டிருக்கிறேன்.

**கே: உங்களைக் கவர்ந்த பெண்?**

**ஊ:** இந்திரா காந்தி. துணிச்சலுக்காக.

**கே: ஜாக்கிஷெராப்புடன் நீங்கள் நெருங்கிப் பழகியதாக கூறப்படுகிறதே?**

**ஊ:** இணைந்து நடிக்கும்போது நெருங்கித்தானேயாக வேண்டும். இல்லாவிட்டால் 'டுயட்' காட்சியில் நடிக்க முடியாது! வேறு நெருக்கங்கள் கிடையாது.

## மந்த்ராவுக்கு மந்திரம்

முன்னழகு மூலம் ரசிக மகாஜனங்களை கவர்ந்திழுத்த மந்த்ராவுக்கு விக்னேஷ் மந்திரம்போட்டு விட்டாராம்.

'புதுக்குடித்தனம்' படப்பிடிப்பில் இருவரும் ஜாலியான நண்பர்கள் ஆகிவிட்டனர்.

சுவாதி உட்பட பல நடிகைகளுடன் ஒட்டி உறவாடி பின் வெட்டிவிட்டவர் விக்னேஷ். அஜித்தை காதலித்த சுவாதி பின்னர் விக்னேஷாலும் ஏமாற்றப்பட்டு புலம்பித்திரிந்தது தனிக்கதை.

இந்தக் கதையெல்லாம் மந்த்ராவுக்கு தெரியுமோ, தெரியாதோ, அவரது நோக்கமெல்லாம், கூட நடிக்கும் நாயகனை குளிர்விப்பது மட்டுமே!

## ராஜாவா இப்படி?


தர்மம், கடவுள், பொது நோக்கம் என்றெல்லாம் பேசும் இளையராஜா இப்படி நடக்கலாமா? என்கிறார்கள்.

எப்படி? இளையராஜாவின் அண்ணன் மகனுக்கும், தேவா மகளுக்கும் கல்யாணம். இளையராஜாதான் முன்னின்று நடத்தி வைக்க வேண்டும் என்று கேட்டிருந்தனர்.

திருமண நாளில் பலத்த ஏமாற்றம். இளையராஜா எட்டிக்கூடப் பார்க்கவில்லை. கங்கை அமரன்தான் முன்னின்று நடத்தி வைத்தாராம்.

www.padippakam.com

# அகதி வாழ்க்கை





↑மேலே உள்ள படம்: வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்தின் வெளித்தோற்றம். இங்கும் வடபகுதி மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வவுனியாவைத் தாண்ட அனுமதி கிடையாது. "சகல வசதிகளும் உண்டு வாருங்கள்!" என்று அழைத்துவிட்டு, அடிப்படை வசதி கூட இன்றி அடைத்து வைத்துள்ளனர்.

அடுத்தது, தமிழ்நாடு மண்டபம் அகதி முகாம் காட்சி. இலங்கைத் தமிழ் மக்கள் உணவுக்காக குழுமி நிற்கின்றனர். சொந்த மண்ணிலும் அகதிகள்- அந்நிய மண்ணிலும் நொந்த மனதோடு அகதி வாழ்க்கை.

## யார் இவர்

➔ இரட்டைப் பின்னலுடன் காட்சி தரும் இந்தச் சிறுமியை அடையாளம் தெரிகிறதா? இன்று பெரும் புகழ்மிக்க நடிகை. நகைச்சுவைப் பாத்திரமா? குணச்சித்திரமா? எதுவானாலும் பிய்த்து உதறிவிடுவார். என்ன ஊகிக்க முடியவில்லையா? மறுபடி யோசித்து விட்டு 13ம் பக்கம் செல்லவும்.



## பொன் போன்ற உறவானவன்

உயிரின் ஈரத்திலிருந்து
உனதான பாசம்
ஊற்றெடுத்து ஓடி
ஆத்மாவை நிரப்புகிறது.
••
எளிமையான உள்ளத்தோடும்
கபடமற்ற அன்போடும்
உடன் பிறந்தவனாக
நான் மதிக்கும்
அன்புள்ள அண்ணா!
அன்பைப்பாடி
ஆனந்திக்கும் இந்த வாழ்வுக்கு
ஆயுள் குறுகியது!
நீங்காத நினைவாக
உள்ளத்தில் நிலைத்து
உயிர் வாழப் போகிறது!
••
நீள் துயரத்தின் பின்
நிகழ்ந்த
உனது சந்திப்பும்
பொன் போன்று நான்
மதிக்கும்
உனது அன்பும்
எதிர் பாராத திருப்பத்தை
என் வாழ்வில் நிகழ்த்தியது!
அன்று முதல்
அணுவணுவாக
ஆனந்தம் சேர்த்த
எத்தனையோ வேளைகள்
எனைத் தாண்டிப்போயின!
••
தெய்வத்துக்குத் தெரிந்த
உனதான–எனதான
ஆத்மாக்களில் உள்ள
அன்பின் ஜீவநதி
உணர்வுகளுக்குள்
எல்லைப் பட்டதல்ல;
உன்னதங்களால்
எழுப்பப்பட்டதை
உலகுக்குச் சொல்வேன்!
••
கல்லூரி, நூலகம்
கடற்கரையென
வரிசையாக வருகின்ற– உன்
வசந்த நினைவுகளை
மாத்திரம்
உனைப் பிரிகின்ற நாளில்
என்னோடு கொண்டுசெல்வேன்;
ஆனந்தத்தின் உச்சங்களை
அடைத்து வைக்கும்
ஆன்மாவின் பெட்டகத்துள்
அவற்றைப் பாதுகாப்பேன்!
••
நான் போன பின்னர்
அடுத்த கணமே –நீ
எனை மறந்துபோகலாம்;
என்றேனும் எனது பெயர்
சொல்லக் கேட்டால்
உனது நெஞ்சின் வழியே
எனது நினைவுகள்
வந்து போகலாம்!
••
என்றாலும் எனதண்ணா....!
உனதான எந்த நிகழ்வையும்
எனது உள்ளம்
மறக்கும் நிலையிலில்லை!
உனது அன்பு கிடைத்த
துளிப் பொழுதுளை.......
நீ தந்த பாதிச் 'சுயிங்கத்தை'
துண்டு 'பிஸ்கட்டை'
அபூர்வமாக நீ கதைத்த
சிங்களச் சொற்களை.....
நான் ஏதோ துயரில்
அமிழ்ந்திருந்த பொழுதில்
அன்போடு நீ கேட்ட
"என்னம்மா இது?"வையும் தான்!

**பஹீமா ஜஹான்,**
**தெமடகொல்ல, மெல்சிரிபுர.**

## உன் ஞாபகம்

காதலை
கவிதை யாக்கி
கண்களாலேயே நீ
காதலை
சொன்னதும்......
**
உன்
விரசமில்லா
வார்த்தைகளும்
விரல் படாத
நெருக்கமும்......
**
உன்
முகத்தைப் போலவே
வெண்மையான
உன்
உள்ளமும்....
**
என்னை
காணாத நாட்களில்
நீ
வடிக்கும்
கவிதை வரிகளும்......
**
குடிகார கணவனில்
உதையிலா
ஞாபகம் வரவேண்டும்......?

**இராம. யுவராஜ், கண்டி.**

## இருகால் எருமைப் பட்டி!

இன்னும்
அணையவில்லை...
இராமாயணத்தில்
இலங்கை
தீப் பற்றி எரிந்தது–
உண்மையே!
—•—
வட கிழக்கில் மாத்திரம்
காய்ந்த
மனித விறகுகள்
இன்னமும்
எரிகின்றன!
—•—
எருமைப் பட்டிகள் போல்
ஆறு மணிக்கே
'படைப்' பட்டிக்காரர்கள்
அடைத்துவிடுவார்கள்.
நகரவே முடியாது!
எங்கு பார்த்தாலும்
துவக்குக் கம்புகள்!
—•—
(மாட்டுக்) காலையை
ஏழு மணிக்கு
திறக்க வருவார்
படைப் போடியார்!
—•—
ஒவ்வொன்றாக
அடையாள அட்டையுடன்
வெளி வருவோம்.
—•—
"இரவு யார் வந்தது?"
'பளார்', 'பளார்'.......
—•—
"சத்தியமாக ஐயா!
நுளம்பைத் தவிர
வேறு மிருகங்கள்
வரவில்லை!"

**மாரிமுத்து யோகராஜன்,**
**மட்/ ஆசிரியர் கலாசாலை.**

## இந்தவாரம் உங்கள் பலன்

**11.04.99 முதல் 17.04.99வரை**

**ஜோதிடர் 'கானா'**

**மேடம்:**
கிரகங்கள் பலம் பெற்று இருப்பதால் எடுத்த கருமங்கள் வெற்றியும் சுக்கிரன் 2ம் இடத்தில் ஆட்சிபெறுவதாலும் குடும்ப பலன்கள் நன்றாக அமையும். வருமானம், புதிய முயற்சி, எடுத்த பொறுப்புக்கள் யாவும் நிறைவுபெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 6
அதிஷ்ட திகதிகள் : 15, 12.

**இடபம்:**
தற்போது இவர்களுக்கு யோகமான காலமாகும். காரியசித்தியும் சொந்த வீட்டில் சுக்கிரன் ஆட்சிப் படுவதும், வியாழன் 11ம் வீட்டில் ஆட்சிபலம் பெறுவதும் தடைப்பட்ட விவாகம், காதல் உறவுகள் நிறைவேறும். பணப் பிரச்சனைகள் தீரப் பெறும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஆரஞ்சு நிறம் எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

**மிதுனம்:**
கிரக நிலையில் சனி, குரு, சுக்கிரன் சிறப்புடன் உள்ளதால் பெரிய அளவில் பண வருவாய்க்கு இடமுண்டு. உறவினர்களின் ஒன்று கூடல், புதிய நண்பர்களின் சேர்க்கை என்பனவும் அமையப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 16, 11.

**கடகம்:**
9ல் வியாழன், 11ல் சுக்கிரன் பலமாக உள்ளதால் தடைப்பட்ட கருமங்கள் கைகூடும். பணப்பிரச்சனைகள் தீரும். குடும்பத்தில் சந்தோஷம் மேலோங்கும். தூர இடத்து நற்செய்தியும், பெண்களால் சிற்சில பிரச்சனைகளும் ஏற்படும். கணவன்-மனைவி உறவு சிறப்பாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு; எண்: 2.
அதிஷ்ட திகதிகள் : 12, 16.

**சிம்மம்:**
பாக்கியஸ்தான சனியும் அட்டமத்தில் வியாழனும் 10ல் ஆட்சிபெற்ற சுக்கிரனும் இருப்பதால் வெளிநாட்டுப் பிரயாணம், குடும்பத்தில் சுப வைபவங்கள் காணப்படும். பண வருவாயுமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மருண் நிறம்; எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**கன்னி:**
அட்டமத்துசனி காலமானபோதும் வியாழன் 7ம் இடத்தில் பலம் பெறுவதுவும் சுக்கிரன் 9ல் இருப்பதும் தடைப்பட்ட திருமண பேச்சுக்கள் தொடரும், தொழில் விருத்தி ஏற்படும். உறவினர்களின் உதவி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம், எண் : 4
அதிஷ்ட திகதிகள் : 14, 16.

**துலாம்:**
நெடுநாள் வேண்டுதல் நிறைவேறும். உள்ளத்தில் மகிழ்ச்சியும் காரியசித்தியும் உண்டு. உறவினர்களின் சுபசெய்திகள் கிடைக்கப்பெறும். ஆலயத் தரிசனம் சிறக்கும். உடமைகள் வந்து சேரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு; எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

**விருட்சிகம்:**
கிரக நிலைகள் நன்றாக அமைவதால் வருமானம், கல்வி,தொழில் முயற்சிகள் கைகூடும். திருமண வாய்ப்புக்கள் உருவாகும். எடுத்த கருமங்கள் காரிய சித்தியாகும். உடல் நலமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 6
அதிஷ்ட திகதிகள் : 15, 14.

**தனுசு:**
தடைகள், சிக்கல்கள் நீங்கும். புதியவர் சேர்க்கையும் பண வருமானமும் காணப்படும். தொலைவில் இருந்து நல்ல செய்தி வரும். சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும். கல்வி, தொழில் என்பன சிறப்பாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 9
அதிஷ்ட திகதிகள் : 14, 12.

**மகரம்:**
எடுத்த கருமங்கள் சிறப்புடன் முடியும். உறவினர்களின் சேர்க்கையும் குடும்பத்தில் நண்பர்களின் உதவியும் காணப்படும். பண வசதிகள் அதிகரிக்கும். தல யாத்திரைக்கு இடமுண்டு. தூர இடத்து செய்தி மன மகிழ்ச்சிதரும். கல்வி, தொழில் சிறக்கும். உடல் பலமாகக் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண் : 6
அதிஷ்ட திகதிகள் : 15, 14.

**கும்பம்:**
சனி 3ல் பலம் அடைவதும் வியாழன் 2ல் ஆட்சி பெறுவதும் யோகமான அமைப்பு. கல்வி, இருப்பிடம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். உறவினர்களின் ஒத்துழைப்பு, புதியஸ்தானம் என்பன அமையும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண் : 5
அதிஷ்ட திகதிகள்: 14, 18.

**மீனம்:**
முன்னர் இருந்த பல பிரச்சனைகள் தீரப்பெறும். மனதில் நம்பிக்கை வளரும். சுபசெய்தி கிட்டும். தொழில், கல்வி உயர் வைத்தரும். உறவினர்களின் உதவியும், ஒத்துழைப்பும் கிடைக்கும். ஆலய தரிசனம் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 14, 12.

## தேன் கிண்ணம்

### வெளி நாட்டில்.....

நெஞ்சம் கனலாகி
கனன்று கொதிக்கையில்,
அஞ்சகம் ஊரிலிருந்து
ஐம்பதாயிரம் கேட்கிறாள்!
வேலையும் பஞ்சம்....
நிரந்தர'விசா' வுமில்லை.
ஒன்றுமில்லாமல் ஒருள்ளம்
ஒவ்வொரு நாளும்
ஒடிந்து கிடக்கையில்,
"உனக்கென்ன அதிஷ்டக்காரன்
வெளிநாட்டில் உன் வாழ்வு–
வெளிச்சத்தில் நீ!
இருட்டில் எமக்கு
விளக்காக நீயிரு...!
அனுப்பிக் கொண்டேயிரு–
ஆயிரமா யிரமாய்?"
உற்றார் உறவினர்
இச்சொல் கேட்டு
வெளிநாட்டு வாசி
இப்படி நினைக்கிறான்:
'வெந்த புண்ணில் இதுவேல்
இக்கரைக்கு அக்கரை.....'

**மு. சேமகரன்,**
**அவுஸ்திரேலியா.**

### உன் நினைவு நதி....

நீ
அருகில் இருந்தால்
நிலவு பிடிக்கிறது.
நட்சத்திரங்கள்
ஜொலிக்கிறது....
நீ!
இல்லையென்றால்?
நிலவு தேய்கிறது......
நட்சத்திரங்கள் மங்குகிறதே......?
என் இதயவீட்டில்
உனக்காய்
எத்தனை.....?
காதல் அறையை
ஒதுக்குவது......?
தூங்கும் போதும்
விழிக்கும் பொழுதும்
உன் நிலாமுகத்தை
பார்க்காவிட்டால்
மனம்..... கூட
முகாரிராகம் இசைக்கிறதே?
எவ்வளவு தான்!
என் மன தேசத்தில்
உனை மறக்க
காதல் அணைகட்டினாலும்
உன் நினைவு.....நதி வந்து
உடைத்து விட்டுப் போவதை
யாரால் தான்
தடுக்க...... முடியும்?

**அக்கரைப்பற்று, வி. சுதாகர்.**

## நில்-கவனி-முன்னேறு

### 7 கெட்ட பழக்கங்கள்

டகோடா பல்கலைக்கழகம் அமெரிக்காவில் உள்ளது. அங்குள்ள ஆராய்ச்சி மாணவர்கள், வித்தியாசமான ஓர் ஆய்வைச் சமீபத்தில் மேற்கொண்டனர்.

உலகத்தில் கெட்ட பழக்கமே இல்லாத மனிதர்கள் உண்டா? என்பதைக் கண்டறியும் ஆர்வத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி இது.

சுத்தமாக, கெட்ட பழக்கமே இல்லாத மனிதர்கள் இந்த உலகத்தில் இல்லை என்பது ஆய்வின் முடிவு. அது மட்டுமின்றி, உலகின் பெரும்பான்மையான மக்கள், ஒரு குறிப்பிட்ட ஏழு கெட்ட பழக்கங்களைக் கடைப்பிடித்து வருவதில் ஒரு பொதுத் தன்மை நிலவுவதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

**கெட்ட பழக்கங்கள் வருமாறு:**

1. எப்போது பார்த்தாலும் மனசஞ்சலக் கவலை.
2. நேரத்திற்கும், நிகழ்ச்சிக்கும் தகுந்தாற்போல் தமது குணநலன்களை மாற்றிக்கொள்ளும் 'பச்சோந்தி'த் தனமான நடத்தையும், சுபாவமும்.
3. தாழ்வுணர்ச்சி
4. நகம் கடிக்கும் பழக்கம்.
5. பற்களை நறநறவெனக் கடிக்கும் கோளாறு.
6. தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளும் போக்கு.
7. பழிக்குப் பழி வாங்கும் சினம்.

இந்த ஏழு கெட்ட பழக்கங்களும் உலகின் அனைத்து மாந்தர்களும், தவிர்க்கமுடியாத பழக்கங்களாகவே உள்ளன. தனது ஆயுளில் ஒரே ஒரு தடவையாவது இந்த ஏழு கெட்ட பழக்கங்களைப் பயன்படுத்தாத மனிதர்களே இல்லை என்கிறது. இந்த டகோடா பல்கலை கழக ஆய்வு மையம்!

இதில் சாதாரண மக்கள், வி.வி.ஐ.பிக்கள் என்கிற வித்தியாசமே இல்லை. அவர்களும் மனிதர்கள்தானே என்கிறது. இந்த ஆராய்ச்சி முடிவுகள்!

## பேனா நண்பர்



பெயர்: கே. பாமிர்.
வயது: 19
முகவரி: சூரங்கல்-5, கிண்ணியா.
பொழுது போக்கு: ரீ.வி., கிரிக்கெட்.



பெயர்: வி. சுபாஷினி,
வயது: 17
முகவரி: 128ஏ/7, 5ம் வட்டாரம், ஐயனார் கோயில் பாதை, உடப்பு.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அழகுக்கு அழகு

★ **ச**வர்க்காரம் போட்டுக் குளிக்கும் போது, நுரையை நிறையத் தடவித் தேய்த்துக் குளியுங்கள். இதனால் தோல் சுத்தமாகும். தோல் சுத்தமாக இருந்தாலே போதும், அழகு தானே மிளிரும்.



★ **த**லைமுடியை அடிக்கடி நீரில் கழுவுவது நல்லது. வாரம் ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்துக் கொள்வதை வழக்கமாக்குங்கள். இதனால் தலையில் உள்ள துவாரங்கள் வழியாக கழிவுப்பொருட்கள் வெளியேறுகின்றன.

★ **ந**டக்கையில், அன்ன நடை நமக்காக ஏற்பட்டது என்பதை உணர்ந்து நடக்கவும். உயர்ந்த குதி உடைய செருப்புகளை அணிவதை நிறுத்தவும். இதனால் இதயம் பலவீனமடையும். நிதானமாக நடந்தால் உடலுக்கு நல்லது.

★ **நி**ற்கும்போது நிமிர்ந்து நில்லுங்கள். பாத மையத்தில் உடல் பாரம்படியுமாறு நிற்க முயற்சிக்கவும். இவ்வாறே உட்காரும் போதும் முடிந்தவரை நேராக உட்காருங்கள்.

★ **ப**ருமனாக இருப்பவர்கள் தங்கள் எடை குறைய தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு எலுமிச்சம்பழச்சாற்றைப் பிழிந்து அதனுடன் அரை தேக்கரண்டி தேனும் அருந்தி வாருங்கள். இரண்டு மாதங்களுக்குள் கண்டிப்பாக நீங்கள் நினைக்கும் அளவிற்கு எடை குறைந்துவிடும்.

★ **கு**ங்குமம் இட்டுக்கொள்ளும் பெண்கள் நல்ல குங்குமமாகப் பார்த்து வாங்குங்கள். கண்ட கண்ட குங்குமம் இட்டால் அந்த இடம் புண்ணாகிவிடும். நெற்றியில் ஒன்றும் இட்டுக் கொள்ளாமல் இருக்காதீர்கள்.

★ **த**லையில் ஏற்படும் நரையை மறைக்க தலை மைகளை உபயோகப்படுத்தாதீர்கள். அவை தலைக்கும், முடிக்கும் கெடுதியை ஏற்படுத்தலாம். தலை நரைக்காமல் இருக்க மனதில் கவலைகள் அதிகம் கொள்ளாமல் இருக்க வேண்டும். அல்லது சத்துக்கள் நிறைந்த ஆகாரங்களை உட்கொள்ளலாம்.

★ **சை**க்கிள் ஓட்டுவது பெண்களுக்கு நல்ல உடற்பயிற்சி. இதனால் கால் தசைகள் உறுதியாகி, கணுக்கால் மெலிந்து அழகு பெறுகிறது. பெண்களுக்கு அழகான கால்கள் மிகவும் அவசியம்.

★ **நீ**ச்சல் பயிற்சி பெறுவதால் இடுப்பு மெலிந்து அழகாக மாறுகிறது.

★ தண்ணீரில் அடிக்கடி கைகளை உபயோகிக்க வேண்டியிருந்தால், அப்பொழுதெல்லாம் மெல்லிய ரப்பர் உறைகளை அணிந்து கொள்ளுங்கள். இந்த உறைகளில் சிறிய துளைகள் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உறையின் உட்பாகத்தில் வியர்வை சேர்ந்துவிடும்.

## இது சமையலறை சமாச்சாரம்

இரவு நேரம் வந்துவிட்டால் கரப்பான் பூச்சிகளுக்குக் கொண்டாட்டம். குறிப்பாக சமையலறையில் அவற்றின் பேரணிகள் நடக்கின்றன. இந்தத் தொல்லையைத் தவிர்க்க ஒரு வழி இருக்கின்றது. பொதுவாகப் பல வீடுகளில் சமையல் அறையை இருட்டுக் குகையாக வைத்திருப்பர். இரவு முழுவதும் எரியும்படி ஒரு இரவு விளக்கைப் பொருத்துங்கள். கரப்பான் பூச்சிகளின் பேரணிக்குத் தடை விதிக்கலாம்.

□□

குளிர்சாதனப் பெட்டியைத் திறந்தவுடன் சில சமயங்களில் வரும் நாற்றம் சகிக்க முடியாது. இது போல நாறுவதைத் தடுக்க ஒரு சின்னக் கோப்பையில் கரித்துள் நிரப்பி உள்ளே வைத்துவிடுங்கள். கெட்ட நாற்றமே வராது.

□□

சுடுநீர்ப் போத்தலின் மூடியைத் திறந்ததும் ஒரு வித வாடை அடிக்கும். இதைத் தவிர்க்க சுடுநீர்ப் போத்தலின் உள்ளே ஒரு தேக்கரண்டி சீனியைப் போட்டு வையுங்கள். இந்த வாடைவராது. ஆனால் பயன்படுத்தும் முன்பு மறவாமல் சுடுநீர்ப்போத்தலைக் கழுவ வேண்டும்.

□□

கண்ணாடி டம்ளர்கள், போத்தல்களைக் கழுவும்போது நீலம் கலந்த தண்ணீரில் கழுவிப் பாருங்கள். பளபளப்பாக இருக்கும்.

□□

கருணைக் கிழங்கு நறுக்கினால் கை அரிக்க ஆரம்பிக்கும். இதைத் தவிர்க்க புளித் தண்ணீரில் கையைக் கழுவுங்கள். அரிப்பு நிற்கும்.

□□

புது அரிசியைச் சமைத்தால் சோறு குழைந்து விடும். இதைத் தடுக்க சோறு கொதிக்கும் போது, ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெயை விட்டால், சோறு பொலபொலப்பாக இருக்கும்.

□□

மில்லில் மாவு அரைத்துக் கொண்டு வந்தால் உடனே அதை மூடி வைக்கக் கூடாது. இப்படிச் சூட்டோடு மூடி வைத்த மாவில், முறுக்கு போன்ற பலகாரங்கள் செய்தால் பலகாரம் சிவந்து போய்விடும். ஆகவே அரைத்து வந்த மாவைத்திறந்து வைத்து, ஆறிய பிறகே மூடி வைக்க வேண்டும்.

□□

பட்டுப்புடவைகளை இரண்டு வருஷத்திற்கு ஒரு முறையாவது பீரோவில் இருந்து வெளியே எடுத்து, துவைத்து இஸ்திரி போட்டு மடித்து வையுங்கள். இல்லாவிட்டால் பட்டுப்புடவைகள் அரோகராதான்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** FN

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-04-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

**82** **புவனா**

டயானாவும், டோடியும் மனம் திறந்து பேசுவதற்கு பல சந்தர்ப்பங்கள் வாய்ந்தன.

"நான் தேடிய பெண் எனக்குக் கிடைத்து விட்டாள். இனிமேல் துஷ்ட தேவதைகளை நான் நாடப்போவதில்லை!" என்று கூறினார் டோடி.

ஹொலிவூட் நடிகைகளையும், தன் பின்னால் அலையும் மொடல் அழகியான கெல்லி ஃபிஷரையும்தான் துஷ்ட தேவதைகள் என்று குறிப்பிட்டார்.

டயானாவை சந்தித்து நட்பு மலர்ந்த பின்னர் ஹொலிவூட் பக்கம் செல்வதையே நிறுத்திவிட்டார் டோடி.



ஹெலியில் சென்று இறங்கியபோது எட்டத்தில் இருந்து எடுக்கப்பட்ட படம் கைகோர்த்தபடி டயானா, டோடி

### நான் தயார்தான்

அடுத்த கேள்வி டோடியிடமிருந்து. "அப்படியானால் நாம் திருமணம் செய்து கொள்ளலாமா?"

டோடியின் கேள்விகளுக்கு முன் கூட்டியே தீர்மானித்தது போல, மிகத் தெளிவாகவும், தீர்க்கமாகவும் டயானாவிடம் இருந்து பதில் வந்தது.

"ஆம். அதனைத்தான் நானும் விரும்புகிறேன். எனக்கு ஒரு துணை தேவை. உங்களை விட சிறந்ததுணை எனக்குக் கிடைக்கப் போவதில்லை. ஆனால்..."

"என்ன ஆனால்...?"

"என் பிள்ளைகள் இருவருக்கும் நான் இதனைத் தெரிவித்தாக வேண்டும். அதற்கு முன்னர் உங்களை அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும். வில்லியம் தோளுக்கு மேல் வளர்ந்து விட்டான். அவன் என் நிலையை புரிந்து கொள்ளுவான் என்று நம்புகிறேன்."

டயானா அதனைக் கூறும் போது கவலையடைந்திருந்தார். தன் முடிவுக்கு எத்தகைய எதிர்ப்புக்கள் கிளம்புமோ என்றும் சிறிது கலக்கம் அடைந்தார்.

அவருக்கு தைரியம் கூறினார் டோடி. தனது மனக்குழப்பத்தைத் தீர்க்க டயானா ஒருவரைச் சந்திக்க விரும்பினார்.



பிரச்சனைகளுக்கு நல்ல வழி காட்டுவார், என்று நம்பினார் டயானா.

அதனை டோடியிடமும் கூறினார். டோடிக்கும் டயானாவின் மனப்பாரம் குறைந்தால் போதும். அவரும் டயானாவுடன் செல்லத் தீர்மானித்தார்.

1997 ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் டோடிக்கு சொந்தமான ஹெலிகொப்டரில் ரீட்டாவைக் காணச் சென்றனர்.

ரீட்டாவுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. பசுமை சூழ்ந்த பகுதியில் ரீட்டாவின் இல்லம் அமைந்திருந்தது.

ரீட்டாவின் வீட்டின் பின்புறவளவில் ஹெலி தரை இறங்கியது.

ஹெலியிலிருந்து டோடி முதலில் இறங்கினார். டயானா இறங்குவதற்கு கைகொடுத்து உதவினார்.

இருவரும் கைகோர்த்தபடி ரீட்டாவின் இல்லத்துக்குள் சென்றனர்.

தமது கிராமத்தில் ஹெலி வந்து இறங்கியது அந்தக் கிராமத்தினருக்கு வியப்பை ஏற்படுத்தியது.

முக்கியமான யாரோ ஒருவர்தான் வந்திருக்க வேண்டும் என்று நினைத்து ஹெலி இறங்கிய பகுதி நோக்கி ஓடினார்கள்.

ஹெலியில் இருந்து இறங்கிச் சென்றவர்களில் ஒருவர் டயானாதான் என்று இனம் காண்பது அவர்களுக்கு கஷ்டமாக இருக்கவில்லை.

கிட்டத்தட்ட 90 நிமிடங்கள் ரீட்டாவின் இல்லத்தில் இருந்தார்கள். டயானாவும், டோடியும்.

இதற்குள் தகவல் எங்கும் பரவியதால் கூட்டம் சேர்ந்து விட்டது. டயானா வெளியே வரும் போது பதினொரு வயதுச் சிறுமி ஒருத்தி கம்பிவேலியால் புகுந்து அவரை நோக்கி ஓடினாள்.

அவளது கையில் கமரா இருந்தது. கம்பி வேலி அவளுடைய உடையைக் கிழித்திருந்தது அதனைப் பொருட்படுத்தாமல் டயானாவை படம்பிடிக்க ஓடினாள். டயானாவை நெருங்கியதும் தன் கமராவை உயர்த்தினாள்.

எம்மா ராட்ஃபோட் என்னும் அச்சிறுமியை பார்த்ததும், டயானாவுக்கு கோபம் வரவில்லை. பரிவோடு புன்னகை செய்தபடி, "தயவு செய்து படம் எடுக்காதே!" என்று கெஞ்சினார்.

அந்தச் சிறுமி டயானாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டாள். படம் எடுக்காது திரும்பிச் சென்றாள். ஆனால், தகவல் அறிந்து அங்கு வந்திருந்த அக் கிராமத்து ஆள் ஒருவர் இரகசியமாக மறைந்து நின்று படம் எடுத்ததை டயானா காணவில்லை.

அப் படங்கள் பின்னர் பிரபல பத்திரிகை ஒன்றால் விலைக்கு வாங்கப்பட்டு பிரசுரமாகியது. அவை பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அதற்கு டயானா அஞ்சவில்லை.

அவர் திடமான முடிவுக்கு வந்திருந்தார்.

## ஹெலியில் இரகசிய பயணம்

தன் மகனது போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் அல் ஃபாயிட்டுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

தன் மகனிடம் எப்போதும் குடிகொண்டிருந்த சோகத்தின் நிழல் தூரவிலகிக் கொண்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது.

டயானாவும், டோடியும் தம்பதியாக வேண்டும் என்பதற்காக எதையும் செய்யத் தயாரானார் அல் ஃபாயிட்.

தன் மகனது சந்தோசம் தவிர, இன்னொரு காரணமும் அல் ஃபாயிட்டின் இந்த விருப்பத்தின் பின்னால் இருந்தது.

அல் ஃபாயிட்டுக்கும், டோடிக்கும் பிரிட்டன் குடியுரிமை வழங்க மறுத்துவந்தது. அந்த நாட்டின் இளவரசியையே தன் வீட்டு மருமகளாக்கி பிரிட்டிஷ் அரசுக்கு தன் பெருமையை உணர்த்த எண்ணினார் அல் ஃபாயிட்.



ஹெலியில் ஏறுவதற்கு முன்னர்

டயானாவும், டோடியும் தங்கள் காதலை முதலில் இரகசியமாகவே வைத்திருந்தனர். எனினும் அடிக்கடி சந்திக்கும் ஆசையால், அந்த இரகசியத்தைக் காக்க முடியவில்லை.

'பிலபல எகிப்திய தொழிலதிபர் டோடியுடன் இளவரசி டயானா காதல்' என்று செய்தி வெளியானது.

செய்திகளைப் பார்த்ததும் டயானா, டோடி இருவருமே முதலில் துணுக்குற்றபோதும், பின்னர் சகஜமாக எடுத்துக் கொண்டனர்.

"எப்படி இருந்தாலும் என்றோ ஒரு நாள் தெரியத்தானே போகிறது" என்று டோடி கருதினார்.

ஒருநாள் டயானாவிடம் நேரடியாகவே டோடி அந்தக் கேள்வியை எழுப்பினார்.

"என்னை நீ காதலிக்கிறாயா?"

டோடி அக் கேள்வியைக் கேட்டதும் டயானா உடனடியாகப் பதில் சொல்லி விடவில்லை.

அவரது காந்தக் கண்கள் டோடியை உற்று நோக்கின. காதலோடு பார்த்தால் என்பதற்கான முழு அர்த்தம் அந்தக் கண்களில் ததும்பி நின்றது.

அதன்பின்னர் மிகவும் திடமான குரலில் டயானா கூறினார்: "மிக நிச்சயமாக-ஆம்!"

டயானா சந்திக்க விரும்பியவர் ஒரு பெண்மணி. மனோதத்துவ நிபுணர். அவரது பெயர்: ரீட்டா ரோஜர்ஸ்.

இங்கிலாந்தில் லோவர் பில்ஸ்லே என்ற இடத்தில், டேர்பிஷையர் என்னும் கிராமம் இருக்கிறது. அங்குதான் ரீட்டா வசித்து வருகிறார்.

ரீட்டாவைச் சந்தித்தால் பல பிரச்சனைகளுக்கு முடிவு கிட்டும். தன் மனதை வாட்டும்



ரீட்டா ரோஜர்ஸ்

**(அடுத்த வாரமும் வரும்)**


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**முதலியாகுளம் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | இ. நல்லம்மா, காணி இல. B-15, கற்காரன்குளம், முதலியாகுளம். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**


- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு வைர மோதிரப் போட்டி




படிப்பகம்





கப்ப லேறு வாயோ – அடிமை!
கடலைத் தாண்டுவாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே! அடிமை!
கொற்றத் தவிசுமுண்டோ?

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# அவசரம் கூடாது

ஒரு கிராமத்தில் இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் வேலைவெட்டி எதுவுமின்றி நேரத்தைப் போக்கி வந்தான்.

இதைக் கண்ட அவனது தந்தை, அவனிடம்,

"நீ இப்படி சோம்பேறியாக இருக்கிறாயே, நான் சாகும் முன் நீ சிறந்த வீரனாக வேண்டும் என்று விரும்புகிறேன். நீ என்னவென்றால் இப்படி சோம்பேறியாக இருக்கிறாயே?" என்றார்.

இதைக் கேட்ட அந்த இளைஞனுக்கு ரோசம் வந்துவிட்டது.

அவன் நேராக ஒரு குருவிடம் போனான்.

"குருவே! நான் வாள் வீரனாக வர ஆசைப்படுகிறேன். எனக்கு வாள்ச்சண்டை கற்றுக் கொடுங்கள். என் தந்தை இறப்பதற்குள் நான் வீரனாக வேண்டும். நான் எத்தனை ஆண்டுகளில் வீரனாக முடியும்?" என்று கேட்டான் இளைஞன்.

"பத்து ஆண்டுகள் ஆகும்!" என்று சொன்னார் குரு.

"குருவே, பத்து ஆண்டுகள் அதிகம். நான் இரண்டு மடங்கு கஷ்டப்பட்டு உழைக்கிறேன். அப்படியானால் இதை எவ்வளவு விரைவாகக் கற்க முடியும்?" என்று கேட்டான் இளைஞன்.

அதற்கு குரு, "இருபது ஆண்டுகள் பிடிக்கும்!" என்று கூறினார்.

"இரண்டு மடங்கு உழைக்கிறேன் என்று சொன்னேன். அப்படியானால் பயிற்சிக் காலம் குறையவல்லவா வேண்டும்?

சரி.... நான் ஓய்வே எடுத்துக் கொள்ளாமல் கற்றுக்கொள்கிறேன். இப்போது சொல்லுங்கள். எவ்வளவு காலத்தில் கற்க முடியும்?" என்று கேட்டான் இளைஞன்.

குரு அமைதியாக, "முப்பது ஆண்டுகள் ஆகும்!" என்றார்.

இதைக் கேட்டு வியப்படைந்த இளைஞன், "குருவே, முதலில் கேட்கும்போது பத்து வருடங்கள் என்றீர்கள். பிறகு அதைப் போல் இரண்டு மடங்கு உழைக்கிறேன் என்று சொல்ல, இருபது வருடங்கள் என்றீர்கள். இப்போது, ஓய்வே இல்லாமல் கற்றுக் கொள்கிறேன் என்று சொல்ல முப்பது வருடங்கள் என்கிறீர்கள்.

உண்மையில் முன்னரைவிட கஷ்டப்பட்டுக் கற்கும்போது, கற்கும் காலம் குறையவல்லவா வேண்டும்? ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"இதோபார், ஒரு வித்தையைக் கற்றுக் கொள்ள ஆர்வம் இருக்க வேண்டும். அவசரம் இருக்கக் கூடாது. அவசரப்படுபவன் மெதுவாகத்தான் அதைக் கற்றுக் கொள்ள முடியும்.

ஏனென்றால், அவசரம் என்பது கவனத்தைக் கூர்மைப் படுத்த விடாது!" என்று கூறினார் குரு.



# அதிசயம் – ஆனால் உண்மை!



←டோவருக்கும், கலைஸுக்கும் இடையே உள்ள ஆங்கிலக்கால்வாயை மூன்று சக்கர சைக்கிளில் அமர்ந்து 8 மணிநேரத்தில் ஜக் டெரி என்பவர் கடந்தார். இவர் சைக்கிள் சக்கரங்களை நீரில் மிதந்து இருக்கக் கூடியவாறு பொருத்தினார்.



↗ இந்தியாவில் உள்ள மொராதாபாத்தில் 1888ம் வருடம் ஏப்ரல் மாதம் பனிக்கட்டி மழை பெய்தது. பெரிய பந்துகள் போன்று பனிக்கட்டிகள் சரமாரியாகப் பெய்ததால் 230 பேர் இறந்தனர்.



↑ 'யு.எஸ்.போலாரிஸ்' என்ற கப்பல், ஆர்ட்டிக் சமுத்திரத்தில் போய்க் கொண்டிருந்தபோது பனிப்பாறை மீது மோதி உடைந்தது. கப்பலில் இருந்த 19 மாலுமிகளும், அச்சமயத்தில் மிதந்து கொண்டிருந்த பனிப்பாறையின் மீது தொத்திக் கொண்டனர். 196 நாட்களின் பின் அவர்கள் நல்லவிதமாகக் கரையேறினர்.

# சாய்ந்த கோபுரம்


சாய்ந்த கோபுரம் என்றால் பலரது நினைவுக்கு வருவது உலக அதிசயங்களுள் ஒன்றான பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் தான். ஆனால் இன்னொரு கோபுரம் பல நூறு ஆண்டுகளாகச் சாய்ந்தவாறு நின்று கொண்டிருக்கிறது.

இந்தச் சாய்ந்த கோபுரம் ஆப்கானிஸ்தானில் உள்ளது. இது 800 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. 213 அடி உயரமானது.

இந்தக் கோபுரம் முழுவதும் செங்கல், களிமண் மற்றும் சுண்ணாம்பு கலவையால் கட்டப்பட்டுள்ளது. கோபுரத்தின் வெளிப்பகுதிகளில் கணிதக் குறியீடுகள் போன்று வரையப் பட்டுள்ளன. இது ஆப்கானிஸ்தான் நாட்டின் பழங்கால மொழியான கோரன் மொழியில் எழுதப்பட்டுள்ள பொன்மொழிகளாகும். அத்துடன் ஆப்கானிஸ்தானை ஆண்ட சுல்தானின் ஆட்சி சிறப்பையும் இதில் எழுதி வைத்துள்ளனர்.

கோபுரத்தின் உச்சிக்குச் செல்ல, கோபுரத்தின் உள்ளே மரப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று இடங்களில் பலகணிகளும், ஆங்காங்கே காற்றும் வெளிச்சமும் உள்ளே வர ஜன்னல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானின் நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டுவரும் இந்தக் கோபுரத்தைப் பார்க்க, பல நாடுகளிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள்.



# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.04.1999.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 292**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 290

**பரிசுக்குரியவர்:**
எச். நிஷார்ணி,
மட்/ வின்சன்ற் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நிஷாந்தினி ரட்ணம், தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | பு. பிரேமசகி, புனித அன்னம்மாள் மகளிர் ம.வி., கொழும்பு-13 |
| எஸ்.எம். ரிம்லா, மாறை/ அல் மினா ம.வி., மீயல்லை, ஹக்மனை. | ஆர். டிலோஷன், அக்கரைப்பற்று முஸ்லிம் ம.கல்லூரி, அக்கரைப்பற்று. |
| பா. ஹரிகுகேஷ், றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், வத்தளை. | என். ரூபிணி, புனித அன்னம்மாள் ம.மா.வித்தியாலயம், வத்தளை. |
| எஸ். விஜயகுமார், றோசாரி ஒழுங்கை, குடாப்பாடுவ, நீர்கொழும்பு. | கே. சுதர்ஸன், பாரதி தமிழ் மகா வித்தியாலயம், வத்தேகம. |
| ஏ. சர்மிளா, கமு/ மஹ்முத் மகளிர் கல்லூரி, கல்முனை. | சி. உமாசுதன், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. |

# 'பல்'சுவைச் செய்திகள்

* முதலைகளுக்கு வாழ்நாளில் எத்தனை தடவைகள் பல் விழுந்தாலும் மறுபடி முளைத்துவிடும்.
* ஆமைக்குப் பற்கள் கிடையாது.
* லெமன் சுறாக்களுக்கு ஓராண்டில் மட்டும் 24 ஆயிரம் புதிய பற்கள் தோன்றுகின்றன.
* ஒக்டோபஸுக்கு 'கிளிமூக்கு' போன்ற ஒரேயொரு பல்தான் உள்ளது.
* டொல்ஃபினின் மேல் தாடையில் 80 பற்களும், கீழ்த்தாடையில் 80 பற்களும் இருக்கும்.
* தேரைக்குப் பற்கள் இல்லை.
* பாம்பின் பற்கள் இரையைக் கடித்துச் சப்புவதில்லை. கவ்விய இரையைத் தப்ப விடாமல் செய்யவே பாம்பிற்குப் பற்கள் பயன்படுகின்றன.
* நுளம்புகளுக்கு 47 பற்கள் உள்ளன.
* தேனீக்களுக்கும் பற்கள் உள்ளன.
* எலியின் மேல் பல் விழுந்துவிட்டால் கீழ்ப்பல் வேகமாக வளர்ந்து மூளையைத் துளைத்து விடும். இதனால் எலி இறந்து விடும்.

# விலங்குகளின் வேகம்

சில மிருகங்களின் ஓட்ட வேகம் ஒரு மணி நேரத்தில் எப்படியிருக்கும் போன்ற விவரங்கள் வருமாறு:

| விலங்கு | வேகம் |
|---|---|
| சிறுத்தை | 112 கி.மீ. |
| மான் | 95 கி.மீ. |
| சிங்கம் | 88 கி.மீ. |
| முயல், நரி | 75 கி.மீ. |
| குதிரை, வரிக்குதிரை | 64 கி.மீ. |
| வேட்டை நாய் | 64 கி.மீ. |
| எருமை | 55 கி.மீ. |
| ஒட்டகச்சிவிங்கி, ஓநாய் | 45 கி.மீ. |
| யானை | 35 கி.மீ. |
| கங்காரு, செம்மறி ஆடு | 25 கி.மீ. |
| ஒட்டகம், பன்றி | 15 கி.மீ. |

# பெயர் வரக் காரணம்?

பிச்சைக்காரர்களை ஆங்கிலத்தில் 'பெக்கர்' (BEGGER) என்று அழைக்கிறோம். இந்த பெக்கர் என்ற சொல் எப்படி வந்தது என்று தெரியுமா?

பதினெட்டாம் நூற்றாண்டில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த லாம் பெர்ட்ஸ்பெக் என்பவர், ரோமன் கத்தோலிக்கப் பெண்களை அழைத்து, ஒரு சங்கம் அமைத்தார். இவர்களின் பணி சமூக சேவை செய்வது.

இவர்கள் சமூக சேவை செய்வதற்குரிய பணத்தை பெரும் பணக்காரர்களிடம், அரசாங்கத்திடமும் பெற்று வந்தனர். இந்தச் சங்கத்தை 'பெக்கார்ஸ்' என்று அழைத்தனர். 'பெக்கார்ஸ்' என்ற சொல்லே நாளடைவில் மருவி, பிச்சையெடுப்பவர்களுக்கு 'பெக்கர்ஸ்' என்றாகியது.



# உலகின் முதல் அச்சகம்

உலகில் முதன் முதலாக சீனா மற்றும் கொரியா ஆகிய நாடுகளில்தான் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. அச்சிடப்பட்ட ஆண்டு கி.பி. 700.

இதற்காக மரத்தாலான அச்சுக்கள், காகிதங்கள், மை ஆகியவைகளும் சீனாவில்தான் முதன் முதலாக உருவாக்கப் பட்டன. பெரிய அளவிலான அச்சு முறைகள் 1050ம் ஆண்டு சீனாவில் தயாரானது. முதன் முதலில் உலோக அச்சுக்கள் கொரியாவில் உருவாகின.



ஜெர்மனியைச் சேர்ந்த கூடென்பேர்க் என்பவர் கி.பி. 1450ல் உலோக அச்சு இயந்திரம் மற்றும் உலோக அச்சுக்களை உருவாக்கினார்.

இந்த அச்சுக் கூடத்தில் உருவான முதல் முழுப் புத்தகம்தான் புனித வேதாகமம். இதை 'கூடென் பேர்க் பைபிள்' என்று அழைக்கிறார்கள். இது 1454ம் ஆண்டு உருவானது.

# ஈப்புலி

ஈப்புலி என்பது ஒரு வகைச் சிலந்தியாகும். கணுக்காலிகள் தொகுதியில் அராக்னிடா வகுப்பைச் சேர்ந்த இவை, இத்தாலியில் ஒரு காலத்தில் ஏராளமாகக் காணப்பட்டன.

பொதுவாகச் சிலந்திகள் வலைகள் பின்னி, அவற்றின் இழைகளில் சிக்கிக் கொள்ளும் பூச்சிகளைப் பிடித்து உண்ணும் வழக்கமுடையவை.



ஆனால் ஈப்புலி, புலியைப் போல் பதுங்கிச் சென்று ஈக்களைப் பிடிக்கும். இதனால் இதற்கு ஈப்புலி என்று பெயர்

சிலந்தியைப் போலல்லாது இதன் உடல் முழுவதும் மயிர்களடர்ந்து காணப்படும். பெரும்பாலும் இவ்வகைச் சிலந்திகள் உலகின் வெப்பப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றின் உடல் நீளம் 3.5 சென்டி மீட்டர். கால்களின் நீளம் 20–25 சென்டி மீட்டர்.

ஈப்புலிகள் பகலில் கற்களினடியிலும், புதர்களுக்கடியிலும் மறைந்திருந்து இரவில் இரைதேடக் கிளம்பும். பூச்சி, புழு, சிறிய தவளை, தேரை முதலியன இவற்றின் உணவாகும்.

இவை சிறிய விலங்குகளைக் கொல்லுமளவிற்கு நச்சுத்தன்மையுடையவை. இவற்றால் கடிபட்ட மனிதர்களுக்கு 'ட்ரண்டிசம்'என்னும் நோய் உண்டாகும்.

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி

## 24

### மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான். இந்நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.

இனி......

நித்தியன் இந்த இரவு நேரத்தில் காரை எடுத்துக் கொண்டு எங்கே போயிருப்பான்? அதுவும் ரிவால்வரை எடுத்துக் கொண்டு?' இன்ஸ்பெக்டர் குமரன் தன் கன்னப்பரப்பை இடது கை விரல்களால் தேய்த்துக் கொண்டே அந்த வேலைக்காரனைப் பார்த்தார்.

"பெரியவர் வீட்டுக்குள்ளே இருக்காரா?"

"இருக்கார்ங்க"

"கூப்பிடு!"

வேலையாள் உள்ளே போன இரண்டாவது நிமிஷம் ருத்ரமூர்த்தி லேசான தூக்கக் கலக்கத்தோடு வெளியே வந்தார். வியப்பாய் வரவேற்றார்.

"வாங்க... இன்ஸ்பெக்டர்! என்ன இந்த நேரத்துல..."

"உங்க சன் நித்தியனைப் பார்க்க வந்தேன். ஆனா அவர் இப்பத்தான் கார்ல கிளம்பிப் போறதா வேலைக்காரன் சொல்றான். நித்தியன் வெளியே போனது உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது இன்ஸ்பெக்டர்.



நித்தியன் வெளியே போன விஷயம் இப்போ வேலைக்காரன் சொல்லித்தான் எனக்கே தெரியும்."

"நித்தியன் இடுப்புப் பகுதியில் ரிவால்வர் இருந்ததாய் வேலைக்காரன் சொல்கிறான். நித்தியன்கிட்ட ரிவால்வர் வெச்சுக்கிறதுக்கான லைசென்ஸ் இருக்கா?"

"இருக்கு இன்ஸ்பெக்டர். பாதுகாப்புக் கருதி, அஞ்சாறு வருஷங்களுக்கு முன்னாடியே நானும் நித்தியனும் ரிவால்வர்க்கான லைசென்ஸ் வாங்கிக்கிட்டோம்."

"நித்தியன் இந்த ர்ாத்திரி நேரத்துல ரிவால்வரோட எங்கே கிளம்பிப் போயிருப்பார்ன்னு உங்களால சொல்ல முடியுமா?"

"எனக்குத் தெரியலை இன்ஸ்பெக்டர். பட் சாதாரணமா ராத்திரி நேரங்களில் அவன் வெளியே கிளம்பும்போது ரிவால்வர் எடுத்துக்கிட்டுத்தான் கிளம்புவான். வேலைக்காரன் இன்னிக்கு புதுசா பார்த்ததினால, அதை ஒரு ஆச்சரியமான விஷயமா சொல்லியிருக்கான்."

இன்ஸ்பெக்டர் குமரன் ருத்ரமூர்த்தியை வெகுவாய் நெருங்கி மெல்லிய குரலில் சொன்னார்,

"உங்க சன் நித்தியன் கிட்டே ஏதோ ஒரு தப்பு இருக்கு மிஸ்டர் ருத்ரமூர்த்தி."

"தப்பா... என்ன தப்பு?"

"நித்தியன் ஒரு ஜெயில் ரிட்டர்ன் இல்லையா? பம்பாய் ஜெயில்ல ஒரு வருஷம் கம்பி எண்ணிட்டு வந்திருக்கார். உண்டா இல்லையா?"

"இ- இ... இன்ஸ்பெக்டர்...?"

"எல்லா விஷயமும் வெளியே வந்தாச்சு. இனிமே நீங்க எந்த ஒரு விஷயத்தை மறைக்க முயற்சி பண்ணினாலும் அது உங்களுக்கு பாதகமாகவே முடியும்."

ருத்ரமூர்த்தி குரல் தழுதழுத்தார். "இன்ஸ்பெக்டர்! நித்தியன் ஜெயிலுக்குப் போனது உண்மைதான். பட் ஹி ஈஸ் ஹார்ம்லஸ். கோர்ட் சந்தேகத்தின் அடிப்படையில் அவனுக்கு தண்டனை வழங்கியிருக்கு. அவன் எந்தக் குற்றமும் செய்யாதவன்."

"இருக்கலாம்! ஆனா... சாந்தா காணாமல் போன விஷயத்தில் பொய் சொல்லியிருக்கார்."

"பொய்யா? என்ன பொய்?"

"சாந்தா காணாமே போன இடமான முகுந்தன் வீட்ல ரெண்டு விதமான ப்ளட் க்ரூப் ஸ்டெய்ன் இருந்தது. ஒரு ப்ளட் க்ரூப் பி.பாஸிட்டிவ். இன்னொரு ப்ளட் க்ரூப் ஓ.பாஸிட்டிவ். இந்த ரெண்டுல சாந்தவோட ப்ளட் க்ரூப் பி.பாஸிட்டிவ். சாந்தா விவகாரத்துல சம்பந்தப்பட்டவங்க நபர்களில் யாருக்கு ஓ.பாஸிட்டிவ் க்ரூப் இருக்குன்னு ரகசியமா கம்பேர் பண்ணிப் பார்த்தபோது, அது நித்தியனோட ப்ளட் க்ரூப்புன்னு தெரிஞ்சுது. பட் நித்தியன் தனக்கு ப்ளட் க்ரூப் ஏ.பி. நெகட்டிவ்ன்னு சொல்லியிருக்கார்."

ருத்ரமூர்த்தி வியப்பில் நெற்றியைச் சுருக்கினார். "இன்ஸ்பெக்டர்! நித்தியன் சொன்னது சரிதான். அவனோட ப்ளட் க்ரூப் ஏ.பி. நெகட்டிவ் தான். ஓ. பாஸிட்டிவ் கிடையாது."

"ஆர் யூ ஷ்யூர்?"

"ஷ்யூர் இன்ஸ்பெக்டர்! நான் அதை இவ்வளவு உறுதியாச் சொல்றதுக்குக் காரணம்- எனக்கும் நித்தியனுக்கும் ஒரே ப்ளட் க்ரூப். நான் ஒரு தடவை ஜான்டீஸ் வந்து கஷ்டப்பட்டபோது எனக்கு ப்ளட் கொடுத்ததே நித்தியன்தான். இதை நீங்கள் என்னோட ஃபேமிலி டாக்டர் ராவ்கிட்டேயே கேட்டு கன்ஃபார்ம் பண்ணிக்கலாம்."

இன்ஸ்பெக்டர் குமரன் இப்போது குழப்பமானார். "மிஸ்டர் ருத்ரமூர்த்தி கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் சப் இன்ஸ்பெக்டர் ஜோசப் உங்க ஃபேமிலி டாக்டரோட நர்சிங் ஹோமுக்கு ஃபோன் பண்ணி நித்தியனோட ப்ளட் க்ரூப் எதுன்னு கேட்டிருக்கார். கிடைச்ச பதில் ஓ.பாஸிட்டிவ்."

"இருக்காது இன்ஸ்பெக்டர் ஜோசப் பொய் சொல்லமாட்டாரே?"

"அவருக்கு டெலிஃபோன்ல பதில் சொன்னது யார். டாக்டர் ராவா?"

"இல்லை... ஒரு நர்ஸ்."

"அந்த நர்ஸுக்கு உண்மையிலேயே நித்தியனோட ப்ளட் க்ரூப் எதுன்னு தெரியாம இருக்கலாம்."

"உங்க டாக்டர் வீட்டு ஃபோன் நெம்பர் என்ன?"

ருத்ரமூர்த்தி ஃபோன் நெம்பர் சொல்ல, குமரன் அதை மனதில் வாங்கிக் கொண்டு பக்கத்தில் இருந்த டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டார். டயலில் எண்களைத் தட்ட மறுமுனையில் ரிங்போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"டாக்டர் ராவ்?"

"எஸ்....ஸ்பீக்கிங்....!"

"டாக்டர் ராவ்! நான் இன்ஸ்பெக்டர் குமரன். இப்ப ருத்ரமூர்த்தி வீட்லயிருந்து பேசிட்டிருக்கேன்," என்று சொன்னார். மறுமுனையில் டாக்டர் அதை செவிமடுத்து விட்டு, தீர்மானமான குரலில் சொன்னார்,

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! நித்தியன் ப்ளட் க்ரூப் ஏ.பி. நெகட்டிவ் தான். நோ டவுட். உங்க சப்-இன்ஸ்பெக்டர் ஜோசப்புக்கு டெலிஃபோனில் பதில் சொன்ன நர்ஸ் பேர் உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"நோ... ப்ராப்ளம்... நீங்க இன்னும் பத்து நிமிஷத்துக்கு ருத்ரமூர்த்தி வீட்டிலேயே இருங்க... நான் ஹாஸ்பிடலுக்கு ஃபோன் பண்ணி உண்மை நிலவரம் என்னன்னு கேட்டு தெரிஞ்சு உங்களுக்கு ரிங் பண்றேன்."

"ப்ளீஸ்..."

இன்ஸ்பெக்டர் குமரன் ரிஸீவரை வைத்துவிட்டு காத்திருந்தார். சரியாய் பத்து நிமிஷம்.

டெலிஃபோன் கூப்பிட்டது. குமரன் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுக்க, டாக்டர் ராவ் பேசினார்.

"இன்ஸ்பெக்டர்! பெயர் குழப்பத்தால் தான் இந்த தப்பு நேர்ந்திருக்கு. சப்-இன்ஸ்பெக்டர், நித்தியனின் ப்ளட் க்ரூப் சம்பந்தமாய் ஃபோன் செய்தபோது அந்த டெலிஃபோனை அட்டெண்ட் பண்ணியது உண்ணி மேரி என்கிற புதிய நர்ஸ். நித்தியனின் ப்ளட் க்ரூப் எது என்று ஜோசப் கேட்டதும், நர்ஸ் உண்ணி மேரி பேஷண்ட்ஸ் ப்ளட் க்ரூப் ஃபைலை எடுத்துப் புரட்டிப் பார்த்திருக்கா. பொலிஸோட என்கொயரிங்கிற பதட்டத்துல நித்தியனோட ப்ளட் க்ரூப் கார்டை எடுத்துப் பார்க்கிறதுக்குப் பதிலா சத்தியன் என்கிற பேஷண்ட்டோட கார்டை எடுத்துப் பார்த்துட்டு ஓ. பாஸிட்டிவ்ன்னு சொல்லியிருக்கா. நடந்த குழப்பம் இதுதான். நான் இப்ப சொன்னதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா இப்பவே இந்த நிமிஷமே நீங்க என்னோட நர்ஸிங் ஹோமுக்கு புறப்பட்டு வரலாம்."

"நோ.... டாக்டர்... ஐ பிலீவ் யூ... இந்த ராத்திரி நேரத்துல உங்களை தொந்தரவு படுத்தியதற்காக மன்னிக்கணும்."

"வாட் ஈஸ் தேர்! உங்க ட்யூட்டி என்கொயர் பண்ண வேண்டியது. என்னோட ட்யூட்டி சரியான பதிலைச் சொல்ல வேண்டியது. ரெண்டு பேருமே அவங்கவங்க கடமையைத்தான் பண்ணியிருக்கோம். பை...த...பை... இப்போ நித்தியன் எங்கே?"

"அதை ட்ரேஸ் பண்றதுதான் அடுத்த வேலை!" இன்ஸ்பெக்டர் குமரன் ரிஸீவரை வைத்துவிட்டு வியர்வை மின்னும் முகமாய் ருத்ரமூர்த்தியிடம் திரும்பினார்.

★☆→

சோடியம் வேப்பர் விளக்குகளின் மாம்பழ வண்ண வெளிச்சத்தில் நனைந்து நனைந்து கிடந்த போக்குவரத்தற்ற ரோடுகளில் காரை விரட்டிக் கொண்டிருந்தான் நித்தியன்.

கார் வளைவுகளில் சீறி பூந்தமல்லி ஹை ரோட்டைத் தொட்டு வானவில் ரெஸ்டாரெண்ட்டுக்குப் பக்கத்தில் வந்ததும் வேகம் குறைந்து ஊர்ந்தது.

ஒரு டெலிஃபோன் பூத்துக்கு அருகில் நின்றிருந்த முகுந்தன் காருக்குப் பக்கத்தில் ஓடி வந்தான்.

"நித்தியன்!"

"மொதல்ல கார்ல ஏறு!"

அவன் காரைச் சுற்றி வந்து ஏறி கொண்டான். கார் சூறாவளியாய் கிளம்பியது.

"முகுந்தன்! நீ ஃபோன்ல சொன்னது உண்மையா?"

"இதுல பொய் சொல்ல என்ன இருக்கு? நான் கண்ணால பார்த்ததைத்தான் உனக்கு அந்த நிமிஷமே ஃபோன் பண்ணிச் சொன்னேன்."

"வழி உனக்குத் தெரியுமா?"

"தெரியும்! நேரா விடு!"

காரின் ஆக்ஸிலேட்டரை பலங்கொண்ட மட்டும் மிதித்தான் நித்தியன்.

(பௌர்ணமி தொடரும்)

---

## நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

## கதை

சினிமா நடிகை என்றாலே கேவலமாக எழுதுகிறார்கள். கணவன் ஆபீஸ் போன பின்பு வருமானத்திற்காக வெளியே போகும் பல மனைவிமார்களைப் பற்றி எங்களுக்கும் தெரியும். எங்களாலும் அதை எழுத முடியும்.

'உன் மனைவி, குழந்தைகள் உனக்கு முக்கியம்' என்று உணர்த்தி எங்களைத் தேடி வந்த பல கணவர்களை திருப்பியனுப்பி பல பத்தினிகளுடைய கணவர்களை மீட்டு அவர்களிடமே ஒப்படைத்திருக்கிறோம்.

நடிகை என்பதால் தட்டிக் கேட்க ஆளில்லை. காளான்களைக் குடையாகப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, எந்தப் பெண்மையையும் கேவலப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை.

சிறு வயது முதல், நான் பெண்ணாக மாறியதிலிருந்து நான் கண்ட சராசரிக் கனவுகளை, கற்பனைகளை, பட்ட அவமானங்களை நேர்மையாகப் பகிர்ந்து கொள்வதே இந்தத் தொடரின் நோக்கம்.

என் வெற்றியில் பெருமிதம் கொள்ளவோ, தோற்றவர்களைக் காயப்படுத்துகிற எண்ணமோ எனக்கில்லை. உண்மைக்காக மட்டுமே வழக்காடினேன். அதனால் பெண்மையின் மேன்மையைக் காப்பாற்ற முடிந்தது. இதே வழக்கை எனக்குச் சாதகமாக முடித்துக் கொடுக்க எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் பல 'பெரிய' மனிதர்கள் முன்வந்தார்கள்.

ஆனால் என் உடலின் வனப்பை விட, நீதியின் வலிமை மீது எனக்கு நம்பிக்கை இருந்தது.

'உண்மை நம் பக்கம் இருந்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்' என்கிற நம்பிக்கையை கோர்ட் வாயிலில் பல வருடங்களாக தவம் கிடக்கும் அபலைகளுக்கு ஊட்டவேண்டும். அப்படி ஒரிருவருக்குச் செய்தால் அதுவே இந்தத் தொடரின் வெற்றி.

மற்ற பெண்களைவிட நான் (நாங்கள்) நடிகைகள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல.

இந்தத் தொடர் முழுவதும் உள்ளத் தூய்மையோடும், நேர்மையோடும் பேசுவேன்.

எப்போதும்போல நடிகை என்றாலே ஒரு வித பச்சைக் கண்ணாடியோடு பார்ப்பவர்களைப் பற்றி நான் கவலைப்பட போவதில்லை.

### காதலில் தோல்வி

நடிகை என்றாலே ஒரு கட்டுக்குள் வாழ விருப்பமில்லாதவள் என்கிற தவறான எண்ணம் பரவிக் கிடக்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல. நடிகை என்கிற அந்தப் பெண் ஒரு அன்பான அரவணைப்பில் கட்டுண்டு கிடக்கத்தான் ஆசைப்படுகிறாள். ஆனால் பெரும்பாலும், அவளை மணந்து கொள்ளுகிறவன் அவளுடைய புகழை வைத்து தனக்கு அங்கீகாரம் தேடிக் கொள்ளுகிறான். அவளுடைய புகழையும், பணத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து ஆட்டிப் படைக்க நினைக்கிறான்.

அப்படிப்பட்டதுதான் என் கதையும். என் திருமண வாழ்க்கை முறிந்த கதை புரிந்தால் தான் நான் வழக்காடிய வேதனையான நாட்கள் தெரியும்.

எங்களுக்கு 1978- ஆம் வருடம் திருமணம்

**ஸ்ரீவித்யா**

நடந்தது. அதற்கு முன் காதலில் தோல்வியடைந்தவள் நான். வேதனையான அந்த நாட்களில்தான் என் கணவரை சந்தித்தேன். என் காதலை, அந்தப் பழைய உறவை வெளிப்படையாகச் சொல்லித்தான் இவரை மணந்து கொண்டேன். என் வீடு, என் கணவர் என்கிற பெருமிதத்தோடு வாழ்க்கையைத் துவங்கினேன். தாய்மைக்காகத் தவம் இருந்து எட்டாண்டுகள் உருண்டோடின. 'மலடி'யாக வாழ்க்கையில் நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

அப்போதுதான் அந்தப் பிறந்தநாள் விழா 1986- ஆம் வருடம் அக்டோபர் 31- ஆம் தேதி வந்தது. யாருடைய பிறந்த நாள்...? கொஞ்சம் பொறுங்கள்.

### அதே பாத்திரம்

சின்னவயதில் என்னை வளர்த்ததில் லலிதா, பத்மினி, ராகினி மூவருக்கும் பெரும் பங்குண்டு. ராகினி, கேன்ஸர் நோய்வந்து இறந்து போனார். "என் இரண்டு பெண்களுக்கும் நீ பாதுகாப்பாய் இருக்க வேண்டும்" என்று ஆபரேஷன் தியேட்டருக்குப் போகுமுன் சொல்லிவிட்டுப் போனார் ராகினி. அவருடைய இரண்டு பெண்கள் லட்சுமி, ப்ரியா இருவருமே எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள். நாங்கள் குடியிருந்த அதே தெருவில்தான் லட்சுமியின் வீடும் இருந்தது. லட்சுமியின் குழந்தைக்கு முதலாம் ஆண்டு பிறந்த நாள் விழா. நானும், என் கணவரும் அங்கே ஆஜர். அன்றைய பிறந்த நாள் பார்ட்டிக்கு வந்தவர்களில் நடிகை அமலாவும், என் கணவரின் இந்நாள் மனைவி மீனா மேனனும், அவரது குழந்தை நவீனும் உண்டு. அப்போதுதான் முதல் கணவரை விட்டுப் பிரிந்த குழந்தையுடன் தனியாக இருந்தார் மீனா.

இந்த நேரத்தில் மீனா மேனன் பற்றிச் சொல்லியாக வேண்டும். மீனா, மலையாளப் படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். நான் கூட அவருடன் இணைந்து .:.பாசில் இயக்கத்தில் ஒரு படத்தில் நடித்திருக்கிறேன். படத்தில் அவர் முதல் மனைவி. நான் இரண்டாம்தாரம். இந்தப் பாத்திரங்கள் வாழ்க்கையில் மாறப் போகிறதென்று எனக்கு அப்போது தெரியாது.

அவர் ஒரு மலையாளத் திரைப்பட நடிகரைத் திருமணம் செய்து கொண்டார். அந்தத் திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைதான் நவீன். கணவன்-மனைவிக்குள் பிரச்சினை வந்தது. அதைத் தீர்த்து வைக்க எங்களிடம்தான் வந்தார் மீனா.

தன் கணவன் அடித்துக் கொடுமைப் படுத்துவதை கண்ணீர் மல்கச் சொல்வார். மீனாவின் மாமியார், கேரளாவில் பிரபல வழக்கறிஞர். மீனா கணவனை விட்டுப் பிரிய முடிவு செய்திருந்தார்.

நிர்க்கதியாக இருக்கும் இந்தப் பெண்ணுக்கு உரிய உதவி கிடைக்க வேண்டுமென்று நினைத்தேன். நான், மீனா, அவருடைய மாமியார் மூவரும் தாஜ் ஹோட்டலில் உட்கார்ந்து பேசினோம். சமரசம் நடந்தது.

அவர்கள் பிரிந்தபின் நான் வழக்கமாகச் செல்லும் பியூட்டி பார்லருக்கு சென்றேன். அங்கு எனக்கு facial செய்யும் பெண் என்னிடம் பேச ஆரம்பித்தாள்.



"நீங்க ஏம்மா இந்த மீனா மேனன் விவகாரத்துல தலையிடறீங்க? அவங்க கணவர் (மலையாள நடிகர்) நல்ல ஆள் இல்ல!" என்றாள்.

"எனக்கு அதப்பத்தி கவலையில்லை. அந்தப் பொண்ணுக்கு நியாயம் கிடைக்கணும். அந்தப் பொண்ணு குழந்தையோட தனியா என்ன பண்ணுவா?"

"அதில்லம்மா. உண்மையிலேயே அவங்க கணவருக்கும், எனக்கும் காதல் உண்டு. அவருக்காக என் சொத்துகளை எல்லாம் இழந்திருக்கேன். என்னால்தான் அவங்களுக்குள்ளேயே பிரச்சனை இப்ப என்னையும், அவரையும் அவங்க அம்மா பிரிக்கப் பார்க்கறாங்க. நீங்க தான் அந்தம்மாவோட பேசி சுமுகமா முடிச்சுக் கொடுக்கணும்" என்றாள்.

பியூட்டி பார்லர் பெண் சொன்னது நடந்தது. அந்தப் பெண்ணுக்காகவும் மீனாவின் மாமியாருடன் பேசினேன். இந்தப் பஞ்சாயத்து, பியூட்டி பார்லர் வாசலில் என் காருக்குள்ளேயே நடந்தது. "எவ்வளவு பணம் வேணும்ன்னாலும் கொடுத்துடேறன்" என்றார் மீனாவின் மாமியார்.

"பணத்தால எல்லாத்தையும் சாதிச்சிற முடியுமா? இந்தப் பொண்ணுக்கு வாழ்க்கை வேண்டாமா?" என்று வாதாடினேன். அந்தப் பெண்ணுக்கு சொன்னபடி நடந்து கொண்டார்களா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

இதுபோன்ற பிரச்சினை எனக்கும் வரப்போகிறது என்று தெரியாமலேயே அவர்களுக்காகப் பேசினேன். அதை இப்போது நினைத்தால் அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அதுவும் மீனாதான் என் வாழ்க்கையைச் சூறையாடப் போகிறார் என்பது அப்புறம்தானே தெரிந்தது!

இந்தச் சூழ்நிலையில்தான் லட்சுமியின் குழந்தைக்குப் பிறந்தநாள் வந்தது. பெண்கள் எல்லாம் உள்ளே இருந்தோம். வழக்கம் போல் ஆண்கள் வெளியே 'தண்ணி' பார்ட்டி ஆரம்பித்திருந்தார்கள். அப்பொழுதே எனக்கும், என் கணவருக்குமிடையே லேசான பிரிவு தலைதூக்கி விட்டது. எங்கள் வாழ்க்கை இயல்பாக இல்லை. மனதில் சில குழப்பங்கள். அதற்கேற்ப சில சம்பவங்களும் நடந்திருந்தன.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மிச்சம்

25

### இதுவரை

அரவிந்த் ஒரு பைலட். அவனது மனைவி ஜ்யோதி. அவர்களது நண்பன் விக்ரம். அவனுக்கு ஜ்யோதிமீது ஆசை. இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஓடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான்.

அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை- எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.

பொலிஸ் சுடுகிறது. சீனு இறக்கிறான். கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர். அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.

நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார். அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.

இனி...

பொலிஸின் நெருக்கமான வியூகம் சூழ்ந்திருக்க பிரகாஷ் குப்தா மெல்ல ஹெலிகாப்டர் நிறுத்திியிருந்த இடத்திறகு நகர்ந்தார். எங்கிருந்தோ மோகனன் வந்து சேர்ந்து கொண்டார். தேவேந்திரன் பற்றிய விஷயத்தை அமைச்சரிடம்கூட இப்போது சொல்ல வேண்டாம் என்று மோகனன் முடிவு செய்திருந்தார்.

"சார்!" திடீரென்று குறுக்கில் மறித்து ஒரு பொலிஸ் அதிகாரி.

"என்ன?" என்றார் மோகனன் கோபமாக.



"உங்களைப் பார்த்தே ஆக வேண்டும் என்று ஒரு ஆள் அடம் பிடிக்கிறான். இதை உங்களிடம் காட்டச் சொன்னான். மோகனன் அதை வாங்கிப் பார்த்தார். அரசாங்க முத்திரையுடன் அடையாள அட்டை. அரவிந்தின் அடையாள அட்டை! குழப்பம் அவரைத் தாக்கியது.

"எங்கே அவன்?"

இருட்டில் நின்றிருந்தவனை மோகனனிடம் காட்டினார் அந்த அதிகாரி.

மோகனன் திகைத்தார். அவனை நெருங்கினார்.

"அரவிந்த்! நீயா! உனக்கு அடிபட்டு ஆஸ்பத்திரியில் அல்லவா...?"

"இல்லை சார்... எல்லாம் விவரமாகச் சொல்கிறேன்." அவன் குரல் நடுங்கியது.

"ஹோட்டலிலிருந்து புறப்படும் நேரம் என் ரூமிற்குள் புகுந்து மூன்று பேர் என்னை அடித்துப் போட்டுக் கட்டினார்கள். எனக்குப் பதிலாக என்னைப் போலவே தோற்றமுள்ள ஷிவா என்ற பையனை அமைச்சருக்கு ஹெலிகாப்டர் ஓட்ட அனுப்புவதாக அவர்கள் பேசியதிலிருந்து புரிந்தது. என்னால் எதுவும் செய்ய முடியாத நிலை. அவர்கள் விலகிப் போன பின் கட்டில் காலில் என்னைக் கட்டியிருந்த கயிற்றைத் தேய்த்துத் தேய்த்து அறுத்தேன். விடுவித்துக் கொண்டு வெளியே வந்தேன். ஒரு வாடகைக் கார் பிடித்து ஓடக்கரைக்கு ஓடோடி வருகிறேன்..."

"உன்னைப் போலவே ஒரு ஆளா?"

"ஆமாம் சார்... வாயில் துணி வைத்து அடைத்திருந்தார்கள். தொண்டையெல்லாம் வறண்டு போய் என் குரலே எனக்குப் புரியாதபடி ஆகிவிட்டது."

"உன்னைப் போலவே ஒரு ஆள். ஹெலிகாப்டர் ஓட்டத்தெரிந்தவன். வாட் எ கிராண்ட் கான்ஸ்பிரஸி! மாபெரும் சதி! இதன் பின்னணியில் மிக சக்திவாய்ந்த கூட்டம் இருக்க வேண்டும்."

"அமைச்சருக்கு ஒன்றும் ஆகவில்லை என்று பார்த்ததும்தான் என் உயிரே எனக்குத் திரும்பியது சார்..."

"நீ அமைச்சரின் செல்லப்பிள்ளை. அவருக்கு பிளேன் ஓட்டவே வந்து விட்டாய். என்ன ஒரு திருப்பம். அவருக்குத் தெரிந்தால் எக்ஸைட் ஆவார்" மோகனன் பிரகாஷ் குப்தாவை நெருங்கி, அவர் காதோடு பேச, அவர் திரும்பிப் பார்த்து, ஆச்சரியக் கண்களை விரித்தார். கிட்டே கூப்பிட்டு அவன் தோளில் தட்டிக் கொடுத்தார்.

"அரவிந்த்... என்னால் நம்பவே முடியவில்லை! உன்னைப் போலவே இன்னொருத்தனா?" அவர் கண்கள் விரிந்தன.

"அதனால்தான் அவன் ராமேஸ்வரத்திற்கு ஹெலிகாப்டரைத் திருப்ப மறுத்து விட்டானா?"

"இருக்கலாம் சார்... அப்புறம் இன்னொரு விஷயம் சார்!"

அவன் அமைச்சரின் காதருகில் குனிந்து இரகசியமான குரலில் பேசினான்.

பிரகாஷ் குப்தா மோகனனைக் கூப்பிட்டார்.

"அரவிந்த் சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது... என் பெண்டாட்டி, உறவினர் யாரும் ஹெலிகாப்டரில் வரவேண்டாம். நம்பிக்கையான இரண்டே இரண்டு காவலர்கள் மட்டும்போதும்... அரவிந்த் இருக்கிறான் என்னைப் பார்த்துக்கொள்ள."

"நானும் தமிழக போலிஸ் அதிகாரியும் உங்களுக்குத் துணையாக வரவிருக்கிறோம்," என்று தயங்கினார் மோகனன்.

"வேண்டாம். நீங்கள் என் குடும்பத்தாருக்குப் பாதுகாப்பாக, துணையாக அவர்களுடன் மதுரைவரை வாருங்கள் மோகனன்."

"யெஸ் சார்."

ஓடக்கரைக்கு டாட்டா சொல்லி விட்டு பிரகாஷ் குப்தா ஹெலிகாப்டரில் ஏறினார்.

அவருக்குக் காவலாக இரண்டு துப்பாக்கிக் காவலர்களும் ஏறினர்.

ஹெலிகாப்டர் ஜிவ்வென்று மேலே எழும்பியது.

ஓடக்கரை இளைஞர்களை வெற்றி கண்டுவிட்ட மகிழ்ச்சியுடன் பிரகாஷ்குப்தா இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தார்.

ஹெலிகாப்டர் உயரத்திற்கு வந்து விட்டது.

"அரவிந்த்!" என்று கூப்பிட்டார், அமைச்சர் பிரகாஷ் குப்தா.

"யெஸ் சார்?" என்று பதில் வந்தது காக்பிட்டிலிருந்து.

"என்னால் இன்னமும் நம்பவே முடியவில்லை. உன்னைப் போலவே ஒருத்தனா? உன் முகம் அமிலம்பட்டு சிதைந்து போய், சர்ஜரி செய்து மாறி விட்டது. அந்த இன்னொருத்தனுக்கும் இதே போல முகம் சிதைந்து... இது எப்படி சாத்தியம் அரவிந்த்? நினைத்தால் எனக்கு ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறது."

"இன்னும் பல ஆச்சரியங்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள் சார்!" என்றான், பைலட் இருக்கையிலிருந்து அவன் லேசாகத் திரும்பி. "நீங்கள் நினைப்பது போல நான் அரவிந்த் இல்லை... ஷிவா! இந்த ஓடக் கரையைச் சேர்ந்த ஷிவா!"

"எ.... என்ன சொல்கிறாய்? விளையாட்டுப் பேச்சுக்கு இதுவா நேரம்?"

"விளையாட்டுப் பேச்சில்லை... சத்தியம்!"

"அரெஸ்ட் ஹிம்!" என்று பிரகாஷ் குப்தா அலறினார்.

காவலர்கள் இருவரும் உயர்த்தியிருந்த துப்பாக்கிகளைத் தளைத்துக் கொண்டனர்.

"ஸாரி மினிஸ்டர் ஸார்!" என்றான் ஷிவா சிரித்து.

"இந்த இரண்டு காவலர்களும் எங்கள் நண்பர்கள்... தேவந்திரனின் இராணுவ நண்பர்கள்..."

"நீ... நீ...நீ... நிஜமாகவே அரவிந்த் இல்லையா?" பிரகாஷ் குப்தா பதறினார். அப்படியானால் அரவிந்த் எங்கே?"

***

அரவிந்த் மெல்லக் கண்களைத் திறந்தான். டெட்டால் வாசம். வெள்ளை உடுப்பு நர்ஸ்கள், டாக்டர்கள். தோள் பட்டை வலித்தது. நினைவு மெல்ல அலை புரண்டது.

அவனை ஹோட்டல் ரூமில் விக்ரமின் ஆட்கள் அடித்துக் கட்டிப் போட்டார்கள். கட்டிலுக்கடியில் உருட்டினார்கள். ஒற்றை ஆள் காவல் இருந்தான். அப்போது-

அறையின் அழைப்பு மணி ஒலித்தது.

காவலுக்கு இருந்தவன், அவனுடைய ஆட்கள் என்று நினைத்துப் போய் கதவைத் திறந்தான். வெளியே லஸ்ஸியுடன் நின்றிருந்தவன் ஹோட்டல் பேரர்! அரவிந்த் அல்லாத புது ஆளைப் பார்த்து அவன் திகைக்க, அவனைப் பார்த்து மிரண்டு இவன் கதவைச் சாத்த முயற்சிக்க-பேரர் அவன் தோளைத் தாண்டி பார்வை செலுத்தி கட்டிலுக்கடியில் அரவிந்தைக் கண்டு திடுக்கிட்டான்.

அரவிந்த் கண்களால் செய்த சைகை போதுமானதாயிருந்தது.

ஹோட்டல் பேரர் கற்பூர புத்திசாலி. அதைவிட பலசாலி.

(○–வரும்–○)

## அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

06

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

**கவியரசு கண்ணதாசன்**

அவர் பேசி முடிப்பதற்கும் தங்கசாமி; குளித்து முடித்து வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

மாடி அறையில் இருந்தவர்களைப் பார்த்து, "எல்லாம் நாளை பேசலாம்!" என்றார் தங்கசாமி.

அதை ஆமோதித்தபடி, "ஆமாம். மற்ற விஷயங்கள் நாளை!" என்றார் விஜயா.

மாடியில் இருந்து கீழே இறங்கி அங்கு உட்கார்ந்திருந்தவர்களிடமும், "மன்னிக்க வேண்டும். எனக்கு பரசுராமர் சமூக தர்ம சமிதியில் பத்தரை மணிக்கு ஒரு கூட்டம் இருக்கிறது. நாளை வந்து பாருங்கள்!" என்றார்.

பின்னால் வந்த விஜயாவைச் சிலபேர் கையெடுத்துக் கும்பிட்டார்கள். அவரும் 'நாளை, என்பது போல் சைகை செய்தார்.

கதவோரத்தில் நின்றபடி "பலகாரம்" என்று இழுத்தார் நளாயினி.

"அதற்கேது நேரம்...?" என்றபடி அவர் காரில் ஏற, அவரோடு விஜயாவும் ஏற, முன் பக்கம் செயலாளர் ஏறக் கார் பறந்தது.

காரிலே பறந்து கொண்டிருந்த கொடி, வழியில் சென்ற பணக்காரர்களையெல்லாம், "நாளைக்கு வாருங்கள்" என்று அழைப்பது போலிருந்தது.

இது ப.ச.த.சமிதி.

மாலைகள் விழுந்தன. மரியாதைகள் நடந்தன. வாணங்கள் பறந்தன. மேளங்கள் முழங்கின.

"வாழ்க! ஒழிக!" இரண்டு வார்த்தைகளுக்கு மட்டுமே பழக்கப்பட்டுப்போன மனிதர்கள், அப்போது முதல் வார்த்தையை மட்டுமே சொன்னார்கள்! பின்னால் எப்போதாவது இரண்டாவது வார்த்தையைச் சொல்லுவார்கள்.

ஒரே வாய்தானே இரண்டு வார்த்தைகளையும் உச்சரிக்கிறது!

தலைவர் தங்கசாமியை வரவேற்றுப் பேசினார் ஒருவர்.

"நமது அருமைத் தலைவர், நாக்குச் செல்வர், பல பட்டங்களைப் பெற்றவர்; திட்டங்கள் போட்டவர்; சட்டங்கள் கற்றவர்; நமது கஷ்டங்கள் அறிந்தவர்," என்றவர் பேசிக் கொண்டிருக்கும் போதே, 'எங்கே வட்டங்கள் வாங்கியவர் என்றும் சொல்லி விடுவாரோ,' என்று தங்கசாமி பயந்தார்.

நல்ல வேளை, அவர் அப்படிச் சொல்லவில்லை.

"அவர் ஒழுக்க சீலர், உத்தமர், பேசத் தொடங்கினால் வார்த்தைகள், நான், நீ, என்றும் முந்தும். கல்யாண வீட்டில் சுலோகம் கேட்பது போல் இருக்கும். (அதாவது ஒன்றும் புரியாது.) அவர் இப்போது பேசுவார்!" என்றார் அவர்.

தங்கசாமி பேசத் தொடங்கினார். அவர் கண்களில் மட்டும் முதல்நாள் இரவு நேரத்தின் தொடர்ச்சி இருந்தது. ஆனால் குரலில் இல்லை.

"என் கூடப் பிறந்த பெரியோர்களே! எலும்பின் எலும்புகளே! உங்களை நானறிவேன்; என்னை நீங்களறிவீர்கள்!

அழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூக தர்மத்தைத் தூக்கிப் பிடிப்பதென்பது என் ஒருவனால் மட்டும் ஆகக் கூடியதல்ல. பேரறிஞர் ஷெல்லி சொல்லி இருக்கிறார். 'எல்லோரும் உண்மை பேசுங்கள்' என்று. எல்லோரும், உண்மை பேசினால்தான் சமூக தர்மத்தைக் காப்பாற்ற முடியும்.



பரசுராமர் என்பவர் யார்? உண்மையே பேசியவர். பகவத்கீதைக்கு விளக்க உரை எழுதியவர். அவர் அமெரிக்கரல்ல; இத்தாலியரல்ல! 'பரசு' என்ற திண்ணையில் பிறந்ததால் பரசுராமர் என்று அழைக்கப்பட்டார்.

நான் சொல்வது உங்களுக்குப் புதிதாக இருக்கும். புதிய தகவல்களைச் சொல்வதுதான் ஒரு தலைவனின் பொறுப்பான வேலை.

பேரறிஞர் ஷெல்லி ஒரு முறை சொல்லியிருக்கிறார். 'எல்லோரும் புதிய விஷயங்களையே சொல்லுங்கள்' என்று.

அதனால் நான் சொல்கிறேன், எல்லோரும் சமூக தர்மத்தைக் காப்பாற்றுங்கள்.

கிணற்றிலே தண்ணீர் ஏன் இருக்கிறது? எல்லோரும் குடிப்பதற்காகவே....!

அதுபோல் தர்மம் ஏன் இருக்கிறது? எல்லோரும் கடைப்பிடிப்பதற்காகவே....!

எங்கள் கட்சியையே நீங்கள் நம்ப வேண்டும்; மற்ற கட்சிகளை நம்பினால் கற்பழித்து விடுவார்கள்.

கற்பு என்பது என்ன? அது கருப்பு என்ற வார்த்தையில் இருந்து வந்தது.

கருப்பு என்பது என்ன? அது கண்ணுக்குத் தெரியாதது. கண்ணுக்குத் தெரியாததால்தான், அது எங்கே இருக்கிறது என்பது தெரிவதில்லை.

பேரறிஞர் ஷெல்லி ஒரு முறை சொல்லியது போல் 'எல்லோரும் கற்போடு இருங்கள்.' இதுவரை நான் பேசியதில் இருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

புரியாதவர்களுக்கு நீங்கள் விளக்கிச் சொல்லுங்கள்."

பேசி முடித்தார் தங்கசாமி.

கரகோஷம் வானைப் பிளந்தது. கம்பீரமாகத் திரும்பிப் பார்த்தார் விஜயா வேதாசலத்தை.

மறுபடியும் அவர்களைக் கார் சுமந்தது; பறந்தது.

அரவம் இல்லாத ஒரு சாலையில் கார் போய்க் கொண்டிருந்தபோது "நிறுத்துங்கள்" என்றார் விஜயா!

கார் நின்றது.

"அதோ பாருங்கள், உங்கள் மைத்துனி மாதவி; யாரோ, ஒரு வாலிபனோடு போய்க் கொண்டிருக்கிறாள்!" என்று சுட்டிக் காட்டினார் விஜயா.

அங்கே தங்கசாமியின் மைத்துனியும், நளாயினியின் தங்கையுமான மாதவி ஒரு வாலிபனுடன் கை கோர்த்துப் போய்க் கொண்டிருந்தாள்.

அதைக் கவனிக்காதவர் போல், "காரை விடு" என்றார் தங்கசாமி.

வீட்டுக்கு வந்ததும் விஜயா வேதாசலத்தை "நீ போய் நாளைக்கு வா!" என்று அவசரமாக அனுப்பினார்.

மனைவி நளாயினியை மாடிக்கு அழைத்தார். அவள் வந்ததும் வராததுமாக, "உனக்கு அறிவிருக்கிறதா?" என்றார்.

'இருந்தால் ஏன் உங்களைக் கட்டிக் கொள்ளப் போகிறேன்' என்று நளாயினி கேட்கவில்லை.

"உன் தங்கை கார்க்கோ லிமிடெட் நாராயணசாமியின் தம்பியோடு 'ஊர்' சுற்றிக் கொண்டிருக்கிறாளே! என் கவுரவம் என்ன ஆவது?" என்று எரிந்து விழுந்தார்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தங்கை

உஷாவுக்காகக் காத்திருந்தான் கார்த்திக். அவன் தலை கலைந்திருந்தது. கண்களில் கலக்கம் தெரிந்தது. 'இன்று எப்படியாவது இரண்டிலொன்று முடிவு கேட்டுவிடவேண்டும் உண்மையிலேயே உஷா என்னை விரும்புகிறாளா? கலியாணம் செய்து கொள்வாளா? என்று தெரிந்து கொள்ள வேண்டும்.' கார்த்திக்கின் நினைவுகள் திடீரென்று நின்று போயின.

உஷா வந்தாள். அவள் அவனருகில் வந்து அமைதியாக உட்கார்ந்தாள். அவள் மௌனம் கார்த்திக்கை வாட்டியது. அவனே அமைதியைக் கலைத்தான்.

"ஏய் உஷா என்ன இன்னிக்கும் அதே பதில்தானா?" கார்த்திக்கின் குரல் உயர்ந்தது. உஷாவின் தலையசைவு "ஆம்" என்று சொன்னது.

"உஷா உண்மையாகவே நீ என்னைக் காதலிக்கிறாயா?" பரிதாபமாகக் கேட்டான் கார்த்திக்.

"நான் காதலிக்கிறேன், கலியாணமும் செய்து கொள்வேன். ஆனா என் தங்கையின் கலியாணம் முதலில் முடியட்டும்!" விம்மலுக்கிடையே, உஷாவின் வார்த்தைகள் வெளியேறின.

கார்த்திக்கின் முகம் சிவந்தது. "உனக்குத் தங்கை முக்கியம். எனக்கு என் தாய் முக்கியம்- இல்லையா? வயசானவை- அதுவும் நோயாளி, எனக்குக் கலியாணம் பண்ணிப் பார்க்க அவவுக்கு ஆசை இருக்காதா? அக்கா இருக்க முதல்ல தங்கைக்கு கலியாணமா?" கார்த்திக் கேள்விகளால் உஷாவைக் குத்தினான்.

"கார்த்திக், பிளீஸ் என்னைப் புரிஞ்சுக்க. எங்களுக்கு பெத்தவங்க இல்லை. அவங்கள விமான விபத்தில் இழந்திற்ரம், ஆனா ஒரளவு சீவிக்க வசதி வச்சிற்றுப் போனாங்க. என் தங்கை பீ.ஏ. இறுதியாண்டு. அவள் கூடப்படிக்கும் ராஜ கோபாலை விரும்புகிறாள். படிப்பு முடிந்ததும் கலியாணம். அதன்பிறகு நம்.." உஷா சொல்ல வந்த வார்த்தைகளை முடிக்குமுன் கார்த்திக் சரேலென்று எழுந்து வெளியே சென்று விட்டான்.



**ரூபராணி**

இது நடந்து பலமாதங்களாகியும் உஷா மீண்டும் கார்த்திக்கைச் சந்திக்கவேயில்லை. உஷாவின் தங்கை ரமாவின் கலியாணம் நடந்து முடிந்தது. ரமாவும் அவள் கணவன் தியாகுவும் பொறுப்பு வாய்ந்த கம்பனி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்துவிட்டார்கள்.

உஷா, வீட்டில் சம்பளம் வாங்காத வேலைக்காரியாக மாறிப்போனாள். கார்த்திக்கின் நினைவுகளில் இருந்து விடுபட இது உதவி என்று எண்ணினாள்.

அன்று சனிக்கிழமை. கூடத்தில் உட்கார்ந்து இருந்த ரமா, காண்டேகர் எழுதிய 'கருகிய மொட்டு' நாவலில் தன் கவனத்தைப் பதித்திருந்தாள். காண்டேகரின் எழுத்தாற்றல், கருத்துச்செறிவு அவள் மனதில் வியப்பை உண்டு பண்ணியது.

வேலை விட்டு வந்த தியாகு உஷாவின் கவனத்தைக் கலைத்தான்.

"ஏய் ரமா ஒரு இனிப்பான செய்தி!" புத்தகத்தை வீசிவிட்டு தியாகுவின் கழுத்தை கட்டிக் கொண்டு "என்ன?" என்று அவசரப் படுத்தினாள் ரமா.

"ஆங்.... அவசரப்படாத மொதல்ல சாப்பாடு- பசி வயித்தப் பிறாண்டுது. அதுக்கப்புறம் செய்தி" ரமாவும் தியாகுவும் சாப்பாட்டு மேசையை நெருங்கினர். ஆவி பறக்கும் சாப்பாடுகள் அங்கே அவர்களுக்காகக் காத்திருந்தன. ரமா தன் அக்காவின் கைவரிசையை எண்ணிப் பெருமைப்பட்டாள்.

இருவரும் சாப்பிட்டு முடித்ததும். ரமா ஆவலுடன் தன் கணவனின் முகத்தை ஆராய்ந்தாள். தியாகு தொண்டையைச் செருமிக் கொண்டு "எல்லாம் உன் அக்கா விஷயந்தான்!" என்றான்.

தியாகுவே தொடர்ந்தான்.

"என் பாலிய நண்பன் ஒருவனைத் தற்செயலாகச் சந்தித்தேன். அவன் பெயர் சுஜன். இங்குள்ள கல்லூரி ஒன்றில் பிறின்சிப்பளாய் இருக்கிறானாம். அவனுக்கு உன் அக்காவின் வயசுதான் இருக்கும். கலியாணம் பண்ணிக்க ஆசையாம். பொண்ணுதான் சரியாக அமையலியாம். என்னை உதவி கேட்டான். உன் அக்காவ நெனைச்சன்; அருமையான ஜோடிப் பொருத்தம். எப்பிடி என் ஐடியா?" தியாகு மகிழ்ச்சியில் தன் குரலை உயர்த்திப் பேசினான்.

சமையலறைப் பக்கம் நின்ற உஷாவின் காதிலும் இது விழுந்தது. அவள் நெஞ்சு படபடத்தது. துலக்க எடுத்த பாத்திரங்களை மெதுவாக வைத்து விட்டு மெய்சிலிர்க்க கதவோரம் வந்து தன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

"என்னங்க உங்களுக்குப் புத்தியிருக்கா? அக்காவுக்குக் கலியாணம் எதுக்கு? யோசிச்சீங்களா? அவங்க கலியாணம் பண்ணிட்டா வீட்டு வேலைய யார் பாத்துக்கிறது? ரெண்டு பேருமே வேலைக்குப் போறம்; யாரை நம்பி வீட்டை விடுறது?"

"சரி... வேலைக்காரி வச்சுக்குவம். அதுக்காக...." குறுக்கிட்டான் தியாகு.

"ஆமா வேலைக்காரி வச்சா ஆயிரம் ரெண்டாயிரம்னு செலவு போகுமே? அத விடுங்க. நமக்குக் கொழுந்த குட்டின்னு வராதா? இதெல்லாம் யார் பாத்துக்கிறது? எல்லாத்தையும் யோசிச்சா அக்கா கலியாணம் பண்ணாம இருக்கிறதுதான் நல்லது!" உணர்ச்சிவசப்பட்டு மேசையில் அடித்துக் கூறினாள் ரமா.

உஷாவின் கண்கள் நீரைச் சொரிந்தன. தியாகு ஊமையாகிப் போனான்.

# கையேந்தல்

ஞாயிற்றுக்கிழமையாதலால் கணபதி வாத்தியாரும் அந்தத் தோட்ட பாடசாலையில் தனக்காகக் கொடுக்கப்பட்டிருந்த அறையிலிருந்து வெளியேறினார்.

கதிரவனும் தனது செங்கதிர்களை பாய்ச்சி பனித்துளிகளை ஜொலிக்க விட்டுக் கொண்டிருந்தான். பசுமையான தேயிலை செடிகளும், அதனை சேலையெனச் சுற்றியிருந்த மலைத் தொடர்களும், அந்த மலைத் தொடர்களின் உச்சி விளிம்பில் வரிசையாக வளர்ந்து அணிவகுப்பது போல் இருந்த உயரமான மரங்களும், அந்த மலை முகடுகளுக்கிடையில் மலையன்னை ஈன்றெடுத்த மகத்தான பேறாகிய அருவிமகள், துள்ளிக் குதித்து ஆனந்தக் கூத்தாடிய அருவிமகளும் கணபதி வாத்தியாரின் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் கணப்பொழுதில் அந்த மகிழ்ச்சி வற்றித்தான் போனது.

தொலைவில் தோன்றிய அந்த இனிய காட்சிகளில் இதயம் இலயித்திருந்தாலும், தம் கண்ணெதிரே தோன்றும் தோட்டத்து லயங்களும், அந்த லயங்களில் தோன்றிய சந்துகளில் வசிக்கும் வெற்றிலை காவி மனிதர்களும், அழுக்குப் படிந்த ஆடைகளில் தோன்றியவர்களும், பீடித்துண்டுகளுக்கு தம்மை அர்ப்பணித்திருக்கும் சந்ததியினரும், தலைவாரிப் பூச்சுடா மங்கையரும், அழுக்குத் துணியைக கூட அலட்சியம் செய்திருந்த சிறுவர்களும், மூக்குக் கழிவைக் கூட சுவை அறியும் குழந்தைகளும், மலசல கூடத்துக்கும், மாட்டுத் தொழுவத்துக்கும் நடுவில் அமைந்திருந்த சமையல் குடிசைகளும் கணபதி வாத்தியாரின் மனதைப் பிசைந்து எடுத்தன.

அவரது கண்கள் மீண்டும் அருவி மகளை நோக்கியது. ஆனந்தக் கூத்தாடிய அவள், தனது வயிற்றிலடித்துக்கொண்டு கதறுவது போல் தோன்றியது அவருக்கு.

அந்தச் சோகங்களையெல்லாம் ஒரு பெரு மூச்சாக வெளியிட்ட கணபதி வாத்தியார், தனது நண்பர் ஒருவரை சந்திக்க பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தார். சிறிது தூரம் சென்றதும் சிறுவர்கள் சிலரும் அந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

சீப்பு அறியாத தலைகளுடனும், நீர் அறியா முகங்களுடனும், செம்மஞ்சள் பற்களுடனும் வறுமை சின்னமாகிய கிழிஞ்சல் களுடனும் தோன்றிய அச்சிறுவர்கள், பஸ்ஸிலுள்ள பலரது அருவெறுப்புக்குள்ளாகினாலும் கணபதி வாத்தியாரின் கவனத்தை அதில் சில சிறுவர்கள் கவர்ந்த காரணம், அவர்கள் தன்னிடம் கல்வி பயிலும் மாணவர்கள். மேலும் அந்தத் தோட்டத்தில் வசிக்கும் சிலரின் வாரிசுகள்.

கணபதியால், அலங்கோலத்தில் இந்த அச்சிறுவர்களிடம் எதுவும் கேட்கத்தோன்றவில்லை.

சுத்தத்தைப் பற்றியும், சுகாதாரத்தைப் பற்றியும் தான் இவர்களுக்கு போதித்தது எல்லாம் இப்படி பாழாகுகின்றதே என நெஞ்சை பற்றிக் கொண்டார்.

இவர்களது இந்த நிலமைக்கு வறுமை எப்படி காரணமாகும்? தலை வாருவதற்கும், குளிப்பதற்கும், ஆடைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுவதற்கும் அதனை கிழியாமல் பாதுகாத்துக் கொள்வதற்கும் ஒருவனுக்கு எவ்வளவு பணம் வேண்டும்?

கட்டுக் கட்டாக உறிஞ்சி தள்ளும் பீடியையும், கடனுக்காகவாவது கால்போத்தல் சாராயத்தையும், கைநிறைய வெற்றிலை, பாக்கு, புகையிலை என எந்நேரமும் வாய்க்குள் அடக்கிக் கொள்வதையும் நிறுத்திவிட்டு சத்தான உணவுகளையும், ஆரோக்கிய வாழ்வையும் ஏற்றுக் கொள்ள இவர்களுக்கு எவ்வளவு தான் பணம் வேண்டும்?

இதுவும் ஒருவகை வறுமைதான். ஆனால் பொருளாதார வறுமை அல்லவே..! அறிவாதார வறுமை அல்லவா? அறியாமை அல்லவா?

கணபதியின் மனம் பலவித எண்ணங்களால் திணறிக் கொண்டிருந்தபோது அந்த சிறுவர்களும் ஓரிடத்தில் இறங்கிக் கொண்டார்கள்.

அது ஒரு நீர்வீழ்ச்சியை அண்டிய பகுதியாதலால், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், உள்நாட்டு உல்லாச வாசிகளும், தனவந்தர்களும் வந்து, மலையகத்தின் இயற்கை வனப்பையும், மலையன்னையின் அருவிமகளையும் கண்டு இரசிப்பதற்கு வசதியாகச் செய்யப்பட்டு இருந்தது.

அப்படிப்பட்ட இடத்தில் இந்தச் சிறுவர்களுக்கு என்ன வேலை இருக்கப்போகிறது?



**சண்முகராஜா**

கணபதி வாத்தியாருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பார்க்க ஆவலாகவும் இருந்தது. உடனே தானும் அந்த இடத்தில் இறங்கிக் கொண்டார்.

ஆங்காங்கே காணப்பட்ட மரநிழல்களிலும், கற்பாறைகளிலும், சாலையோரத் திண்ணைகளிலும் என குடும்பமாகவும், இளைஞர் குழுவாகவும், கணவன்- மனைவியாகவும், காதலன்- காதலியாகவும், வெளிநாட்டவர்களும், உள்நாட்டவர்களும் அந்த நீர்வீழ்ச்சியை இரசித்துக் கொண்டோ அல்லது கதைபேசிக் கொண்டோ, ஏதேதோ சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார்.

கணபதி வாத்தியார் அந்தச் சிறுவர்களுக்குத் தெரியாதவாறு மறைந்து கொண்டு அவர்களது நடவடிக்கைகளை அவதானித்தார்.

அந்தச் சிறுவர்களில் சிலர் உள்நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு குடும்பத்திடம் ஒடி கைகளை ஏந்தினார்கள். தங்கத் தமிழால் பணமோ, பொருளோ, தின்பண்டமோ கேட்டுக் கெஞ்சினார்கள்.

அவர்களும் ஏதேதோ கொடுத்துவிட்டு, இரக்கத்தோடு சிறுவர்களைப் பார்த்தார்கள். அந்தப் பார்வையில் முழு மலையகமும் தம்மிடம் பிச்சைகேட்கும் பெருமிதம் இருந்தது.

வேறுசில சிறுவர்கள் வெளிநாட்டு சுற்றுலா வாசிகளிடம் சென்று "பாதர் நோ, மதர்... நோ... மணி பிளீஸ்...." என ஏதேதோ உளறினார்கள்.

அந்த ஆங்கிலேயர்களும் ஏதேதோ கொடுத்துவிட்டு களிப்படைந்தார்கள். அந்தக் களிப்பில் இலங்கை முழுவதுக்கும் பிச்சையிட்டுவிட்ட ஏளனம் இருந்தது.

எஞ்சியிருந்த சிறுவர்கள் ஒருமரத்தின் நிழலில் மறைவாக அமர்ந்து ஓர் இன்பமயமான புதிய உலகில் சஞ்சரித்திருந்த ஒரு காதல் ஜோடியிடம் சென்று கையேந்தினார்கள்.

புதிய கனவு உலகில் சிறகடித்திருந்த அவர்களுக்கு, தம்மிடம் இந்த உலகமே கையேந்துகிறது போன்று இருந்தது.

கணபதி வாத்தியாரால் அதற்கு மேலும் அங்கு நிற்க முடியவில்லை. மெல்ல நகர்ந்தார்.

அவரது காதுகளில் அந்த நீர் வீழ்ச்சியின் பேரிரைச்சல் மலையகத்தின் மரண ஓலமாக எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

# தேடல்

ஆதவனின் அனல்கரங்கள் கொதிப்பாக இருக்கும் மத்தியான வேளையில்தான் 'முரசு' திருமலை நகருக்கு வந்து சேர்வாள். வியாழக்கிழமை எப்போது வரும்? முரசு எப்போதுவரும்? என ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வாசகரில் ஆனந்தனும் ஒருவன்.

வெயிலின் தாக்கத்தையும் பொருட்படுத்தாது தினமுரசை வாங்குவதற்காகக் கடைக்கு வந்தான்.

"முரசு ஒன்று!" என கடைக்காரரிடம் பன்னிரண்டு ரூபாவைக் கொடுத்து முரசை பெற்ற ஆனந்தன், கடையில் நின்றவாறே எல்லாப் பக்கங்களையும் மேலெழுந்த வாரியாக பார்த்துக் கொண்டிருந்தான்.

"வீட்டையும் கொண்டு போய் வாசிக்க கொஞ்சம் வை மச்சான்!" என்றவாறு அவனது நண்பன் சுரேன் வந்து நின்றான்.

"மச்சான் வீட்டைக் கண்டு பிடிச்சிட்டன்!" என சுரேன் சொன்னதும் ஆனந்தன் இன்பத்தின் எல்லைக்கே சென்றுவிட்டான்.

ஆறு மாதங்களுக்கு மேலாக சுபாவைக் காணாது தவித்துக் கொண்டிருந்த



ஆனந்தன். திடீரென அவன் கண்களில் சிக்காமல் போனவளைச் சல்லடைபோட்டுத் தேடிக்கொண்டிருக்கிறான்.

சுரேன் சொன்ன செய்தி வரண்டுபோன அவனது இதயத்தில் பால் வார்த்தது போலிருந்தது.

"எப்படி மச்சான் சுபாவின் வீட்டைக் கண்டு பிடித்தாய்?" அவசரப்பட்டான் ஆனந்தன்.

"சுபாவின்ரை வீட்டையில்லை. சுபாவோடை ரியூசனுக்குச் சேர்ந்து வரும் உமாவின் வீட்டைத்தான் கண்டு பிடிச்சன்!" என சுரேன் சொன்னதும் ஆனந்தனின் முகம் வாடியதை சுரேன் அவதானிக்கத் தவறவில்லை.

"நான் சுபாவின்ரை வீட்டைத்தான் கண்டு பிடிச்சிட்டாய் என நினைச்சு சந்தோசப்பட்டன்..." என சலிப்புடன் கூறினான்.

"இந்தப் பிள்ளையின்ரை வீட்டைக் கண்டு பிடித்தால் சுபாவின்ரை வீட்டைக் கண்டு பிடித்த மாதிரித்தானே?"

"எப்பிடி மச்சான்?"

"லவ் பண்ணத் தெரிஞ்சவனுக்கு இது கூடத்தெரியாதா? உமாவின்ரை வீட்டடியிலை நின்று உமா வெளிய வரும்போது சுபாவின்ரை வீட்டைக்கேட்டு அறியலாந்தானே?"

"இப்பவே போவமா மச்சான்!" என ஆக்கப்பொறுத்தவர்க்கு ஆறப் பொறுக்காதது போல அவசரப்பட்டான்.

"இந்த மத்தியான நேரம் வீட்டைவிட்டு வெளிக்கிடமாட்டினம். பின்னேரம் போய் உமா வீட்டுக்கிட்டை நின்று உமா வரேக்கை கேட்பம். நீ நாலு மணிக்கு வீட்டை வா!" என்றவன் புறப்பட்டுவிட்டான்.

ஆறு மாதங்களுக்கு முன் சிங்கள வகுப்பு ரியூசன் படிக்கப்போன இடத்தில் சுபாவைச் சந்தித்தான்.

வகுப்பிலோ அல்லது வேறு இடத்திலோ இதுவரை சுபாவுடன் ஆனந்தன் கதைத்ததே கிடையாது. வீதிகளில் சுபா ஆனந்தனைக் காணும் போதெல்லாம் குட்டிப் புன்னகை ஒன்றை அவள் தவழ விடுவாள். அதன் அர்த்தம் அனந்தன் சக மாணவன் என்ற ரீதியில் அமைந்த புன்னகையாகவே இருக்கும்.

**மு.கலை**

சுபாவுடன் எத்தகைய பேச்சுத் தொடர்பில்லாத போதும், வகுப்பில் சுபா மற்றவருடன் பழகும்போது அவளது பணிவான பேச்சும், பண்பான நடத்தையும், மென்மையான சிரிப்பும் ஆனந்தனின் மனதைப் பாதித்திருந்தது.

தினமும் வகுப்பில் சுபாவை அவனது கண்கள் தேடும். அவள் வகுப்பில் இல்லாது விட்டால், ஆனந்தனுக்கு அன்று படிப்பில் கவனம் தங்காது. அவளை நினைத்தவாறே இருப்பான்.

அவனை மீறி அவள்மீது பற்றுதல் மலர்ந்தது; வளர்ந்தது.

தனது காதலை அவளுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படுத்த வேண்டும் என எண்ணியிருந்த வேளை, சுபா வகுப்புக்கு வருவதை நிறுத்தியிருந்தாள்.

சுபாவின் வீடு, அவள் பற்றிய ஏனைய விபரங்களை அறிந்திராத ஆனந்தன், அவள் வருவாள்.. வருவாள் எனக் காத்திருந்தான். ஆனால் சுபா வகுப்புக்கு தொடர்ச்சியாக வராமல் இருந்தாள்.

சுபா வகுப்பு வருவதை நிறுத்திய பின் ஆனந்தனாலும் வகுப்புக்குச் சென்று பாடம் படிக்க முடியாதிருந்தது. அவனும் வகுப்புக்குப் போகாது நின்றுவிட்டான்.

'என்றாவது ஒரு நாள் சுபாவைச் சந்திப்பேன். அன்று எனது காதலை வெளிப்படுத்துவேன்!' என்று நம்பிக்கையுடன் அவன் இருந் தான்.

சுபாவின் நினைவுகளுடன் வீடு வந்தவனை அம்மா சாப்பிட அழைத்தாள்.

'சுபாவின் வீட்டைக் கண்டு பிடித்துவிட வேண்டும். பின்னேரம் எப்படியாவது கண்டு பிடித்துவிடலாம். கண்டு பிடித்தபின்தான் சாப்பிடவேண்டும்!' என அவன் மனது எண்ணியதால், சாப்பிட அம்மா பல தடவைகள் கேட்டும் "பசிக்கவில்லை" என்றவன், கட்டிலில் விழுந்தான்.

'சுரேனிடம் செல்லும் வரை தினமுரசைப் பார்ப்போம்,' எனக்கையிலெடுத்து அதன் கடைசிப்பக்கத்தை பார்வையிடத்திருப்பினான்.

உலக அதிசயங்கள்-அழகிய பலவர்ணங்களில் கண்களைக் கவரும் விதங்களில் இருந்தது. அதன் கீழ் ஆனந்தனின் பார்வை சென்றபோது அவன் இதயம் குண்டு வைத்தது போல வெடித்துச் சிதறியது.

அகாலமரணமடைந்த சுபா, ஆறாம் மாத நினைவஞ்சலிக்காகக் கொடுக்கப்பட்ட அறிவித்தலில் புகைப்படமாக சிரித்துக் கொண்டிருந்தாள்.

ஆனந்தனின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரில் அவனது காதல் நனைந்து கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



# இலக்கிய நயம்

# போகவிடு

**பா**தை
வெறுமையாக கிடக்கிறது!

அவள் மட்டும்
பொறுமையாக
காத்திருக்கிறாள்!

அந்தப் பாதையில்
அவன் மட்டும்தான்
நடந்துவர முடியும்!

அந்தப் பாதை
அவனுக்காக மட்டும்!

அவளது
கண்களே விளக்குகள்!

வேறு யாருக்காகவும்
அந்த விளக்குகள்
எரியாது!

காற்று வீசினால்
தீபங்கள் அணையலாம்!

எந்த புயலிலும்
கண் விளக்குகள்
அணையாது!

பாதையில்
அவன் வரும்வரை
எரிந்தபடி இருக்கும்!

விளக்குகள்
எண்ணெய்யில் எரிகின்றன!

அவள் விழிகள்
கண்ணீரில் எரிகின்றன!

விளக்குகளின்
திரிகளில் தீ!

அவள் கண் விளக்கில்
மனம்தான் திரி!
சோகம்தான் தீ!

காதலுக்கு
இன்பத்தை விட
துன்பம்தான் உரம்!

காதலிக்கும்போது
வலிதான் அதிகம்!

அவனைக்
காணாதபோதும்
இதயம் வலிக்கும்!

அவனுக்காக
காத்திருக்கும்போதும்
இதயம் வலிக்கும்!

சந்தித்து மறுநாளுக்காக
விடை பெறும்போதும்
இதயம் வலிக்கும்!

இந்த வலிகள்
இல்லையானால்
காதலில் ஏது
வசீகரம்!

போரிலே
விழுப்புண்
வீரத்தின் அத்தாட்சி!

காதலில் வலிகள்
காதல்
ஆழத்தின் அத்தாட்சி!

விழுப்புண் படாத
வீரர் இல்லை!

இதயம் வலிக்காத
காதலர் இல்லை!

போரிலே
இரத்தம்!

காதலிலே
கண்ணீர்!

போரிலே
ரணம்!

காதலிலே
சோகம்!

போரிலே
பலி!

காதலிலே
வலி!

இவையெல்லாம்
பிரிக்கப்பட முடியாதவை!

வாழ்க்கையும், காதலும்
தோன்றிய
காலம் முதலே
பிரிக்க முடியாதவை!

இரவு இன்றி
பகல் இல்லை!

சோகம் இன்றி
காதல் இல்லை!

அவள் இதயம்
இப்போது
சோகத்தால் நிரம்பியிருக்கிறது!

அவள் தேகம்
இப்போது
தாபத்தால்
ஏங்கியிருக்கிறது!

காதல் என்னும்
மதுக்கோப்பையில்
காமம் ததும்புவது
சுகம்! இதம்!

காதலே இல்லாத
வெறும் காமம்
நரகம்! நாசம்!

அவளுக்கு
அவன் வேண்டும்
பற்றிக் கொள்ள!

அவனுக்கு
அவள் வேண்டும்
படர்ந்து கொள்ள!

யார்மீது வேண்டுமானாலும்
பற்றிக் கொள்வதும்
படர்ந்து கொள்வதும்
வெறும் காமம்!

தாகம் எடுப்பதற்காக
சாக்கடை நீரை
குடிக்கவா முடியும்!

அவனுக்கு அவள்
அவளுக்கு அவன்!

நேசத்தோடு
பரிமாற வேண்டும்!

நேசத்தோடு
பசியாற வேண்டும்!

உனக்குள் நான்
எனக்குள் நீ!

இரண்டறக் கலந்து
இன்பத்தின் உச்சியில்
இளைப்பாற வேண்டும்!

உயிருக்குள் உயிராகி
உணர்வுக்குள் உணர்வாகி
உடலுக்குள் உடலாகி
உன்னதம் காண்கையில்
இதய வலிகள் யாவும்
இறங்கி ஓடிப்போகும்!

காதல்-மனமொத்த
காமத்தில்
சங்கமிக்கிறது!

சங்கமம்
இல்லையெனில்
சந்தோசம் இல்லை!

கடலில் கலக்கத்தான்
நதி
வேகமாக ஓடுகிறது.

பூமியில் கலக்கத்தான்
மழை
வானத்தை
பொத்துக்கொண்டு
கொட்டுகிறது!

ஒன்றில் ஒன்று
கலக்காது
புதியது பிறக்காது!

புதியது இல்லையெனில்
பூமி சிறக்காது!

பூமி சிறக்க
காதல் செய்!

பூமி சிறக்க
காமம் செய்!

காதலோடு
காமம் கலக்க,
ஞானத்தோடு
வாழ்க்கை தழைக்கும்!

அதற்காகத்தான்
அந்த
உன்னத நாளுக்காய்
அவன் வரும்வரை
அவள் காத்திருக்கிறாள்!

அவள் நெஞ்சமோ
பாதையில்
முன்னேறி தேடுகிறது!

கண்களோ
'என்னையும் போகவிடு'
கண்ணாளனை காணவிடு
என்று துள்ளுகின்றன!

அவள் மனதிடம்
ஒரு மனுப்போடுகிறாள்;

"நெஞ்சே! நெஞ்சே!
நீ செல்லும்போது
விழிகளையும்
வழித்துணைக்கு
அழைத்துப் போய்விடு!
இல்லையெனில்
இவை என்னை
தின்று விடும்!"

"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே
-இவையென்னைத்
தின்னும் அவர்காண லுற்று"

*அதிகாரம்: 125 குறள்: 1244*

தருவது ரசிகன்

# சிந்தியா பதில்கள்

❖ **கொசோவோ பிரச்சனையில் அமெரிக்காவின் நிலைப்பாடு?**

பி.அசோக், பதுளை.

ஆடுகள் நனையுதென்று....

○■

❖ **போலிச் சாமியார்கள் பெருகி வருகிறார்களே! இதற்கு யார் காரணம்?**

என்.நாகலட்சுமி, யாழ்ப்பாணம்.

நாம்தான் காரணம்!

இரண்டு டாக்டர்கள் இருந்தனர். ஒருவர் அனுபவசாலி. மற்றவர் புதியவர். இருவரும் ஒரு பெண்ணுடைய உடல் நிலையைச் சோதிக்க அவளுடைய வீட்டுக்குப் போனார்கள்.

அவளைச் சோதிக்க தெர்மாமீட்டரை எடுத்த பெரிய டாக்டர் கைதவறி அதனைக் கீழே போட்டு விட்டார்.

உடனே அதனைக் குனிந்து எடுத்து, சோதித்து மருந்து எழுதிக் கொடுத்தார். "நீங்கள் நிறைய சாக்லெட் சாப்பிடுகிறீர்கள். அதைக் குறைத்துக் கொண்டால் சரியாகி விடும்!" என்று அறிவுரை கூறினார்.

வழியில் புதுடாக்டர் கேட்டார்: அந்தப் பெண் நிறைய சாக்லெட் சாப்பிடுவது எப்படித் தெரியும் டாக்டர்?"

பெரிய டாக்டர் கூறினார்: "தவறி விழுந்த தெர்மாமீட்டரை எடுப்பதற்கு கீழே குனிந்த போது நிறைய சாக்லெட் பேப்பர்கள் கிடப்பதைப் பார்த்தேன்."

அடுத்த வீட்டுக்குப் போனதும், அங்கிருந்த பெண்ணைப் பரிசோதிக்குமாறு புது டாக்டரிடம் கூறினார் பெரிய டாக்டர்.

உடனே புது டாக்டர் தெர்மாமீட்டரை கீழே தவறவிட்டார். பின்னர் குனிந்து எடுத்தார். அந்தப் பெண்ணை பரிசோதித்துவிட்டு; "பக்தி விஷயங்களில் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது!" என்று கூறினார்.

பெரிய டாக்டருக்கு எதுவும் புரியவில்லை. வெளியே வந்ததும் புது டாக்டரிடம் "ஏன் அப்படி அசட்டுத்தனமாக உளறினாய்?" என்று கேட்டார்.

அதுக்கு புதிய டாக்டர் கூறினார்! "அவளுடைய கட்டிலுக்குக் கீழே ஒரு சாமியார் ஒளிந்திருந்தார்!"

○■

❖ **துன்பங்களே இல்லையானால் எப்படி இருக்கும் சிந்தியா?**

எ.ஃப். முனாஸ், கல்முனை.

"வாழ்வு குறுகியது. துயரங்கள்தான் அதனை நீண்டதாக உணர்த்துகின்றன!" என்று எங்கேயோ படித்தது தான் நினைவுக்கு வருகிறது!

○■

❖ **கமலின் 'ஹேராம்' ஒப்பனை 'மருத நாயகம்' போலத் தெரிகிறதே! (சென்ற வாரம் நீங்கள் பிரசுரித்த படம்)**

கு.ஏபிரகாம், நீர்கொழும்பு.

வளர்த்ததாடி, வளர்த்த தலைமுடி இரண்டையும் 'ஹேராமு'க்கும் ஜோராகப் பயன் படுத்துகிறார்.

○■

❖ **திறமை இருந்தும் வறுமையில் வாடுபவர்கள் பலர் இருக்கிறார்களே. திறமைசாலிகளுக்கு மரியாதையே கிடையாதா?**

மு.குணராஜ், மட்டக்களப்பு.

உண்மைதான்!

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காஸோ சாகும்வரை வறுமையோடு போராடினார். அவரும் அவருடைய நண்பர் ஜேக்கப் என்னும் கவிஞரும் ஒரு சிறிய அறையில் தங்கியிருந்தனர். அந்த அறையில் ஒரே ஒரு கட்டில். கவிஞர் ஜேக்கப் கடையொன்றில் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்தார்.

பிக்காஸோ இரவு முழுவதும் ஓவியம் வரைந்தபடி இருப்பார். காலையில் கவிஞர் எழுந்ததும் தரையில் கால்வைக்க முடியாதவாறு ஓவியங்கள் நிறைந்து கிடக்கும். வேறு வழியில்லாமல் அந்த ஓவியங்கள்மீதே கால் வைத்து நடந்து போவார்.

ஓவியங்களை அடுக்கிவைக்க வேறு இடம் இல்லாததால் பிக்காஸோவால் எதுவும் கூற முடியாது.

இவ்வாறு பிக்காஸோ வரைந்த ஓவியங்கள் பலவற்றில் நண்பரது காலடி இருந்தது.

பிக்காஸோ இறந்த பிறகு அவருடைய ஓவியங்கள் பல கோடிகளுக்கு விற்பனையாகின. காலடிகளைத் தெரியாது மறைக்க பெரிய ஓவியர்கள் பலர் பணிக்கு அமர்த்தப்பட்டனர். அதற்காகவே பல கோடி செலவிடப்பட்டது.!

○■

❖ **சுதந்திரமான தேர்தலை நடத்தாமல் தடுக்க ஐ.தே.கட்சி சூழ்ச்சி செய்வதாக தேர்தலுக்கு முன்னரே பொ.ஐ.முன்னணி கூறியதே?**

எம்.சதானந்தன், கொழும்பு-06.

ஆட்சியில் இருப்பது தமது கட்சிதான் என்பதை பொ.ஐ.முன்னணிக்காரர்கள் அடிக்கடி மறந்து போகிறார்கள்! சூழ்ச்சிகளைத் தடுக்க வேண்டியதுதானே?

○■

❖ **மடு தேவாலயப் பகுதியில் படையினர் நிலைகொண்டதை தமிழ்க் கட்சிகள் ஏன் கண்டிக்கவில்லை?**

எஸ்.குமார், வவுனியா.

கண்டித்துத்தான் யார் கண்டு கொள்ளப் போகிறார்கள்?!

○■

❖ **தமிழ்க் கட்சிகள் கூடிப் பேசுகின்றனவே?**

ஆர்.விமலதாஸ், கொழும்பு-10.

கூடிப்பேசலாம். கூட்டு நிலைக்குமா?

○■

❖ **'இந்திய வம்சாவளி பேரணி' பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

கு.தேவநாயகம், ஹட்டன்.

பத்திரிகை ஒன்றில், 'பேரணியல்ல; பேரனின் அணி!' என்று நயமாகக் கிண்டலடித்திருந்தனர்.

○■

❖ **'படையப்பா' எப்போது பாயகிறார்?**

சி.சுகந்தன், வத்தளை.

ஏப்ரல் பத்தாம் திகதி!

○■

❖ **தற்பெருமை பேசுபவர்கள் பற்றிக் கூறும் பார்க்கலாம்?**

ஆர்.வானதி, கண்டி.

விக்டோரியா இங்கிலாந்து ராணியாக இருந்தபோது, க்ளாஸ்டோன் என்பவர் பிரதமராக இருந்தார்.

அவர் ஒரு முறை பொருட்காட்சி காணச் சென்றார். அங்கு பழைய பிரபு ஒருவரது ஓவியத்தைப் பார்த்தார். அதனை வாங்க விரும்பி விலை கேட்டார். ஆயிரம் டொலர்கள் என்றதும் வாங்காமல் விட்டு விட்டார்.

கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் ஒரு பெரிய பணக்காரரின் விருந்தில் க்ளாஸ்டோன் கலந்துகொண்டார். அங்கே அதே ஓவியத்தைப் பார்த்தார்.

அந்த ஓவியத்தை அவர் இரசிப்பதைப் பார்த்த பணக்காரர், "இந்த ஓவியத்தில் இருப்பவர் என் கொள்ளுத் தாத்தாவின் சகோதரர். எலிசபெத் ராணியாக இருந்த போது, இவர் பிரதமராக இருந்தார்!" என்று பெருமையாகக் கூறினார்.

உடனே க்ளாஸ்டோன் குறும்பான குரலில் கூறினார்; "என்னிடமும் ஆயிரம் டொலர்கள் இருந்திருந்தால் இவர் என்னுடைய கொள்ளுத்தாத்தாவின் சகோதரர் ஆகியிருப்பார்!"

○■

❖ **தவறைச் செய்து விட்டு வந்து, "சூழல் அப்படி; நாய் வேசம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும்?" என்று கூறுகிறானே என் நண்பன்?**

அ.ஜெயரத்னம், வத்தளை.

"அது என்ன குரைப்பது? கடிக்கக் கூடாதா? நாயிடம் கூட வாய் வீரத்தைத்தான் பின்பற்ற வேண்டுமா?!" என்று கேளுங்கள்.

○■

❖ **சிந்தியா! இரண்டு பேரோ மூன்றுபேரோ இரகசியத்தைக் காக்க முடியாது என்று கூறுகின்றனர். தப்பித் தவறி மூன்று பேரும் ஒரே இரகசியத்தை அறிந்தால் என்ன செய்வது?**

வ.கருணா, திருமலை.

இரண்டுபேர் இறக்க வேண்டியதுதான்! ஹி.ஹி.ஹி.

○■



'ஹேராம்' படத்தில் கமல்



'படையப்பா'வில் சிவாஜி-ரஜினி

❖ **'படையப்பா'வில் ரஜினியின் ஸ்ரைல் என்ன?**

எம்.நவ்ஃப்தீன், கம்பளை.

சுருட்டு புகைப்பது! தோள் துண்டை ஸ்ரைலாக வீசிப்போடுவது!

○■

❖ **கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல் எப்போது நடக்கும்,**

பி.சந்திரசேகர், மட்டக்களப்பு.

அரசாங்கத்திற்கு அதற்கான தேவை ஏற்படும்போது!

○■

ஸ்போர்ட்ஸ்

# போனது முதுகு வலி

**போ**ட்டிகளில் விளையாடுவதற்குதான் 90 சதவீதம் உடல் நலத் தகுதியுடன் இருப்பதாகவும், ஷார்ஜா போட்டிகளில் விளையாடுவது குறித்து முடிவு செய்யவில்லை எனவும் இந்திய கிரிக்கெட் வீரர்



சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது சச்சின் முதுகுவலியால் அவதிப்பட் டார். அதற்காக சமீபத்தில் இங்கிலாந்து சென்று சிகிச்சை பெற்று வந்தார்.

சிகிச்சைக்குப் பின் மும்பை வான்ஹடேஸ்டேடியத்தில் 20 நிமிடப் பயிற்சி பெற்ற டெண்டுல்கர், நிருபர்களிடம் பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது:

"இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் துங்கர்பூரிடம் எனது உடல் நிலைத் தகுதி பற்றித் தெரிவிப்பேன். துங்கர்பூர் பின்னர் முடிவு செய்து ஷார்ஜா போட்டியில் பங்கேற்பதைப் பற்றி அறிவிப்பார்.

காயம் காரணமாக 6 கிலோ எடை குறைந்துள்ளேன்," என்றும் டெண்டுல்கர் தெரிவித்திருந்தார்.

இந்தியாவில் நடைபெற்ற 3 நாடுகளுக்கிடையிலான போட்டி முடிந்த பின்னர் ஷார்ஜா செல்லும் இந்திய அணி விபரம் அறிவிக்கப்பட்டது. இந்தப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கரின் பெயர் இல்லை.

டெண்டுல்கருக்கு நிறைய ஓய்வு தேவை என்பதால் அணியில் இடம்பெறவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

# முதலாவது உலகக் கோப்பை

**வ**ருகின்ற மே மாதம் 14ம் திகதி 7வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் தொடங்குகின்றன. உலகக் கோப்பை போட்டி தொடங்கிய விதம் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள் இதோ:

முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி 1971ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் இங்கிலாந்திற்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்றது. எனினும் மற்ற நாடுகளில் இந்த ஒருநாள் போட்டிகள் பரவுவதற்கு சில காலம் பிடித்தது.

பின்னர் 1972ல் மூன்று நாடுகளுக்கிடையேயான முத்தரப்புப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் அவுஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகளுடன் நியூஸிலாந்து விளையாடியது.

இப்போட்டிகளில் வெற்றி காரணமாக 1975ம் ஆண்டு கோடைகாலத்தில் 60 ஓவர் கொண்ட ஒருநாள் சர்வதேச உலகக் கோப்பைப் போட்டித் தொடரை நடத்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய்தது.


இந்தத் தொடரில் அப்போது டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தைப் பெற்ற 6 நாடுகளும் மேலும் 2 நாடுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இங்கிலாந்து தவிர அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் வீரர்கள் நிறைய கவுண்டி போட்டிகளில் விளையாடி வந்ததால் ஒருநாள் போட்டிகளில் அவர்களுக்கு நல்ல அனுபவம் இருந்தது. உலகக் கோப்பைப் போட்டிக்கு முன் இந்தியா ஒருநாள் போட்டிகள் எதுவும் விளையாடியதில்லை.

அதேநேரம் நியூஸிலாந்து நாட்டில் ஒருநாள் போட்டிகள் பெருமளவு வரவேற்பைப் பெற்றிருந்தன. இங்கிலாந்துக்கு வெளியே அங்கீகரிக்கப்பட்ட முதல் சர்வதேச ஒருநாள் போட்டி நியூஸிலாந்திலுள்ள கிறைஸ்ட்சேர்ச்சில் நியூஸிலாந்திற்கும் பாகிஸ்தானுக்குமிடையே 1973ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 11ம் திகதி நடைபெற்றது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் 1975ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி இலண்டனில் உள்ள 'கிரிக்கெட்டின் மக்கா' எனப்படும் லோர்ட்ஸ் மைதானத்தில் முதலாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி தொடங்கியது.

அவர் தான் இவர்



மனோரமா



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 56

"ஆண்டவரே, நீர் எல்லா இனங்களிலிருந்தும் இஸ்ரயேலைத் தெரிந்தெடுத்தீர் என்றும், அவர்களின் முதாதையர் அனைவரிடமிருந்தும் எங்கள் முன்னோரை என்றென்றைக்கும் உம் உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்தீர் என்றும், நீர் அவர்களுக்கு வாக்களித்ததையெல்லாம் நிறைவேற்றினீர் என்றும் என் குலத்தாரும் குடும்பத்தாரும் சொல்லக் கேட்டிருக்கிறேன்...."

இவ்வாறு பாபிலோனின் சூசாநகரிலிருந்து ஆண்டவரிடம் ஒரு வேண்டுதல் குரல்

## தன்னினத்தைக் காக்க ஆண்டவரிடம் வேண்டுகோள்!

எழுந்தது. ஆண்டவருடைய கட்டளைகளைப் புறக்கணித்து, தம் வாழ்க்கையைச் சீரழித்து, பேரழிவை நோக்கி விரைந்து செல்லும் மக்கள் இனத்திலுதித்த ஒரு பெண்மணியின் குரலாக எழுந்தது அந்த வேண்டுதல்.

தனக்கு மட்டும் நேர்ந்த துன்பத்திலிருந்து விடுவிக்குமாறு எழுந்த குரலல்ல அது, தன்னைச் சார்ந்த ஒரு பெரும் மக்கள் சமுதாயத்தைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற வழி காட்டுமாறு ஆண்டவரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோள் அதுவாகும்.

பாபிலோன் நாட்டை நெபுகத்நேசர் ஆட்சி புரிந்த காலத்தில் அவர் யூதாநாட்டின் மீது படையெடுத்தார். யூதாமக்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வாறு அங்கு சென்ற மக்கள் சில காலம் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தனர். இன்னும் சிலகாலம் அமைதி குலைந்து, மன்னரின் விரோதத்தையும் சம்பாதித்தனர். இருப்பினும் ஆண்டவர்மீது அசையாத நம்பிக்கை வைத்திருந்த-தானியேல் போன்றோர் ஆட்சி பீடத்திலிருந்த மன்னர்களின் நன்மதிப்பைப் பெற்றமையினால், யூதா மக்கள் ஓரளவு கௌரவமாக வாழ வழியேற்பட்டது.

பாபிலோன் நாட்டை பாரசீகர் கைப்பற்றியிருந்த காலத்தில் நடைபெற்ற கதை இது:

அப்போது அர்த்தக்சஸ்தா என்ற பாரசீக மன்னர் ஆட்சி புரிந்தார். அவருடைய நிர்வாக உதவியாளர்களுள் முக்கியமானவராக மொர்தக்காய் என்ற யூதா இனத்தவர் இருந்தார். பென்யமின் குலத்தின் வழிவழி வந்தவர். ஆண்டவர் மீது நீங்காத பற்றுடையவர். நல்லறிவாற்றலும் ஒழுக்கமும் நிறைந்தவர்.



### அம்பலமான சதி

அரசர் அர்த்தக்சஸ்தா, இந்தியாவிலிருந்து எத்தியோப்பியாவரையிலுள்ள நூற்றிருபத்தேழு மாநிலங்களிலும் தனது ஆதிக்கத்தைப் பரப்பியிருந்தார். மன்னருடைய பணிகளில் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தவனும் மன்னரின் நம்பிக்கைக்குப் பாத்திரனாகவும் இருந்தவன் ஆமான் என்பவன். இவன் மன்னர் அர்த்தக்சஸ்தாவை வஞ்சகமாகக் கொன்றுவிடத்திட்டம் தீட்டியிருந்தான். அரண்மனைக் காவலர்கள் இருவரை தன் வசமாக்கிய ஆமான், அரசரைக் கொல்லும் பணிக்கு அவ்விருவரையும் ஏற்பாடு செய்திருந்தான்.

இவர்கள் இருவரும் தமது திட்டம் பற்றி விவாதித்துக் கொண்டிருந்ததை தற்செயலாக மொர்தக்காய் கேட்டார். இருவரையும் பிடித்துக் கொண்டு போய் மன்னர் முன் நிறுத்தினார். கோபம் கொண்ட மன்னர் அவர்கள் இருவரையும் கொன்றுவிடுமாறு கட்டளை பிறப்பித்தார். இத்திட்டத்துக்கு மூல காரணமானவர் யார் என்பதை விசாரித்து அறியுமுன்னரே, மன்னர் அவ்விருவருக்கும் மரண தண்டனை விதித்துவிட்டார்.

தன்னைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியவர்களைப் பிடித்துக் கொடுத்த மொர்தக்காயை மன்னர் வெகுவாகப் பாராட்டி கௌரவித்தார். தனது அரண்மனையில் பெரும் பதவியைக் கொடுத்தார்.

தான் தீட்டிய திட்டத்தைச் சீர்குலைத்து விட்ட மொர்தக்காயைத் தீர்த்துக்கட்ட ஆமான் சந்தர்ப்பத்தைப் பார்த்துக் காத்திருந்தான். ஆனால் மொர்தக்காயோ எத்தகைய தவறும் விடாமல் தன் கடமையைக் கரிசனையோடு கவனித்து வந்தார்.

அர்த்தக்சஸ்தா ஆட்சி பீடமேறிய மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி சூசா நகரில் அமைந்த அரண்மனையில் மாபெரும் விருந்து வைபவங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். தனது ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களின் ஆளுநர்களையும் பிரமுகர்களையும் பிறநாட்டவர்களையும் நண்பர்களையும் விருந்துகளுக்கு அழைத்திருந்தார். பல நாட்கள் விருந்துகளும் விழாக்களும் நடைபெற்றன.

மன்னர் தன்னிடமிருந்த திரண்ட செல்வச்சிறப்பை விருந்தினர்களுக்குக் காட்டி அவர்களுடைய பாராட்டுகளைப் பெற ஏற்பாடுகள் செய்திருந்தார். இதே போல் தனது பட்டத்தரசியான பேரழகி ஆஸ்தீன் என்பவரை அழைத்து, தன் விருந்தாளிகளுக்கு அறிமுகப்படுத்த விரும்பினார். ஆனால் அரசி ஆஸ்தின் அதனை விரும்பவில்லை. மன்னர் பல முறை அழைப்பு விடுத்தும் அரசி விருந்தினர் முன் வரச் சம்மதிக்கவில்லை.

### அரியணை இழந்த அரசி

இத்தனை பிரமுகர்கள் முன்னால் தன்னை அவமதித்த அரசி ஆஸ்தின்மீது கடும் கோபமடைந்தார். தனக்கு மிக நெருக்கமாக இருந்த ஆளுநர்களுடைய ஆலோசனைப்படி ஆஸ்தின் அரசியை அரச அந்தஸ்திலிருந்து அகற்றத் தீர்மானித்தார். பட்டமகிஷி என்ற பட்டம் பறிக்கப்பட்டதுடன் அந்தப்புரத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டார். ஆஸ்தீனுக்குப்பதிலாக வேறோர் பெண்ணைத் தன் மகாராணியாக்க ஏற்பாடு செய்தார்.

மன்னரின் அரியணையை அலங்கரிக்கப் போகும்- அழகும், அறிவும் நல்லொழுக்கமுமுள்ள பெண்ணைத் தேடி மாநிலங்கள் எங்கும் தேடுதல் இடம்பெற்றது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அழகிகள் பலர் சூசா நகருக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்களுள் அழகும் அறிவும், அன்பும் பண்பும் ஒருங்கே அமையப்பெற்ற எஸ்தர் என்பவரும் ஒருத்தி.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அழகிகள் அரண்மனை ஒன்றில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுடைய அழகை மென்மேலும் அழகுறச் செய்வதற்கான ஒப்பனைகள் அவ்வரண்மனையில் செய்யப்பட்டன. அரண்மனை-அந்தப்புர வாழ்க்கை முறைகளும் போதிக்கப்பட்டன. இத்தகைய நிகழ்வுகள் பன்னிரண்டு மாதங்கள் நடைபெற்றன. இதன் பின்னரே மன்னருடைய தேர்வுக்காக அவர்கள் ஒவ்வொருவராக அனுப்பி வைக்கப்படுவர்.

மாநிலங்கள் எங்கணுமிருந்து கொண்டு வரப்பட்ட அழகிகளுள் எஸ்தர் என்ற பேரழகியையே தன் அரசியாக இருக்கக்கூடிய நிலையிலுள்ளார் என்று மன்னர் அர்த்தக்சஸ்தா தேர்ந்தெடுத்தார். திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தையொட்டி ஏழு நாட்கள் விருந்தும் நடைபெற்றது. குடியானவர்களுக்கு வரிச்சலுகைகளும் வழங்கப்பட்டன.

எஸ்தர் உண்மையில் மொர்தக்காயின் வளர்ப்பு மகள்-யூதா இனத்தைச் சேர்ந்தவர் ஆனால், தனது இனத்தை வெளிக்காட்டாமலேயே அந்தப் புரத்தில் வாழ்ந்தார்.

இதே காலகட்டத்தில் ஆமான் எப்படியோ மன்னரின் நன்மதிப்பைப் பெற்றான். மன்னருக்கு அடுத்த மரியாதைக்குரிய ஒருவன் என்ற அந்தஸ்தைப் பெற்றான். நாட்டு மக்கள் அனைவரும் ஆமானைக் கண்டால் தலை வணங்கி மரியாதை செலுத்தவேண்டும், என்று மன்னர் ஆணை பிறப்பிக்கும் அளவுக்கு சூழ்ச்சிகள் செய்தான். மன்னரின் ஆணைக்குட்பட்டு மக்களனைவரும் ஆமானைக் கண்டதும் எழுந்து வணங்கி மரியாதை செய்யத் தலைப்பட்டனர். ஆனால் மொர்தக்காய் மட்டும் இந்த அரசாணைக்குக் கட்டுப்படவில்லை. ஆமானுக்கு எத்தகைய மரியாதையையும் கொடுக்கவில்லை.

### ஆமான் செய்த சூழ்ச்சி

மொர்தக்காயையும் அவர் சார்ந்த யூதா இனத்தவர்களையும் கொன்றொழித்துப் பழி தீர்க்க இதனையே ஒரு சந்தர்ப்பமாக ஆமான் ஆக்கிக் கொண்டான். வேற்றினத்தவனான மொர்தக்கா,

**இராஜகுமாரன்**

அரசரால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் எவற்றையும் மதிப்பதில்லை. நாட்டிலுள்ள யூதா இன மக்களையும் தூண்டிவிட்டு அரசாணைகளை உதாசீனம் செய்ய முயற்சிகளை மொர்தக்கா மேற்கொண்டு வருகிறார் என்று மன்னரிடம் குற்றஞ்சாட்டினான். பல பொய்ச் சாட்சிகளையும் ஏற்பாடு செய்து தனது கூற்றை மன்னரிடம் நிரூபிக்கலானான்.

"மன்னரிடும் ஆணையை மீறுபவர்கள் அனைவரும் அரசத்துரோகிகள். அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை வழங்கப்படும்!" என்று ஓர் அரசாணையை அரசர் பிறப்பித்தார். ஆமானே இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தான். மன்னரும் அவ்வாறு ஆணை மீறுபவர்களைத் தண்டிக்கும் முழுப் பொறுப்பையும் ஆமானிடமே ஒப்படைத்தார்.

அர்த்தக்சஸ்தா மன்னருடைய ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட நூற்றிருபத்தேழு மாநிலங்களுக்கும் அரசாணையின் நகல்கள் அனுப்பப்பட்டன. இதன்படி ஆங்காங்கே இருந்த யூதாமக்கள் அனைவரையும் ஒரே வேளையில் கைது செய்து, ஒரேநாளில் கொன்றொழிக்க ஆமான் விரிவான திட்டம் வகுத்தான்.

ஆமான், தன்னை மட்டுமல்லாமல் தன் இன மக்கள் அனைவரையும் கொன்றொழிக்கத் தீட்டிய கொடுமையான திட்டம் மொர்தக்காயை ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியது. இத்தகைய திட்டத்தை முறியடிப்பதானால் பட்டமகிஷியாகவுள்ள எஸ்தரின் துணையே முக்கியமாகத் தேவைப்படும். ஆகவே அரசி எஸ்தருக்கு மொர்தக்காய் தகவல் அனுப்பினார். எஸ்தரும் அரசாணையை அறிந்து மிகவும் துயருற்றார்.

பாபிலோன் நாட்டை ஆண்ட பாரசீக மன்னர்களின் வழக்கப்படி, மன்னர் தன்னை வந்து காணும்படி கட்டளையிடாமல் எவரும் அவர் முன்னிலை செல்ல முடியாது. ஆகவே, தன் இனத்தாரை அழிவிலிருந்து பாதுகாக்க ஒரேயொரு வழிதான் இருக்கிறது. ஆண்டவர் ஒருவரே தம்மக்களைக் காப்பதற்கான வழியினைக் காட்ட வல்லவர் என்பதனால், எஸ்தர் ஆண்டவரிடம் மேற்படி விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 54 விடை** ☛ பாரசீக இனத்தைச் சேர்ந்தவர்

**பரிசு பெறுவோர்:**

1. பி.எஸ். மணியம், 122, மெல்ல கொல்ல, இறத்தோட்டை.
2. கே. பிரசாந்தி, தம்பட்டை-02, தம்பிலுவில்.
3. பாத்திமா அஸ்லினா நசீர், 662/2, பிரதான வீதி, மாத்தளை.
4. வி. வினோத்குமார் (ஷியாந்), பனங்கட்டிக் கொட்டு, மன்னார்.
5. யூ. கிளன்டன், புனித வளனார் வித்தியாலயம், தன்னாமுனை, செங்கலடி.

**திருமறை 56 வினா:-** மன்னரைக் கொல்ல சதித் திட்டம் தீட்டியது யார்?

ஏப். 17க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:


**திருமறை 56—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## செம்மணி ஆராய்ச்சி




## தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடல்




தமிழ்க்கட்சிகளின் எதிர்ப்பு நிலவரம்

## இரகசியமாய் ஒரு கடிதம்

**மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் எதுவும் இம்முறை அரசை ஆதரிக்கவில்லை. அது பற்றி அம்மையார் விளக்கம் கேட்டால், எவ்வாறு பதில் எழுதுவார்கள்?**

மாண்புமிகு அதி உத்தமருக்கு;

நாம் இம்முறை உங்கள் அணிக்கு உதட்டால் ஆதரவளிக்காதுவிட்டாலும், வேறு எவருக்கும் வாக்களிக்குமாறு கூறாதிருந்தோம் என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறோம்.

உங்களுக்கே எங்கள் பரிதாப நிலை தெரிந்திருக்கும். நேற்றுவரை எங்களில் வேறானதாக இருந்து, இன்று எங்களில் ஒன்றாகிவிட்ட கூட்டணி, உள்ளூராட்சித்தேர்தலில் கொழும்பில் உங்களை ஆதரித்து அறிக்கை வெளியிட்டதை மறந்திருக்க மாட்டீர்கள்.

அந்த உன்னதமான காரியத்தால் உங்களுக்கு விழவேண்டிய தமிழ் வாக்குகள்கூட மறுபக்கமாய் விழுந்து, உங்கள் அணிக்கு சேதத்தை ஏற்படுத்திய சோகத்தை மறந்திருக்க மாட்டீர்கள். இம்முமறையும் அவ்வாறு நிகழக்கூடாது என்பதற்காகவே உங்களை ஆதரித்து அறிக்கைவிடவில்லை என்ற இரகசியத்தை உங்களுக்கு மட்டும் கூறிவைக்க விரும்புகிறோம்.

உங்களுக்கு பல சந்தர்ப்பங்களில் நாங்கள் உதவியிருக்கிறோம். நாட்டில் என்ன கொடுமை நிகழ்ந்தாலும் ஒரு வார்த்தை.... ஒரே ஒரு வார்த்தை, சும்மா ஒரு சம்பிரதாயத்துக்காகக்கூட உங்களை கண்டிக்கவோ, எதிராகப் பேசவோ எம் மனம் ஒப்பியதில்லை.

பொதுவாக அரசென்றோ படையென்றோ, பொதுஜன முன்னணி என்றோ கூறுவோமே தவிர, தங்கள்மேல் விமர்சனம் வெளியிட்டதேயில்லை. பல கட்சிகளாக இருப்பினும் இந்த விடயத்தில் பொதுக் கொள்கை ஒன்று நம்மிடம் இருப்பது கின்னஸில் பொறிக்கப்பட வேண்டிய விஷயம்.

எது எப்படியிருப்பினும், 'எங்கிருந்தாலும் வெல்க, எல்லா சபையிலும் வெல்க' என்றே எங்கள் விசுவாசமான இதயங்கள் துடித்துக் கொண்டிருக்கும் என்பதை மறக்க வேண்டாம்.

என்றும் கீழ்ப்படிவுள்ள,

தமிழ்க்கட்சிகள்.

**காதிலை பூ கந்தசாமி**




படிப்பகம்

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)




பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331


# பயணம்






SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


➡ உலகெங்கணும் நவீன போக்குவரத்துச் சாதனங்கள் மலிந்து விட்டன. இருப்பினும் குதிரை வண்டி ஒன்றில் குடும்பத்துடன் உலக வலம் வரப் புறப்பட்டுவிட்டார் ஸ்கொத்லாந்துக்காரரான டேவிட் கிராண்ட் என்பவர்.

கிராண்ட், அவருடைய மனைவி, கேற் இவர்களுடைய பிள்ளைகளான ரோர்குயில், எலித் மற்றும் ப்பியான் ஆகியோரே இக் குதிரை வண்டியில் உலகப் பயணத்தைத் தொடங்கியுள்ளனர்.

இப்பயணத்துக்காகவே ஸ்கொத்லாந்திலுள்ள கிரீப் என்ற ஊரில் இந்தக் குதிரை வண்டியை வடிவமைத்தனர்.

வீதி மார்க்கமாகப் பயணம் செய்யக் கூடிய நாடுகளைக் குதிரைவண்டியிலேயே கடப்பார்கள். கடல் கடந்து செல்ல வேண்டிய இடங்களை கப்பல்களில் வண்டியையும் ஏற்றிக் கொண்டு செல்வார்கள். இது உலக சாதனைக்கான முயற்சி.

குதிரை வண்டியில் குடும்பமாக உலக வலம் வருவதை எண்ணும்போது, கால் நடையாகவே நீண்ட தூரம் நடந்து உலக சாதனை படைத்தவர்களையும் கூற வேண்டியுள்ளது.

அமெரிக்காவில் ஸ்சிக்கிங் என்ற இடத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் மத்திவு என்பவர், 1897ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் திகதி புறப்பட்டு 1904ம் ஆண்டு வரை நடந்து உலகவலம் வந்ததாகத் தகவல் ஒன்று கூறுகிறது.

ஆர்தர் பிளெஸ்ஸிற் என்ற மற்றுமொரு அமெரிக்கர் எல்லாக் கண்டங்களையும் கடந்துள்ளார். இவர் 1969 டிசம்பர் 25ம் திகதி தனது நடைப்பயணத்தைத் தொடங்கி 26 வருடங்கள் நடந்திருக்கிறார். 261 நாடுகளில் இவர் நடந்த தூரம் 51,500 கிலோ மீட்டர் (32,002 மைல்).

# கண்டு பிடிப்பு



⬇ அண்ட சராசரத்தில் நாம் கண்டும் கேட்டுமிராத எண்ணற்ற விந்தைகள் உள்ளன. நாம் வாழும் பூமியுடன் கூடிய நவ கோள்களில் ஒன்றான குரு என்றழைக்கப்படும் வியாழக்கிரகமே அனைத்திலும் பெரியது.

படத்தில் காணப்படுவது வியாழக்கிரகமல்ல அதனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கும் 16 உபகோள்களில் ஒன்றான 'ஐயோ' எனப்படும் சிறிய கோளாகும். பார்க்கும்போது அழகான இரத்தினக்கல் போல் கவர்ச்சி காட்டும் இந்த உபகிரகத்தில் தென்படும் செம்மை வர்ணங்கள்தான் அதிலுள்ள எரிமலைகள். இவை எப்போதும் கந்தகக் குழம்புகளை கக்கிய வண்ணமுள்ளன.


வியாழக்கிரகத்தின் குறுக்களவு சுமார் 142, 932 கிலோ மீட்டர். பூமியின் குறுக்களவை விட 11 மடங்கு கூடியது. நமது பூமியைப் போல் 1000 பூமிகளை வியாழக் கிரகத்தில் வைக்கலாம்.

'ஐயோ' என்ற துணைக்கோள் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, வியாழனிலிருந்த 422,000 கிலோ மீட்டர் தொலைவில் வலம் வருகிறது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த வானசாஸ்திரி கலிலியோவால் 1610ம் ஆண்டு இத்துணைக்கோள் கண்டு பிடிக்கப்பட்டது.

⬇ வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளில் நாய்களும் பூனைகளும் தங்களுக்குள் நட்பை வளர்த்துக் கொள்வதில் முன் நிற்பவை. ஆனால் ஓரளவு வளர்ந்த பின்னர் இவ்விரண்டையும் நட்புடன் பழக விடுவதில் ஆபத்தும் இருக்கிறது.

நாயோ பூனையோ குட்டிகளாக இருக்கும்போது ஒன்றாகப் பழகவிட்டால், அவை அன்போடு ஒன்றை ஒன்று அனுசரித்துப் போகும். ஒன்றாக உணவுண்டு, ஓரிடத்திலேயே படுத்துறங்கும். இவை விளையாடும்போது பார்ப்பதற்கு வேடிக்கையாகவும் இருக்கும். ஒன்றை மற்றொன்று பகைத்துக்கொண்டு சண்டை பிடிப்பது போலவும் இவை சீறிப்பாய்ந்து, கடித்துக் கட்டிப்புரளும்.

சில வீடுகளில் நாய்க்குட்டிகளுடன் தானும் ஒரு நாய்க்குட்டிபோல் தாய் நாயிடமே பால் குடிக்கும் பூனைக்குட்டிகளும் உள்ளன. தாய் நாயும் எந்த வகையிலும் வித்தியாசம் காட்டுவதில்லை.



# எதிரும் புதிரும்

# வசூல்



⬆ கேலிச் சித்திரங்களை, உயிருள்ள பாத்திரங்களாகத் திரை அரங்குகளில் உலாவவிட்டு, உலக மக்களை வியப்புக் கடலில் மூழ்கடித்தவர் வால்ட் டிஸ்னி என்ற அமெரிக்கக் கலைஞர்-திரைப்படத் தயாரிப்பாளர். அவர் இன்று உயிருடன் இல்லை. இருப்பினும் அவர் உருவாக்கி-உயிரூட்டிய பாத்திரங்கள் இன்றும் உலக மக்களுக்கு மகிழ்வூட்டி வருகின்றன.

வால்ட் டிஸ்னியின் கலையகத்தில் (அமெரிக்காவில்) உருவான 'லயன் கிங்' (சிங்க ராஜா) 1994ம் ஆண்டு திரைக்கு வந்தது. படத்தில் காணப்படுவதுதான் படத்தின் கதாநாயகன் சிங்கராஜா. 60 நாடுகளில் இப்படம் திரையிடப்பட்டது. இப்படம் அறுவடை செய்த வசூல் எவ்வளவு தெரியுமா? 76. 615 கோடி டொலர்! நம் மதிப்பில் சொன்னால் வாயைப் பிளப்பீர்கள். 5 ஆயிரத்தி 363 கோடி ரூபாய். இது வசூலில் உலக சாதனை.

இப்படத்தைத் தயாரிப்பதற்கு 600 கலைஞர்கள் 3 வருடங்கள் உழைத்தனர். இந்தப் படத்தில் இடம் பெற்றுள்ள ஓர் இசை வடிவத்தை, பிரபல பொப்பாடகரும், இளவரசி டயானாவின் இறுதிச் சடங்கில் பாடி உலகப் புகழ்பெற்றவருமான எல்டன் ஜோன் பயன்படுத்தி, 1995ல் வெளியான வேறொரு படத்தின் பாடலுக்கு இணைத்துக் கொண்டார். இப்பாடலுக்கும் ஒஸ்கார் விருது கிடைத்திருக்கிறது.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து 17.03.1999



செல்வி கலையரசி சிவகுமாரன் (சிந்து)

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிவகுமாரன்-ராஜலட்சுமி தம்பதியினரின் ஏக புதல்வி கலையரசி தனது இரண்டாவது பிறந்த தினத்தை 17.03.1999அன்று புத்தளம்-இல.35ஏ, ரத்மல்ஜாயவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார்,மாமிமார், சித்திமார்,சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், பாட்டன்மார், பாட்டிமார் மற்றும் உற்றார் உறவினர்கள் மாவைக் கந்தன் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



# புதுமை

படத்தில் காணப்படுவது பஸ் வண்டி என்றா நினைக்கிறீர்கள்? தப்பு. தொடர்ந்து படியுங்கள்.

இசை விழாக்களும் கலைவிழாக்களும் எல்லா நாடுகளிலும் நடைபெறுவதுண்டு. எண்ணற்ற மக்கள் இவ்விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வார்கள்.

அமெரிக்காவில் ஆண்டு தோறும் 'வுட்ஸ்ரொரிக் இசை மற்றும் கலை விழா பிரமாண்டமாக நடைபெறுகிறது. அமெரிக்கா எங்கும் நடைபெறும் இத்தகைய விழாக்களுக்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல இவ்விழா அமைவதாகக் கூறப்படுகிறது.

நியூயோர்க் பெத்தெல் என்ற இடத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் 17 திகதி வரை இடம் பெற்ற இவ்விழாவில் 3 இலட்சம் முதல் 5 இலட்சம் மக்கள் வரை கலந்து கொண்டனர் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது தேசிய சாதனையாகப் பதியப்பட்டுள்ளது.

இந்த விழாவின் போது பல நூதனமான காட்சிகள் இடம்பெற்றன. ஒரு 'வோக்ஸ்வாகன்' கார்தான் இவ்வாறு தோற்றமளித்தது. மிகுந்த சிரத்தையோடு இதனை அலங்காரப்படுத்தியிருந்தனர்.

பிரசித்திபெற்ற கலைஞர்களும், முன்னணிக்கு வரத்துடிக்கும் இளம் கலைஞர்களும் இணைந்து கலைவிருந்தளிக்கும் கலைவிழா வருடம் தோறும் அமெரிக்காவின் ஒஹையோ மாநில கிளெவ்லாந்தில் மே மாதத்தில் நடைபெறுவதுண்டு.

இதில் உலகனைத்திலுமிருந்து வரும் கலைஞர்கள் பங்கேற்று வருகின்றனர்.


படிப்பகம்

இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாத நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஏப்ரல் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.